# தமிழரசு

1-12-1979 50காசு

அண்ணாமலைப் பல்கலைக்
கழகப் பொன்விழா
சிறப்பிதழ்



FOR STRENGTH & DURABILITY

**CHETTINAD BRAND**

PORTLAND/POZZOLANA CEMENT

Manufactured by:

**CHETTINAD CEMENT CORPORATION LIMITED**

"Catholic Centre"
64. Armenian Street,
Madras-600 001.

Factory:
"Kumararajah Muthiah Nagar"
Puliyur (Karur) Trichy District

Branches at:
Bombay, Bangalore, Calcutta and Ernakulam.

# அரசன் அண்ணாமலை



—புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்

வயலும் ஏரும் மழையும் எருவும்
இருந்தும் என்ன செய்வேன் என்னுமோர்
ஏழைக்கு விதைநெல் ஈந்தான் போல
அரசன் அண் ணாமலை திருநாட் டுக்குப்
பண்டைப் பெருமையும் பதியும் நிதியும்
இருந்தும் வருந்தும் நிலைமை எண்ணி
அறிவின் ஊற்றுத் திறந்தான் அப்பெரு
நிறுவனம் வெல்க நீடுவா ழியவே
அண்ணா மலைபுகழ் விண்ணென விரிக
அன்னோன் மக்களும் சுற்றமும் மற்றும்
கழகம் காக்கும் கணக்கா யர்களம்
வழுவிலா தென்றும் மாணவர் தரமும்
எழிலுறு சீபி இராம சாமியும்
வாழிய பழந்தமிழ் நாடு
வாழிய வாழிய வண்தமிழ் நன்றே



[1955-ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக் கழக் வெள்ளி விழாவின்போது புரட்சிக் கவிஞர் பாடியது]



# இந்த நல்ல நாளில்...

1920-இல் சிதம்பரத்தில் மீனாட்சிக் கல்லூரியையும் அதைத் தொடர்ந்து மீனாட்சி தமிழ்க் கல்லூரி, மீனாட்சி வடமொழிக் கல்லூரி, மீனாட்சி ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி, இசைக் கல்லூரி முதலிய பல கல்லூரிகளை என் தகப்பனார் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் தொடங்கினார்கள். 1929-இல் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் நிறுவப் பெற்றது.

மகாகனம் சீனிவாச சாஸ்திரியார், சர் சாமுவேல் அரங்கநாதன், சர் கே. வி. ரெட்டி, பேராசிரியர் எம். இரத்தினசாமி, சர் ஆர். கே. சண்முகம் செட்டியார், சர் சி. பி. இராமசாமி அய்யர், திரு டி. எம். நாராயணசாமிப் பிள்ளை போன்ற பேரறிஞர்கள் துணைவேந்தர்களாக இருந்து இந்தப் பல்கலைக் கழகம் பெரு வளர்ச்சியடையப் பாடுபட்டிருக்கிறார்கள்.

இப்போது துணைவேந்தராக இருந்துவரும் திரு. பி. எஸ். சோமசுந்தரம் அவர்கள் சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிபதியாக இருந்து புகழ் பெற்றவர்கள்; தமிழ்ப் பண்பாட்டின் சின்னமாக விளங்குபவர்கள். இவர்களுடைய பதவிக் காலத்தில் சட்டக் கல்லூரியும், அஞ்சல் வழிக் கல்வித்துறையும் ஏற்பட்டிருக்கின்றன. மருத்துவக் கல்வித்துறையும் தொடங்க ஏற்பாடுகள் செய்து இந்திய அரசாங்கம், மாநில அரசாங்கம் ஆகியோரின் இசைவு பெறப்பட்டுள்ளது. பல்கலைக் கழகத்தின் வளர்ச்சியில் துணைவேந்தர் அவர்கள் கண்ணும் கருத்துமாக இருந்து வருகிறார்கள்.

ஆரம்பம் முதல் ஒவ்வொரு துறையிலும் சிறந்த மேதைகள், இங்கு பேராசிரியர்களாக இருந்திருக்கிறார்கள். மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாத அய்யர் அவர்கள், மகாமகோபாத்தியாய தண்டபாணிசாமி தீட்சிதர் அவர்கள் - ஏராளமான பெயர்கள் ஒவ்வொரு துறையிலும் பணியாற்றியது இந்த நல்ல நாளில் என் நினைவுக்கு வருகிறது.

இந்திய அரசாங்கமும் தமிழ்நாடு அரசாங்கமும் பல்கலைக் கழக மானியக் குழுவும் இந்த ஐம்பது ஆண்டுகளாக அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் வளர்ச்சியில் அக்கறை காட்டி அவ்வப்போது ஆவன அனைத்தும் செய்து வந்திருப்பதற்கு நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழ்நாட்டு மக்களும் பல்கலைக் கழகத்தின் முன்னாள் மாணவர்களும் தந்துவரும் ஆதரவு மிகவும் பாராட்டத்தக்கது. தொடர்ந்து இந்த ஆதரவு பெருகி, பல்கலைக்கழகம் இன்னும் பல மடங்கு வளர்ச்சி பெறும் என்று நம்புகிறேன்.

இப்போது பல்கலைக் கழகத்தில் உள்ள ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் ஆட்சித் துறையில் பணி புரிந்து வருபவர்களுக்கும் பல்கலைக் கழகத்துடன் தொடர்பு கொண்டுள்ள தமிழ் நாட்டு மக்கள் அனைவருக்கும் இந்தப் பொன் விழா நாளில் என்னுடைய மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



# புனிதப் பணியில் ஈடுபட வாரீர்!

## பேரறிஞர் அண்ணா



(18.11.1967-ல் நடைபெற்ற அண்ணா மலைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆற்றிய பட்டமளிப்பு விழாப் பேருரையின் சுருக்கம்.)

"சமுதாயத்திற்குச் சேவை புரியும் உன்னதமான கடமைக்கு உங்களது உதவியையும் ஒத்துழைப்பையும் நான் விரும்பி வேண்டுகிறேன். இத்தருணத்தில் நீங்கள் கேலிப் புன்னகை புரிந்து கண்சிமிட்டி ''சொல்வது யார்க்கும் எளிது'' என்று தயவுசெய்து கூறி விட வேண்டாம்.

உங்களது வாழ்க்கை வழித்தடத்திலுள்ள இன்னல்களை நான் அறியாதவனல்ல!

உங்கள் மீதுள்ள சுற்றுச் சார்பின் அழுத்தத்தையும் செல்வாக்கையும், 'இல்லை' என்று ஒதுக்கித் தள்ளி விடுபவனும் அல்லன் நான்.

எந்த உலகத்தில் உங்களது வாழ்க்கைப் பயணத்தைத் துவக்க இருக்கிறீர்களோ-அந்த உலகம் உங்களுடைய நம்பிக்கை ஒளியைக் குன்றச்செய்யலாம். உங்கள் உறுதியை உருக் குலைக்கும் தன்மையில் இருக்கலாம்.

உங்கள் வாழ்க்கைப் பயணத்தில் உங்கள் இதயம் படிந்த கொள்கை கோட்பாடுகளுக்கு முற்றிலும் எதிரான பழக்க வழக்கங்களை நேருக்குநேர் சந்திக்க வேண்டிவரும்.

எல்லாவகைக் கொடுங்கோன்மையும் உங்கள்மீது மிரட்டு விழிப் பார்வை செலுத்தலாம்.

அந்தப் பயணத்தில் நீங்கள் எடுத்து வைக்கும் ஒவ்வொரு காலடியும் ஒவ்வொரு போராட்டமாக இருக்கலாம்.

நேர்மைக்குணம் படைத்த நிறைநோக்கர்களையும்கூட உற்சாகம் குன்ற வைத்து, சுலபமும் வசதியுமிக்க குறுக்கு வழியைத் தேர்ந்தெடுக்குமாறு பலவந்தப்படுத்தும் வலிமை மிக்கது இந்தச் சமூகச் சூழ்நிலை என்பதை, நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் அதே நேரத்தில் நாம் ஒன்றை உணரவேண்டும். சமூகத்திற்குப் பணியாற்றும் உள்ளுணர்வு மிக்க ஆடவர்-பெண்டிர் உள்ளடங்கிய அருவியோட்டம் போன்ற தொடர்பான திருக் கூட்டம் இருந்து வருகிறது. அது இந்தப் புனிதப் பணியை வெற்றிகரமாக நடத்துகிறது. மனித சமுதாயத்திற்கு வளமிக்க பலனைத் தந்திருக்கிறது.

சமூகப்பணி என்னும் இந்தத் தத்துவத்தை தமிழர்களாகிய நாம் உச்சிமேல் வைத்து மெச்சத்தகும் வகையில் கடைப்பிடித்துப் பாராட்டியிருக்கிறோம்.

புறநானூற்றில் அந்தக் கருத்தைக் காண்கிறோம்.

உண்டால் அம்மஇவ் வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும் இனிதுஎனத்
தமியர் உண்டலும் இலரே முனிவிலர்
துஞ்சலும் இலர்பிறர் அஞ்சுவது அஞ்சிப்
புகழ்எனின் உயிருங் கொடுக்குவர் பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர் அயர்விலர்
அன்ன மாட்சி அனைய ராகித்
தமக்கென முயலா நோன்தாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே!

நல்லது செய்ய நினைத்திடும் யாரும்-தங்கள் பாதையில் தடைப்படும் கற்களை மக்களில் சிலர் நீக்கியுதவுவார்கள் என்று எதிர்பார்க்கக்கூடாது.

அந்த தடைக் கற்களோடு மேலும் சில கற்களை உருட்டிவிட்டாலுங்கூட மிகுந்த பொறுமையாய் இருந்திடல் வேண்டும்.

''தடைகளைச் சந்தித்துப் பெறும் அனுபவம் மூலமாகவே நமது வலிமை தெளி

வாகும்; மேலும் பலப்படும். பிறகு அந்த வலிமையே தடைகளை வெல்லும் திறனாய் மாறும்'' என்கிறார் அறிஞர் ஆல்பர்ட் சுவிட்சைர்.

பல்வேறு நாடுகளிலுள்ள பிரச்சினைகள் ஒரேமாதிரியான இயல்புடையவை எனினும் நமது நாட்டின் பிரச்னைகளில் வினோதப் பண்பு நேர்ந்திருப்பதோடு தனித் தன்மையும் இருக்கும்!

எங்கோ ஏற்பட்ட கீறல்களிலிருந்து சிக்கல் எழுவது போன்ற தன்மை வாய்ந்த தல்ல நமது பிரச்சினை. அவ்விதம் இருக்கு மாயின், அந்தப் பிரச்னையின் தீர்வுக்கு ஆழ்ந்த கவனிப்பு மட்டும் போதுமானது.

ஆனால் நமது பிரச்சினைகள் இதயத் தில் ஏற்படும் மண்அரிப்பு போன்ற செயலால் ஏற்படுவது.

நமது பணிக்கு வயல்களைத் தேடிப் போகவேண்டிய அவசியமில்லை. அதைவிடக் கடுமையான பணியில் ஈடுபட்டிருக்கின்றோம். இருக்கின்ற தத்துவங்களை வகைப்படுத்தி - தொகைப்படுத்தி - தணிக்கைப் படுத்தும் நிலையில் இருக்கிறோம்.

கலாச்சாரத்தை நாம் வேண்டி நிற்கும் நிலையில் இல்லை. இருக்கிற கலாச்சாரத்தில் காலம் ஏற்படுத்திய சிலந்திக் கூடுகளை அகற்றி-கலந்துவிட்ட கலப்படங்களை நீக்கும் பணியில் நிற்கிறோம்.

சுருங்கச் சொன்னால், நாம் நம்மையே கண்டு கொள்ளவேண்டிய நிலையில் இருக் கிறோம். நமது சிந்தனைக் கட்டடத்தை மீண்டும் சீர்திருத்திக் கட்ட வேண்டிய நிலையில் இருக்கின்றோம்.

கண்ணியமிக்க எல்லாவற்றிற்கும் நாம் ஒரு காலத்தில் காவலர்களாக இருந்தோம். ஆனால் அழிவின் கிருமிகள் பல்கிப் பெருகிட அனுமதித்தோம்!

இன்று நமக்குள்ள பணி தூய காற்றை யும் உதய சூரியனின் ஒளியையும் அனு மதித்து, நமது உண்மையான பழைய உரு வையும் பொலிவையும் அடைய வேண்டும் என்பதே. அத்தகைய பொலிவு மிக்க உரு வந்தான் உலகின் நெடுந்தூர நாடுகளிலும் நிலப் பரப்புகளிலும் நமது புகழைப் பரப் பியது.

நமது இலக்கியமும், கலையும், சிற்பமும் மன்பதை அறிவின் சிறந்த சின்னங்களாய்த் திகழ்கின்றன. ஆனால் அவை இன்று காலம் ஆடிய சூறையாடல்களின் தழும்புகளை ஏற்று நிற்கின்றன. ஆகவேதான் நமது அருமை பெருமைகளைப்பற்றி வெளிநாட்டு சரித்திர ஆசிரியர்களிடம் கேட்கவேண்டிய நிலையில் இருக்கிறோம்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பட்ட தாரிகளே! உங்களுடைய—உங்கள் குடும்பங் களுடைய நன்னிலைக்குப் பாடுபடுவதோடு, சமூகத்திற்கான பணியையும் நீங்கள் செய்ய வேண்டியிருக்கிறது.

பகுத்தறிவு வாதத்தின் ஒளிவிளக்கை ஏற்றிப் பிடிப்பவர்களாக நீங்கள் பணிபுரிய வேண்டியிருக்கிறது.

பகுத்தறிவு வாதம் என்பது அடிப்படை உண்மைகளை-நெறிகளை - மறுப்பது என்பது அல்ல. போலித்தனமான எண்ணத்தையும் செயலையும் அழித்தொழிப்பதுதான் பகுத் தறிவு வாதம்.

முனைப்புடனும்-உறுதியுடனும் நீங்கள் உழைக்க வேண்டும். ஏனெனில் நாம் பல நூற்றாண்டுகளாய் கப்பிவிட்ட சிலந்திக் காடுகளை அகற்ற வேண்டும்; காரண - காரிய செயல்முறை உயர்ந்த நிலையிலிருந்து ஆட்சி புரிய வைக்க வேண்டும்.

நமது நாகரிகமும் பண்பாடும் தொன்மை வாய்ந்தவை. அதில் தொய்வு உண்டாகச் செய்துவிட்டோம். காலத்தால் அதில் வடுக் கள் தோன்றிவிட்டன. அவற்றை நோக்கி நம்முடைய பண்பாட்டையும் நாகரீகத்தை யும் மீண்டும் நிலை நாட்டுவதோடு மற் றைய நாட்டாரின் சாதனைகளிலிருந்தும் நாம் கற்றறிய வேண்டும்.

அறிவின் எந்தவொரு துறையாயினும் நமக்கென்று ஒரு முறை இல்லாமல் இல்லை. அற்புதமான உதாரணங்களாகத் திகழும் சான்றுகள் நமக்குண்டு; எனவே நம்முடைய வாழ்க்கை முறைகள் அழியாதவை; அமரத்துவ முள்ளவை என்று நாம் கொண்டாடலாம்.

ஆயினும் அந்த முறைகளை இளமை குன்றாது பசுமையோடு தீவிரத் தன்மையோடு கூடியதாக வைத்திருக்க நாம் தவறிவிட் டோம். அவை சீரழிய நாம் இடமளித்து விட்டோம்.

''ஒரு வாழ்க்கை முறை நிலைக்க வேண்டு மானால் என்றென்றும் இளமை குன்றாத தாகவும் மாறுதலை ஏற்றுக் கொள்ளத்தக்க தாகவும் இருக்கவேண்டு''மென்று டாக்டர் இராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

அதாவது புதிய கருத்துக்களை ஏற்றுக் கொள்ளக்கூடிய இளம் இதயத்தைப்போல் பசுமையானதாக விளங்க வேண்டும்.

ஈவோஸ் என்னும் தேவதை ''ஆண்டவனே! என் காதலனுக்கு அமரத்துவம் கொடு'' என்று இறைவனை வேண்டினாள். சாகா வரம் பெற்ற அவள் காதலன் முதுமையடைந்தான். அந்த முதுமையினால் தளர்வுற்று முடக்க முற்றான். எல்லோரும் அவனைக் கண்டு வெறுத்தனர். சிலர் வருந்தினர். அமரத் துவம் பெற்ற இவன் இறக்கமாட்டோமா என்று இறைஞ்சினான்.

தேவதை ஈவோஸ் பெருமூச்செறிந்து ''இறைவா! என் காதலனுக்கு நீங்கா இளமை கேட்டுப் பெறவேண்டிய நான் அதை மறந்து அமரத்துவம் வேண்டினேனே'' என்று வருந்தினாள்.

இந்த நாட்டில் வாழ்கின்ற நாம் அத்தகைய நிலைமையில்தான் இருக்கிறோம். நம்முடைய நாகரிகம் பண்பாடு ஆகியவற் றுக்குப் புத்துயிரும் புதுப்பொலிவும் ஊட்ட வேண்டியவர்களாக இருக்கிறோம்.

நெடுங்காலமாகப் பழைய முறைகளி லேயே ஊறி அவற்றைத் தாங்கி நின்று அவற்றுக்கெதிரான வாதங்களுக்கு எதிர்ப்புக் கூறிக் காலத்தைக் கழித்திருக்கிறோம்.



**அண்ணாமலைப் பல்கலைக்கழக நிறுவனர் பிறந்தநாள் விழாவில் தந்தை பெரியார் (30-9-1960)**

இதே காலத்தில் உலகத்தின் ஏனைய நாட்டவரெல்லாம் உண்மையை நாடிப் பொறுமையோடு தங்களது இடைவிடா சோதனை மூலம் பல புதிய முடிவுகளை எய்தி புதிய உயர்வுகளை அடைந்துள்ளனர்.

நாமோ பண்டைப் பழம் பெருமையினிடத்தில்-இடிந்து கிடக்கும் கோட்டைக் கொத்தளங்கள் ஓரத்தில் - அமர்ந்திருப்பதிலேயே திருப்தி கொள்கிறோம். நமக்கென்று வாய்த்த சமய, சாத்திரமெல்லாம் வெறும் சடங்குகள் என்கிற நிலைக்குச் சீரழிந்துவிட்டன. வர்க்க பேதமற்ற சமுதாயமாக இருந்த நமது சமுதாயம் இன்று சாதி-இன-வேறுபாடுகளால் கூனிக் குறுகி சிறு சிறு அமைப்புகளாகக் கட்டப் பெற்றுள்ளது.

மூடப் பழக்க வழக்கங்களைக் காணுமிடத்தில் நம்மில் பலர் வாய்மூடி மௌனிகளாக இருக்கிறோம். சிலர் சாத்திரம் பேசி அவற்றைச் சமாளிக்கப் பார்க்கிறோம். இவற்றுக்கெதிரான கண்டனங்கள்-எதிர்ப்பு-கள் தோன்றியிருந்தும் கூட நம்மையறியாமல் நாம் இவற்றைப் பாதுகாக்கக் கூடியவர்களாக இருந்திருக்கிறோம்.

இக் கொடுந் தீமைகளை எதிர்த்துப் போராட தீரமிக்க வீரர்கள் தோன்றிய போதெல்லாம் அவர்களை உன்னதமான கருத்துக்களையும் - புனிதமான கொள்கைகளையும் ஒழிக்க வந்தவர்களென்று குறை கூறி வந்துள்ளோம்.

உள்ள வாழ்க்கை முறையைச் சீரழிய விட்டு விட்டுப் பகுத்தறிவாளர்களுக்கெதிராகக் குறை கூறுவது மென்மேலும் மூடநம்பிக்கைகள் வளரவும் இந்தச் சமுதாயம் சீரழியவுமே துணை புரிவதாகும்.

சமுதாயத்தினைச் சீரமைக்கும் பணியில் நீங்கள் ஈடுபட வேண்டும். நீண்ட காலமாகவே இப்பணி செய்யப்படாமல் உள்ளது. பல்கலைக் கழகத்தில் தேர்ச்சி பெற்று பட்டதாரிகளாகி வெளியேறுவோரை அப்பணிக்குரிய தூதுவர்களாக நான் கருதுகிறேன். பல்கலைக் கழகங்களில் சமுதாயச் சீரமைப்புக் குறித்த சிக்கலான விஷயங்களை திறந்த மனதோடு-முழுமையாகவும் விவாதிக்க வாய்ப்பிருக்கின்றது.

இப்பல்கலைக் கழகம் போன்ற அறிவாலயங்கள் மக்களை முன்னேற்றப் பாதை

யில் இட்டுச் செல்வதாக இருக்கவேண்டுமென்று மக்கள் நினைக்கிறார்கள்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பட்டதாரிகளே! ஜனநாயகத்தோடு ஒட்டி வாழ முடியாத் சாதி முறையை எதிர்த்துப்போர் தொடுத்திடுங்கள் என நான் உங்களை அழைக்கிறேன். விஞ்ஞானத்தோடு ஒட்டி வாழ முடியாத மூடப் பழக்க வழக்கங்களுக்கு எதிராகவும் சுதந்திரம்-சமத்துவம்-சகோதரத்துவம் ஆகியவற்றோடு ஒட்டி வாழ முடியாத பல்வேறு கோணங்களில் அமைந்த கொடுமைகளுக்கெதிராகவும் போர்தொடுத்திடுமாறு உங்களை நான் அழைக்கிறேன்.

நமது காலத்திலுள்ள வினோதமான இன்னொரு உண்மை-நாம் இப்போது ஒரு நாட்டை உருவாக்கிக் கொண்டிருக்கிறோம் என்பது.

ஒருமைப்பாடு ஏற்பட வேண்டும் என நினைப்பவர்களுக்கு உள்ளபடியே அந்தக் கருத்தில் ஆர்வம் இருக்கிறது என்றால், அந்தக் கருத்தைத்' தெளிவாக இங்கு எடுத்துரைக்க வேண்டும்.

ஒற்றுமைக்கும் ஒரே தன்மைக்குமுள்ள வேறுபாடு புரியாது சிலர் குழப்பிக் கொள்கிறார்கள்

ஒற்றுமை என்ற பெயரில் நாட்டின் ஒரு பகுதி மற்றொரு பகுதியின் அடிமைப் பண்ணையாக மாறுவதற்குத் தெரிந்தோ-தெரியாமலோ அனுமதிக்கக்கூடாது.

எவ்வளவுதான் உயர்ந்த இலட்சியமாக இருந்தாலும் நாம் அதற்காக தவறான செயல்முறையைப் பின்பற்றுவோரில் ஒருவராக இருக்க முடியாது.

சுதந்திர நாளின்போது இராஜாஜி அவர்கள் தமக்கேயுரிய நுண்மான் நுழை புலத்துடன் கூறினார்கள்:

''நமது நாட்டின் அரசியல் அனுபவம்-இரும்பையும் உலோகங்களையும் உருக்கி வார்ப்படத்தில் வார்த்து தேய்மானத்திற்கு அஞ்சாத உருக்கு செய்வது போன்றதாகும்.

''இது சில நாடுகளில் உருவாகியுள்ள சைனா பீங்கான் போன்றதல்ல. அந்த நாட்டினரின் ஜனநாயகமெல்லாம் பிளாஸ்டிக் செய்வதுபோல் எளிதில் செய்துவிடக்கூடியது. ஆனால் நமக்கு இங்கே ஈடுபாடு - உலோகங்களிடம்''.

தேசிய ஒருமைப்பாடு என்பது நல்ல குறிக்கோள்; மதிக்கத்தக்கது. எனினும், அதற்காக மொழித் துறையிலோ - பொருளாதாரத் துறையிலோ அநீதியையும், ஆதிக்கத்தையும் சகித்துக் கொள்ள முடியுமா?

சகித்துக் கொள்ள முடியாது என்பதற்காகத்தான் இந்த (தமிழக) அரசாங்கமே ஏற்பட்டிருக்கிறது.

இந்தியை ஆட்சி மொழியாக ஏற்கக் கட்டாயப் படுத்துவதற்கு எதிரான மக்களின் வலிவுமிக்க உறுதிப்பாட்டையே இந்தத் தமிழக அரசு பிரதிபலிக்கிறது.

நாம் ஆங்கிலம் இணைப்பு மொழியாக நீடிக்க. வேண்டுவதைச் சிலர் தவறாகவும் திரித்தும் கூறுகிறார்கள்.

நிலைக்க முடியாத வாதங்களையும் விவாதத்திற்குரிய புள்ளி விவரங்களையும் காட்டி அவர்கள் வீராப்பு பேசியபடி மிரட்டல்கள்-ராணுவம் ஆகியவற்றின் மூலம் மக்களை மௌனமாக்க முயல்கின்றனர்.

பிரச்சினைகளை ஆதிபத்ய முறைகளில் எப்போதும் தீர்க்க முடியாது. குறிப்பாக இந்த மொழிப் பிரச்சினை நமது வாழ்க்கை வழியுடன் நிகழ்காலத்திலும் எதிர் காலத்திலும் நெருக்கமாக இணைத்துள்ளதாகும்.

தமிழக அரசாங்கம், தவறும் தடுமாற்றமும் இல்லாத சொற்கள் மூலம் விளக்கியுள்ளது.

தமிழும் ஆங்கிலமும் நமது எல்லாத் தேவைகளையும் பூர்த்தி செய்யும்.

தமிழ், இந்த மாநிலத்தின் ஆட்சி மொழியாகவும் ஆங்கிலம் இணைப்பு மொழியாகவும் இருக்க வேண்டும்.

ஆங்கிலம் நமது நாட்டிற்கும் உலகின் பிற நாடுகளுக்குமிடையே இணைப்பு ஏற்படுத்தப்பணிபுரியும் என்று இந்தி ஆதரவாளர்கள் கூட ஒப்புக்கொள்கிறார்கள்.

அதை அவர்கள் ஒப்புக்கொள்வார்களானால் இங்கு இணைப்பு ஏற்படுத்த இந்தி இணைப்பு மொழியாக இருக்க வேண்டும் என்று ஏன் கேட்கிறார்கள்?

வெளிநாட்டினருடன் இணைப்புக் கொள்ள எந்த மொழி பணியாற்றுகிறதோ-அதே மொழி அதே இணைப்புப் பணியை இந்தியாவுக்குள்ளும் செய்யும் ஆற்றல் பெற்றிருக்கிறது.

இரு இணைப்பு மொழிகள் தேவை என்று கூறுவது பெரிய பூனை செல்வதற்கு பெரிய வழி சுவரில் இருக்கும்போது பூனைக் குட்டி செல்ல இன்னொரு வழி செய்ய வேண்டும் என்பதற்கு ஒப்பானதாகும். பூனைக்கு என்ன வழியோ அதுவே பூனைக் குட்டிக்கும் வழியாகும்.

ஆங்கிலம் அன்னியநாட்டு மொழி என்று சிலர் வாதிடுகிறார்கள்.






1929-ஆம் ஆண்டில் இந்தியாவின் பதினான்காவது பல்கலைக் கழகமாகத் தொடங்கப்பட்டது அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

* * *

1929 முதல் 1979 முடிய அண்ணா மலைப் பல்கலைக் கழகத்தில் 319 பேருக்கு டாக்டர் பட்டம் வழங்கப்பட்டது.

* * *

இப் பல்கலைக் கழகத்தில் இதுவரை 8,822 பேர்கள் முதுகலைப் (Postgraduates) பட்டம் பெற்றுள்ளார்கள்.

* * * *

இளங்கலைப் (Bachelor's degree) பட்டம் பெற்றோரின் எண்ணிக்கை 23,873 ஆகும்.

* * * *

டிப்ளோமா மற்றும் அது போன்ற சான்றிதழ் பெற்றவர்கள் 3,401 பேர் ஆவார்கள்.

---

உள்ளபடியே (இலக்கியநோக்கில்) ஷெல்லி-பைரன் - கீட்ஸ்-கால்ரிட்ஜ் - எமர்சன்-பேகன் ஆகியோர் நமக்கு அன்னியர்களா? திருவள்ளுவர் வெறும் தமிழர் மட்டுமா? அவர்கள் எல்லாம் உலகக்குடி மக்கள்! உலகப் பேராசிரியர்கள்!

அவர்களது எண்ணங்களை மிளிரச் செய்யும் மொழிகள் வேறு நாட்டிலிருந்து வருகிறது என்பதால் தள்ளிவிடக்கூடியவை அல்ல.

எனினும், தமிழ் மொழியை கல்லூரிப் பாடமொழியாக ஆக்கத் தேவையான கவனத்துடன் படிப்படியாகச் செய்யும் கொள்கையை ஏற்று செயல்படுத்துவதால், ஆங்கிலத்திற்குத் தமிழைவிட உயர்ந்த இடம் தந்துவிடமாட்டோம்....

...சாதாரண மனிதனை-கீழ்த்தட்டு மனிதனை உயர்த்தும் பணியில் நாம் எங்கிருந்தாலும் ஈடுபட வேண்டும். அந்த மனிதன் தான் இந்த நாட்டின்-பிற நாடுகளின் முதுகெலும்பாய் இருப்பவன். அந்த மனிதனின் ஓவியத்தை உங்கள் முன் சமர்ப்பிக்க விரும்புகிறேன். அவன் நம்புதற்கு முடியாத நிலையில் வாழ்பவன். ஆனால் மனிதகுலத்தின் மூன்றில் இரண்டு பகுதியாய் இருப்பவன். குடிசையில் அவன் வாழ்கிறான். அவனால் எழுதவோ படிக்கவோ முடியாது. அவனது சக்தி நோயினால் பீடிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அவன் ஒரு நாளைக்கு 15 மணி நேரம் வேலை செய்கிறான். அவனும் அவனது குடும்பமும் வழக்கமாகப் பசியுடனிருக்கிறது. இளைய வயதிலேயே அவன் இறந்து விடுகிறான். ஆனாலும், அவன் தனது குழந்தைகளைப் பற்றி நம்பிக்கை கொண்டிருக்கிறான். அவர்கள் வலிமையுடனும் உடல் உறுதியுடனும் இருக்க விரும்புகிறான். அவன் எழுதப் படிக்கத் தெரிந்தவனாக இருக்க விரும்புகிறான். சமாதான உலகில் தனி மனித உரிமையுடன் இருக்கவேண்டும் என்று விரும்புகிறான் - இத்தகையவன் தான் (கீழ்த் தட்டில் உள்ள) சாமானிய மனிதன்.

இந்த மனிதன் தனக்கு இழைக்கப்படும் அநீதியை உணர்ந்து கொள்ளத் துவங்கி விட்டான். அதன் விளைவாகக் கிளர்ச்சிகளும், மோதல்களும் ஏற்படுகின்றன.

உறுதி எடுத்துக் கொள்ளுங்கள் - நாம் பின்தங்கப் போவதில்லை. நமது சாமான்ய மனிதனை இடர்ப்பாடான நிலையில் விட்டுச் செல்லப்போவதில்லை.

கண்ணியமிக்க பரம்பரையின் வழித் தோன்றல்களாகிய நீங்கள்தான் இந்த உன்னதமான பணிக்கு மிகவும் பொருத்தமான -வர்கள். இந்தப் பணியில் நீங்கள் காணும் வெற்றியில்தான், இந்த நாட்டின் எதிர்காலமே இருக்கிறது.

அடிப்படை பலவீனமாயிருந்தால்-மகுடமும் இருளில் வீழும்.

புன்னகை பூக்கும் நிலம்நோக்கும் ஏழை மனிதனை - குடிசையில் வாழும் சாமான்ய மனிதனை - தனது குழந்தைகளின் எதிர்காலம் பற்றி ஏங்கும் மனிதனை முன்னேற்றும் புனிதப் பணியில் ஈடுபட வாரீர்!

**பின்பக்க அட்டையில்...**

**அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் பட்டமளிப்பு விழாப் பேருரை நிகழ்ச்சியில் பேரறிஞர் அண்ணா பங்கு பெற்றபோது எடுத்த படம்.**



# புது நெறி கண்ட பல்கலைக் கழகம்

மாண்புமிகு
வருவாய்த்துறை அமைச்சர்
**எஸ். டி. சோமசுந்தரம்,**

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் பொன்விழாவினையொட்டி 1-12-79 நாளிட்ட 'தமிழரசு' இதழ் ''அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பொன்விழாச் சிறப்பிதழாக'' வெளியிடயிருப்பது குறித்துப் பெரிதும் மகிழ்கிறேன். எனது இன்றைய தொண்டிற்கு முழுவதும் காரணம் அண்ணாமலைப் பல்கலைக் கழகம்தான் என்பதை நன்றி உணர்வோடு எண்ணிப் பார்க்கிறேன். பழைய மாணவன் என்ற முறையில், எனது அறிவுலகத் தாயாம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் சிறப்புக்கள் கண்டு பூரிப்படைகிறேன்.

50 ஆண்டுகளுக்கு முன்பே, இந்தப் பல்கலைக் கழகத்தை உருவாக்கிய அண்ணாமலை அரசரின் முன்னோக்கும். ஆற்றலையும், கொடைத் திறனையும் வியந்து பாராட்டும் நாட்டு மக்களோடு நானும் சேர்ந்து நெஞ்சம் நிறைந்த நன்றியை அன்னாருக்கு உரிமையாக்குகிறேன்.

கல்வி அறிவோடு, சமுதாய உணர்வையும் ஊட்டி, புதுநெறி கண்ட பல்கலைக் கழகம் அண்ணாமலைப் பல்கலைக் கழகம். இந்த ''அண்ணாமலைப் பல்கலைக் கழகம் தோன்றியிராவிடில்''—என ஒரு கணம் எண்ணிப்பார்க்கிறேன். இருண்ட தமிழகம்தான் என் முன் காட்சியளிக்கிறது. அறிவின்மை, அரசியல் தெளிவின்மை, பொருளாதாரச் சீர்கேடு —இவற்றின் கோரப்பிடிப்பிற்கு ஆளாகி, தாழ்வுற்று வறுமை மிஞ்சி, தன்னிலை தவறிக் கெட்ட தமிழகத்தின் இருள் சூழ்ந்த நிலையை மாற்றி ஒளி மிகுந்த எதிர்காலத்திற்கு இட்டுச் செல்லும் மிகப் பெரிய பணியில் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட இப்பல்கலைக் கழகத்தின் பொறுப்பாளர்களையும், பேராசிரியர்களையும் எண்ணிப் பார்த்து இறும்பூதெய்து கிறேன்.

நம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் வரலாறு, தாய்த் தமிழகத்தின் வரலாற்றோடு பின்னிப் பிணைந்த ஒன்றாகும். தமிழகத்தின் வளர்ச்சியில் பெரும் பங்கு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கே உண்டு. முன்னர் போலவே, அறிவார்ந்த மொழித் தொண்டர்களையும், தியாக உணர்வுமிக்க தேசத் தலைவர்களையும், நம் பல்கலைக் கழகம் எதிர்காலத்திலும் உருவாக்கும் என்ற நம்பிக்கை எனக்குண்டு.



# அண்ணாமலைப் பல்கலைக் கழக வரலாறு

**ஜஸ்டிஸ் பி. எஸ். சோமசுந்தரம்**
**துணை வேந்தர்,**
**அண்ணாமலைப் பல்கலைக் கழகம்**

தமிழ்நாட்டின் புகழ்வாய்ந்த பல்கலைக் கழகமாக விளங்கும் அண்ணாமலைப் பல்கலைக் கழகம், செட்டிநாட்டு அரசர் டாக்டர் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் அளித்த தனிப்பட்ட பெருங்கொடையின் பயனாக 1929-ல் தோன்றி, 50 ஆண்டுகளாகச் சிறப்புற்றுள்ளது. இப் பல்கலைக்கழகம், தமிழ்நாட்டின் நடுப்பகுதியில், கோயில்களுக் கெல்லாம் கோயிலாக விளங்கும் தில்லைத் திருத்தலத்திற்கு அருகே உடனுறை பல்கலைக் கழகமாக அமைந்திருக்கிறது. இதை நிறுவிய கொடை வள்ளல் அண்ணாமலை அரசர் பெயரால், பல்கலைக்கழகம் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் எனவும் இப்பகுதி அண்ணாமலைநகர் எனவும் வழங்கப் பெற்று வருகின்றன. அண்ணாமலைநகர், எழில்பூத்துக்குலுங்கும் பூங்காக்களையும், மாடமாளிகைகளான கல்விக்கூடங்களையும், கவினுறும் பட்டமளிப்பு விழா மண்டபத்தையும், ஏராளமான ஆய்வுக்கூடங்களையும், அடுக்கடுக்கான மாணவர் விடுதிகளையும் தன்னகத்தே கொண்டு திகழ்கிறது. ஏறத்தாழ ஓராயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ள இந்நகர், காண்பாரைத் தன்வயப்படுத்தும் பேரெழிலுடன் காட்சியளிக்கிறது.

1920-ல் சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள், சிதம்பரத்தில் மீனாட்சி கல்லூரியை நிறுவினார்கள். அதனைத் தொடர்ந்து தமிழ், வடமொழி ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியையும், இசைக் கல்லூரியையும் அமைத்தார்கள்.

தலைசிறந்த ஆசிரியர்களைக் கொண்டு மிகப் பெரிய அளவில் இந்த மூன்று கல்லூரிகளும் இயங்கி, தென்னிந்தியாவெங்குமுள்ள நன்மாணாக்கர் அனைவரையும் தம்பால் ஈர்த்தன. இம்மூன்று கல்லூரிகளையும், மேற்கொண்டு முந்நூறு ஏக்கர் நிலத்தையும் இருபது இலட்சம் ரூபாயையும் அண்ணாமலை அரசர் 1928 ஆம் ஆண்டில், அன்றைய சென்னை அரசாங்கத்திற்கு வழங்கினார். அதன் பயனாக 1929-ல் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் தோன்றுவதற்கு உரிய சட்டத்தை சென்னை அரசாங்கத்தார் நிறைவேற்றினார்கள்.

இப்போது இப்பல்கலைக்கழகம் 32 கல்வித்துறைகளைக் கொண்டு இருக்கிறது. இவை எட்டுப் புலங்களாக ( Faculties ) உள்ளன. அவையாவன: கலை, அறிவியல், இந்திய மொழிகள், பொறியியல், ஆசிரியப் பயிற்சி, நுண்கலைகள், வேளாண்மை, சட்டம் என்பன.

பொன்விழா ஆண்டில் ஒன்பதாவது பெரும் பிரிவாக மருத்துவக் கல்லூரிப்பகுதி





இங்கு தான் மீனாட்சி கல்லூரி தொடங்கப் பெற்று அதன் பின்னர் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் உருவாயிற்று.

தொடங்கப்பெற எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பெற்றிருக்கின்றன. மாநில அரசும், இந்திய அரசும், இந்திய மருத்துவக் கழகமும் அதற்கு ஒப்புதல் கொடுத்துள்ளன.

தமிழக அரசின் முதல்வர் மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் உடற்பயிற்சியின் வளர்ச்சியில் ஆர்வம் காட்டி வருவதால், அதற்கெனத் தமிழக அரசில் தனித்துறையை நிறுவியுள்ளார். இப்பல் கலைக்கழகத்தில் ஏற்கெனவே உடற்பயிற்சி ஆசிரியர்களுக்குப் பட்டப்படிப்பு உள்ளது. தமிழக அரசு இங்கு ஒரு விளையாட்டரங்கு ( Gymnasium ) ஏற்படுத்த விரும்புகிறது. எனவே, உடற்பயிற்சிக் கல்விக்கெனப் பத்தாவது புலம் (Faculty) எதிர்காலத்தில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

கடல்வாழ் உயிரின ஆராய்ச்சித் துறையும், மொழியியல் ஆராய்ச்சித் துறையும், இந்திய நாட்டிலேயே ஈடும் இணையும் இல்லாத அளவிலும் உலகத்து அறிஞர்களெல்லாம் வியந்து புகழும் பாங்கிலும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் செயல்பட்டு வருகின்றன.

தமிழக அரசின் கொடையால் திருக்குறளுக்கு அமைந்துள்ள பேராசிரியக் கட்டில் வாயிலாக இப்பல்கலைக்கழகத்தில் அரிய ஆராய்ச்சி நூல்கள் மலர்ந்துள்ளன.

தத்துவம், உள இயல், வரலாறு, அரசியல், பொருளாதாரம், ஆங்கிலம், சமூக இயல், தொழில் நிர்வாக முறைப் படிப்பு, மக்கட் தொகை ஏற்றம் பற்றிய படிப்பு, கணிதம்-புள்ளி விவரவியல், இயற்பியல், வேதியியல், தாவரவியல், உயிரினவியல், புவியியல் துறைகளும் உள்ளன. இவற்றில் பட்ட, பட்ட மேற்படிப்புக் கல்விவரை உண்டு. தலை சிறந்த மேதைகள் இந்தத் துறைகளில் உயர் ஆராய்ச்சி செய்து வருகின்றனர். தமிழக வரலாற்றுக்குப் புது விளக்கங்கள் கொடுத்த பெருமையும், தஞ்சைக் கோயில் ஓவியங்களை வெளிப்படுத்திய புகழும், நெய்வேலிப் பழுப்பு நிலக்கரியையும் பிச்சாவரம் தாவரச் செல்வங்களையும் விரிந்த உலகம்அறியச்செய்த சிறப்பும் இப்பல்கலைக் கழகத்தின் வரலாற்றின் பொன் எழுத்துக் களால் பொறிக்கத்தக்கன. வேதியியல்துறையில் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் அரிய சாதனைகள் ஆற்றியுள்ளது.

பல்கலைக்கழகத்தின் தமிழ்ப்பணிகள் குறித்துப் பல நூல்களையே எழுதலாம். தமிழ் நாட்டில் திக்குதோறும் இன்று காணப்படும் சமுதாய மறுமலர்ச்சிக்கும் தனித்தமிழ் இயக்கத்திற்கும் வித்திட்டது அண்ணாமலைப் பல்கலைக் கழகமேயாகும். வழக்கறிஞர்களாகவும், வேறு துறையாளர்களாகவும் தங்கள் வாழ்நாளெல்லாம் ஈடுபட்டிருந்த பெரும்புலவர்களை எல்லாம் தமிழ்ப் பேராசிரியர்களாக இருக்கும்படி வற்புறுத்தினார் அண்ணாமலை அரசர். அம்முயற்சியில் வெற்றியும் கண்டார்.

இந்த விளக்குகளால் அறிவு ஒளி ஏற்றப் பெற்ற பல்லாயிரம் தமிழ்ப் புலவர்களை இப் பல்கலைக்கழகம் உருவாக்கியிருக்கிறது. இன்று தமிழகம் சேமமுற வேண்டுமென அவர்கள் தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செய்து வருகின்றனர்.

சமஸ்கிருதம், இந்தி, உருது, பிரெஞ்சு ஆகிய மொழித் துறைகளும் உள்ளன.

தமிழ் இசை இயக்கம் இங்குள்ள இசைக் கல்லூரியில் தான் தோன்றிற்று எனலாம். தமிழ் இசைப் பாடல்கள் பல தொகுதிகளாக, இசைக் குறிப்புகளுடன் வெளியிடப் பெற்றுள்ளன.

கல்விப் பிரிவில் ஆசிரியர்களுக்கு முது நிலை வரை பயிற்சி வழங்கப் பெறுகிறது.

வேளாண்மைத் துறையில் எம். எஸ். சி. நுண்கிருமிகள் பற்றிய படிப்பை இந்தியாவிலேயே முதல் முறையாகக் கற்பித்தது அண்ணாமலைப் பல்கலைக்கழகமே ஆகும். இங்குப் பயின்ற வேளாண்மைப் பட்டதாரிகள் ஏறத்தாழ ஓராயிரம் பேர் நாடெங்கும் உள்ள பல்வேறு பண்ணைகளிலும் அரசின் துறைகளிலும் பணிபுரிந்து பசுமைப் புரட்சிக்கு உறுதுணையாக உள்ளனர்.

WITH COURAGE AND FAITH

1978-ல் சட்டக் கல்லூரி ஏற்பட்டது. சென்னை உயர்நீதி மன்றத்து நீதிபதிகள் பலர் இங்கு இடையிடையே வந்து சிறப்புச் சொற்பொழிவுகள் ஆற்றிவருவது குறிப்பிடத் தக்கது.

பொறியியல் பகுதியில் கட்டடக் கல்விக் குப் பயன்படும் இயந்திரங்கள் மற்றும் கட்டு மானக் கலை, இயந்திரப் பொறியியல், எலக்ட் ரானிக்ஸ் உள்பட மின்சாரப் பொறியியல் படிப்புக்கள் உள்ளன.

வள்ளல் அழகப்பச் செட்டியார் அவர் களின் கொடையால் ஏற்பட்டது இராசயனப் பொறியியல் துறை. இதில் பயின்றவர்கள் நாடெங்கும் உரத் தொழிற்சாலைகளிலும், மலேசியா நாட்டில் ரப்பர் நிறுவனத்திலும் சிறந்த பங்கு கொண்டு புகழ்க் கொடி நாட்டி யிருக்கின்றனர்.

ஐந்து பொறியியல் துறைகளுமே இந்தியா விலுள்ள பெரிய தொழிற்சாலைகள் பல வற்றிற்குப் பயன்மிக்க ஆலோசனைகளைக் கூறி அரும்பணி புரிந்து வருகின்றன.

அரிசி ஆலைகளை நவீனப்படுத்துவது தொடர்பான ஆராய்ச்சியை இந்திய அரசாங் கம் இப்பல்கலைக்கழகத்தில் நடத்தி வருகின் றது.

நெல்லிலுள்ள ஈரச் சத்தைச் சூரிய ஒளி யால் ஈர்க்கப் பொறியியல் துறை ஆராய்ந் துள்ளது. சூரியனின் ஒளியைப் பயன்படுத்து வதற்கு ஏற்ற பன்னிரண்டுக்கு மேற்பட்ட கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

நெய்வேலியில் பணிபுரியும் பொறியியல் அலுவலர்கள் தங்கள் உற்பத்தித் திறனை மேலும் வளர்த்துக் கொள்ள உதவும் வகை யில் எம். ஈ. படிப்பை இப்பல்கலைக் கழகம் நடத்தி வருகின்றது.

39 இலட்சம் ரூபாய் செலவில் ஓர் இயந்திரக் கணிப்பான் (Computer) பொருத் தப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகத்தின் மற்றொரு பகுதி முத்தையா பாலிடெக்னிக் ஆகும். இணை வேந்தர் அரசர் முத்தையா செட்டியார் அவர்கள் பெயரால் இயங்கும் இந்தத்தொழிற் கல்வி நிலையத்தில் 3 துறைகளில் டிப்ளோமா படிப்பு உள்ளது. வேளாண்மைப் பொறியியல் டிப்ளோமா, படிப்பு தொடங்கப் பெற்றுள் ளது.

அஞ்சல்வழிக் கல்வித்துறை 1979-ஆம் ஆண்டு ஏற்பட்டது. இதில் பி.ஈ.டி., பி.காம். சட்ட டிப்ளோமா படிப்புக்கள் உள்ளன. பி. ஈ.டி. படிப்புப் பயில 12,000 பேர் மனுச் செய்து கொண்டனர் என்பது குறிப்பிடத் தக்கது. சில ஆயிரம் பேருக்கு மட்டுமே இடம் கொடுக்க முடிந்தது. இவர்களுக்குத் தொடர்வகுப்புக்கள் நடத்தப் பெறுகின்றன. அஞ்சல் வழிக் கல்வி வாயிலாக 6,900 பேர் இப்பல்கலைக்கழகத்தில் பயன் பெறுகின்றனர்.

பல்கலைக்கழகத்து நூலகம் இந்திய நாட்டிலேயே குறிப்பிடத்தக்க நூலகங்களுள் ஒன்றாக விளங்குகிறது. ஆயிரமாயிரம் சுவடி களும், கிடைத்தற்கரிய நூல்களும் உள்ள இக் கருவூலத்தில் இவ்வாண்டு முதல் நூலகக் கல்வி கற்பிக்கப்படுகிறது.

450-க்கு மேற்பட்ட ஆசிரியர்கள் பல்கலைக்கழகத்தில் பணி புரிகின்றனர். பல் வேறு துறைகளுக்குச் சேர்ந்து ஆண்டுதோறும் ஒன்றரைக் கோடி ரூபாய் செலவாகிறது. வெளியீட்டுத் துறை இதுவரை 470 நூல் களை வெளியிட்டுள்ளது. ஏறத்தாழ 8,000 மாணவர்கள் உள்ளனர். இவர்களில் 5,000 பேர் உணவு விடுதிகளில் தங்கிப் படிக்கின்ற னர்.

பட்டப் படிப்பு, பட்ட மேற்படிப்பு ஆகி யவை தவிரச் சான்றிதழ் படிப்புக்கும், இசைப் பயிற்சியால் மாலை நேரப் படிப்புக்கும், பரத நாட்டியம், நாதசுரம், தவில் ஆகியவற் றில் டிப்ளோமா படிப்புக்கும் புத்தம் புதிய துறைகள் பலவற்றில் உயர் ஆராய்ச்சிக்குப் பல மொழிப் படிப்புக்கும் இப்பல்கலைக் கழகம் வாய்ப்பு வழங்குகிறது.

இந்திய அரசும், தமிழக அரசும், பல்கலைக்கழக மானியக் குழுவும் பேரன் புடன் வழங்கும் கொடைகளால் இப்பல்கலைக் கழகம் நாளும் ஓங்கி வளர்ந்து வருகிறது.

பல்கலைக்கழகம் நிறுவிய பெருங்கொடை வள்ளலின் குடும்பத்தார் குறிப்பாகவும் சிறப் பாகவும் டாக்டர் ராஜா சர் முத்தையாச் செட்டியார் அவர்கள் தம் தந்தையார் பல் கலைக்கழகத்தைத் தொடங்கியபோது அவ ருக்கு உறுதுணையாக இருந்தும் அவர் மறைந்த பிறகு 1948 முதல் இணைவேந்த ராக இருந்து கொண்டும் இந்த ஐம்பது ஆண்டு களாகக் கண்ணினைக் காக்கும் இமைபோலப் பல்கலைக்கழகத்தைக் காத்து வருகிறார்கள். அவருடைய மூச்சும் பேச்சும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தைப் பற்றியனவே என்று சொல்லுவது சாலப் பொருத்தம்.

மகாகனம் வி.எஸ். சீனிவாச சாஸ்திரியார், திரு எம். இரத்தினசாமி, சர். ஆர். கே. சண்முகம் செட்டியார், சர் சி. பி. இராமசாமி அய்யர், திரு டி.எம். நாராயணசாமிப்பிள்ளை போன்ற பேரறிஞர்கள் துணை வேந்தர்களாக இருந்து புகழ்மணம் பரப்பினார்கள். இவர்கள் தங்கள் புகழாலும் செல்வாக்காலும் பல்கலைக் கழகத்துக்குப் பெருமை சேர்த்துள்ளனர்.

இந்தப் பொன்விழா ஆண்டில் துணை வேந்தராக இருப்பதை நான் பெற்ற பாக்கிய மாகக் கருதுகிறேன். இணைவேந்தர் செட்டி நாட்டு அரசர் இராசா சர் முத்தையா செட்டியார் அவர்களும், அறிவில் சிறந்த ஆசிரி யர்களும், நன்மாணாக்கர்களாகிய ஆயிரம் ஆயிரம் துடிப்புள்ள இளைஞர்களும், பல்

# அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
## அஞ்சல்வழிக் கல்வித்துறை

கல்லூரிக்குச் செல்ல இயலாதவர்களுக்கும் உடல்நலம் குன்றியிருப்பவர்களுக்கும், மூலை முடுக்குகளில் பின்தங்கிய பகுதிகளில் வாழ்பவர்களுக்கும், அலுவல் பார்த்து வருபவர்களுக்கும் பட்டம்பெற வாய்ப்பு நல்குவது அஞ்சல்வழிக் கல்வித்துறை ஆகும்.

இவ்வகையில் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் ஈடும் இணையும் இல்லாத பணியைச் செய்து வருவதை இந்தியாவெங்கும் உள்ளவர்கள் மகிழ்ந்து வரவேற்று வருகின்றனர். இந்தப் பொன்விழா ஆண்டில்தான் இந்தத் துறை தொடங்கப்பெற்றது. ஆசிரியர்களுக்கு பி.ஈடி. பட்டப் படிப்பும், ஏனையோர்க்கு பி.காம். பட்டப் படிப்பும், சட்டத் துறையில் (1) கம்பெனிச் சட்டம், (2) தொழிலாளர் நலச் சட்டம் ஆகியவை பற்றிய சான்றிதழ் படிப்பு ஆகியவையும் அஞ்சல்வழியாகக் கற்பிக்கப்பெறுகின்றன. அனுபவமும் திறமையும் நிறைந்த பலபேராசிரியர்களும் 10-க்கு மேற்பட்ட விரிவுரையாளர்களும் இத்துறைக்கு நியமிக்கப் பெற்றுள்ளனர்.

பி.ஈடி. படிப்புக்கு மட்டும் இவ்வாண்டில் 19,000 பேர் மனுச் செய்துகொண்டது குறிப்பிடத்தக்கது. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்து அஞ்சல்வழிக் கல்வி மாணவர்க்கு, உயர்நிலைப் பள்ளிகளில் பயிற்சி கொடுக்கத் தமிழக அரசு இசைவு தெரிவித்திருக்கிறது. இப் பல்கலைக் கழகம், மேற்கண்ட மாணவர்களுடன் நேர் தொடர்பு கொள்ளவும், அவர்களுக்கு வழி காட்டவும், அவர்களுடைய ஐயப்பாடுகளைப் போக்கவும் சென்னையிலும், நெல்லூரிலும், ஆத்தூரிலும், கோயம்புத்தூரிலும், திருக்குற்றாலத்திலும், கோவாவிலும் ஒரு முறைக்கு ஐந்து நாட்கள் வீதம் மொத்தம் ஓராண்டில் 10 நாட்களுக்கு வகுப்புகளை நடத்தி வருகின்றது. சேலம், நாகர்கோயில், திருச்சி ஆகிய இடங்களில் மேற்படி வகுப்புகளை நடத்தும் யோசனையும் உள்ளது. பி.காம்., சட்டப் படிப்பு மாணவர்க்கு 5 நாட்களுக்கு வகுப்புகள் நடத்தப் பெறுகின்றன.

இவ்வாண்டில் பி.காம். படிப்பிற்கு 226 பேரும், சட்டச் சான்றிதழ் படிப்பிற்கு 1,184 பேரும், பி.ஈடி. பட்டப் படிப்பிற்கு 5,472 பேரும் அஞ்சல்வழிக் கல்வித்துறையில் சேர்த்துக் கொள்ளப்பெற்றிருக்கின்றனர்.

இதுவரை எந்தப் பல்கலைக் கழகமும் வழங்காத அரிய வாய்ப்புகளை, இந்தியப் பல்கலைக்கழகக் குழுவின் ஒப்புதலுடனும், அவர்களால் வரையறுக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு இணங்கவும் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் அளித்து வருகிறது. இந்திய மக்கள் அனைவருக்கும் கிடைத்துள்ள இந்த வசதியைப் பயன்படுத்தி "சாந்துணையும் கல்லாதவாறு" என்ற வள்ளுவர் குறள்படி தங்கள் தகுதிகளை அனைவரும் உயர்த்திக் கொள்வார்களாக!

கலைக் கழகத்தின் நிர்வாகப் பகுதி ஊழியர்களும், அரசாங்கத்தாரும் எனக்குத் தந்து வரும் எல்லையற்ற ஆதரவை எண்ணி நான் பெருமிதம் அடைகிறேன்.

பல்கலைக்கழகத்தில் பயின்ற மாணவர்கள் உலகெங்கும் உயர் பதவிகளில் இருந்து வருகின்றனர். அவர்கள் அனைவரும் இப் பல்கலைக் கழகத்தின் வளர்ச்சியிலும் பொன் விழாக் கொண்டாட்டத்திலும், காட்டிய ஆர்வமும், வாரி வழங்கும் நன்கொடைகளும் பாராட்டத்தக்கன; பின்பற்றத்தக்கன.

எத்தனையோ பல்கலைக்கழகங்களுக்குத் துணைவேந்தர்களை வழங்கும் நிலையில் தொடக்கம் முதல் பெரும் புலமையும் பேராற்றலும் மிக்கவர்களை இப்பல்கலைக்கழகம் ஆசிரியர்களாகப் பெற்று மிளிர்கின்றது.

இடையிடையே அண்ணாமலை நகரில் நடைபெற்றுள்ள கல்வியாளர் மாநாடுகளும், அனைத்திந்திய விழாக்களும் மற்றும் பல நாட்டு அறிஞர்கள் கூடும் பேரவைகளும் இப் பல்கலைக்கழக மாணவர்களின் கருத்துக்களை உருவாக்கி வருகின்றன.

தமிழ் அன்னை மகிழ இப்பல்கலைக்கழகம் தன் நூற்றாண்டு விழாவை நோக்கிப் பீடு நடை போட்டு, மேன்மேலும் முன்னேற இந்தப் பொன்விழா அடிகோலுமாக!

'தில்லைப் பதியுடையான் சிற்றம் பலம் தன்னில்
அல்லும் பகலும்நின் றாடுகின்றான்— எல்லைக்கண்
அண்ணா மலைமன் அமைத்த கலைக்கழகம்
கண்ணாரக் கண்டு களித்து''

(கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை)



இந்திய சுதந்தரப் போராட்டத்தில் பெரும்பங்கு கொண்ட தலைவர்களை உருவாக்கிய பல்கலைக் கழகங்கள் என்று இந்திய நாட்டிலேயே குறிப்பிடத்தக்கவை காசி இந்து பல்கலைக் கழகமும் அண்ணாமலைப் பல்கலைக் கழகமும்தான்.

—தலைவர் காமராசர்.

# பல்கலைக் கழக நிறுவனர் வரலாறு

தமிழ்நாட்டின் தனிப்பெரும் பல்கலைக்கழகமென நாடு முழுவதும் பாராட்டப்பெறும் அண்ணாமலைப் பல்கலைக்கழகம், கடந்த ஐம்பது ஆண்டுகளாக நாட்டுக்கும் மொழிக்கும் நலம் பல செய்து இன்று 'பொன்விழா'க் கொண்டாடப்பெறும் சிறப்பெய்தியுள்ளது. இந் நன்னாளில் இதனை நிறுவின பெருங்கொடை வள்ளல் டாக்டர் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்களுடைய அரும்பெரும் பண்புகளையும், செயற்கரிய செயல்களையும் எண்ணுதல் பொதுவாக எல்லாருக்கும், சிறப்பாக ஒவ்வொரு தமிழ் மகனுக்கும் பெருமகிழ்ச்சி தருவதாகும்.

ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள், கானாடுகாத்தான் என்னும் நகரில், தனவணிகர் மரபில், அறம் பல புரிந்த செல்வராகிய முத்தைய செட்டியார் அவர்களின் குமாரராக 1881ஆம் ஆண்டில் பிறந்தவர்கள். இவர்கள் தம் ஆட்சித் திறத்தாலும், அறிவு நுட்பத்தாலும், பேருழைப்பாலும் தம் முப்பதாம் ஆண்டுவரை உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் உள்ள பலதிறப்பட்ட தொழில் துறைகள் வாயிலாகப் பெரும் பொருள் ஈட்டினார்கள்.

**பொதுநலப்பணிகள்**

இவ்வாறு ஈட்டிய பெரும் பொருளைக் கொண்டு தாமும், தம்மைச் சார்ந்தவருமே இன்ப வாழ்வு நடத்துதல் அமையுமென இவர்கள் கருதினாரல்லர். பொது மக்களுக்குப் பல்லாற்றானும் இயன்ற உதவிகள் செய்தல் வேண்டுமென எண்ணினார்கள். அந்நிலையில், தம் ஊருக்கு அண்மையிலுள்ள காரைக்குடி நகராண்மைக் கழகத் தலைமைப் பதவி இவர்களை நாடி வந்தது. பொதுநலப் பணி புரிவதற்கு இது ஓர் வாய்ப்பாகுமென எண்ணி, இவர்கள் அப் பதவியை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டார்கள். மூன்றாண்டுகள் தலைவராயிருந்து அந் நகரத்திற்குப் பல நன்மைகள் செய்தார்கள். அக்காலத்தில் பொதுமக்கள் இவர்களைத் தலைவராகக் கருதினாலும், இவர்கள் தம்மைப் பொது நலத் தொண்டராகவே கருதிப் பணிபுரிந்தார்கள்.

ஒரு நாட்டின் வளர்ச்சி அந்நாட்டிற் பிறக்கும் நன்மக்களைப் பொறுத்திருக்கிறது. தாய்மார்கள் உடல் வளமும், உள்ளக் களிப்பும் உடையவர்களாயிருந்தாலன்றி அவர்களிடம் நன்மக்களை எதிர்பார்த்தல் இயலாது. ஆகவே, பிள்ளைப் பேற்றின் போதும், பிற காலங்களிலும் பெண்டிர்களுக்கு வருத்தமும்



கவலையும் தோன்றாதவாறு மருத்துவ முதலான வசதிகள் செய்து கொடுத்தல், ஒரு நாடு நலம்பெறச் செய்யும் சிறந்ததோர் அறமாகுமென நம் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் எண்ணினார்கள். எண்ணியவாறே தம் ஊரில் மூன்று இலட்சம் ரூபாய் செலவு செய்து ஓர் அறப்புணி புரியும் மருத்துவச்சாலை அமைத்தனர். இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள ஆயிரக்கணக்கான தாய்மார்கள் அம் மருத்துவச்சாலையில் அழகிய நன்மக்களைப் பெற்றெடுத்திருக்கின்றார்கள்.

மாதரும் மைந்தரைப்போல உடற்பயிற்சிக்கான விளையாட்டுக்கள் விளையாடவும், உலகியலறிவு பெறவும், நாகரிக மக்களுடன் நன்கு கலந்து பழகவும் வேண்டுமென உணர்ந்த அண்ணாமலை வள்ளல், சென்னை மாநகரில் இரண்டு இலட்ச ரூபாய் செலவு செய்து ''வெல்லிங்டன் கிளப்'' என்னும் மகளிர் மன்றம் ஒன்று நிறுவினார்கள்.

சிதம்பர நகர மக்கள் பொதுக்கூட்டம் முதலியன நடத்துதற்குப் போதிய இடமும், கட்டடமுமில்லாமல் தயக்கமுறுதலையறிந்து, விரிந்ததோர் இடம் வாங்கி, அதன்கண் பூங்காவையும், பொது மன்றத்தையும் இவர்கள் ஆக்கித் தந்தார்கள். இது ராஜா அண்ணாமலை டவுன் ஹால் என வழங்கப் பெற்றது. இப்போது இவ்விடத்தில் அரசினர் மருத்துவமனை கட்டப்பெற்றிருக்கிறது. அண்ணாமலை அரசர் பெயரால் புதிய மண்டபம் கட்ட ஏற்பாடு நடைபெற்று வருகிறது.

அண்ணாமலை வள்ளல் அவர்கள் மதுரைக் கல்லூரிக்கு 1917 ஆம் ஆண்டில் ஐம்பதினாயிரம் ரூபாய்க்குமேல் மதிப்புள்ள இடம் வாங்கிக் கொடுத்து, அதிற் கட்டடம் கட்டுவதற்கும் பொருளுதவி செய்தார்கள். மதுரை அமெரிக்கன் கல்லூரிக்கு பூாணை வர் விடுதியொன்று கட்டிக் கொடுத்தார்கள்; பசுமலையிலுள்ள அமெரிக்க மிஷன் உயர் நிலைப்பள்ளிக்கு அவ்வப்போது செய்த உதவிகள் பலவாகும்; திருச்சிராப்பள்ளியிலுள்ள தேசிய உயர்நிலைப்பள்ளி, சென்னை மயிலாப்பூர் பின்னத்தூர் சுப்பிரமணிய ஐயர் உயர் நிலைப் பள்ளி, இராமகிருஷ்ண கல்வி நிலையம், சேவா சதனம், இந்திய செஞ்சிலுவைச் சங்கம், தில்லியிலுள்ள இர்வின் பாடசாலை, மகளிர் கல்விக் கழகங்கள், கொழும்பு, பர்மா இவற்றிலுள்ள கல்வி நிலையங்கள் ஆகியவற்றிற்குப் பொருளுதவி செய்துள்



ளார்கள். டேராடூனிலுள்ள இந்தியப் பொதுமக்கள் கல்விச் சாலைக்குச் சற்றேறக்குறைய ஐம்பதினாயிரம் ரூபாய் நன்கொடையாக வழங்கினார்கள். சாந்திநிகேதனத்தில் கவியரசர் இரவீந்திரநாத தாகூர் நிறுவியுள்ள விசுவபாரதி பல்கலைக் கழகத்திற்குத் தமிழ் நூல்கள் அனைத்தையும் அன்பளிப்பாகக் கொடுத்துதவினார்கள். தமிழ்க் கலைக்களஞ்சிய வெளியீட்டிற்குப் பதினாயிரம் ரூபாய் அளித்தார்கள். இன்னும் எத்துணையோ சங்கங்கள், சபைகள், வாசக சாலைகள், பாடசாலைகள் முதலியவற்றிற்கு வழங்கியதொகைகள் வரம்பிலவாகும். சிதம்பரத்தில் கோவிந்தராசப் பெருமாள் கோயில் திருப்பணியையும், இளையாற்றங்குடியில் அம்மன்கோயில் திருப்பணியையும் இவர்கள் செய்ததோடு, மேலும், பல திருக்கோயில்களுக்கும் உதவி செய்துள்ளார்கள்.

### பட்டம் பதவிகள்

1929-ல் தகுதியான பட்டம் ஒன்று இவர்களுக்குக் கிடைத்தது. அதுதான் பரம்பரையாக வரும் 'செட்டிநாட்டு அரசர்' என்னும் பட்டமாகும்.

சென்னைப் பல்கலைக் கழகப் பேரவையின் வாழ்நாள் உறுப்பினராக இருந்த இவர்கள் செய்துள்ள கல்விப்பணியைப்பாராட்டி அப் பல்கலைக்கழகம், 1932-ல் எல். எல். டி. என்ற கௌரவ டாக்டர் பட்டத்தை இவர்களுக்கு வழங்கியது. 1942-ல் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தார், டி. லிட். என்ற இலக்கிய முனைவர் பட்டமளித்து இவர்களைப் பாராட்டினர்.

1916ஆம் ஆண்டு முதல் மூன்று ஆண்டுகள் சென்னைச் சட்ட சபையிலும், 1921ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக 15ஆண்டுகள் டில்லி அரசாங்க சபையிலும் (இப்போது மாநிலங்கள் அவை என வழங்கப் பெறுகிறது) உறுப்பினராக இவர்கள் இருந்து நாட்டுக்குச் செய்த உயர்ந்த தொண்டுகள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. இப்போது ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா என வழங்கும் இந்திய இம்பீரியல் பேங்கின் கவர்னராக இவர்கள் பத்து ஆண்டுக் காலம் பணியாற்றியுள்ளார்கள்.

### பல்கலைக் கழகத் தோற்றம்

''மக்கள் வாழ்க்கை தனித்த முறையில் திருத்த முறுதல் இல்லை. அறிஞர் பலருடன் அடுத்தடுத்துப் பழகுதலும், அயலிடங்களுக்குச் சென்று ஆங்காங்குள்ள அருமை பெருமைகளைக் காண்டலும் அறிவு வளர்ச்சிக்கு உறுதுணையாகும்; சிறு பான்மையினரான ஆங்கிலேயர் கல்வி, வாணிகம், ஆட்சித்திறன் முதலியவற்றில் பிறநாட்டாரினும் மேன்மையுற்று விளங்குகின்ற நுட்பங்களை அறிதல் வேண்டும்'' என இவர்கள் அவாக் கொண்டு, காரைக்குடி நகராண்மைக்கழகத் தலைவராயிருந்த அக்காலத்தில் இங்கிலாந்துக்குச் சென்று இலண்டன் மாநகரில் தங்கினார்கள். அப்போது (1911-ல்) ஐந்தாம் ஜார்ஜ் மன்னருக்கு அங்கு நடைபெற்ற முடிசூட்டு விழாவிற்கு இவர்கள் சிறப்பாக அழைக்கப் பெற்று, அவ்விழாவிற் கலந்து கொண்டார்கள். அங்கே தங்கியிருந்தபோது ஆக்ஸ்போர்டு, கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகங்களுக்குச் சென்று அவற்றின் அமைப்புக்களையும், நடைமுறைகளையும் நன்கு கவனித்



தார்கள். அவை, இவர்களின் உள்ளத்தைக் கவர்ந்தன. இந் நினைவுகளுடன் இந்தியாவிற்கு வந்தார்கள்.

இங்கிலாந்திலிருந்து திரும்பியது முதல் அத்தகைய பல்கலைக் கழகம் நம் நாட்டில் உண்டாதல் வேண்டும் என்ற ஆர்வம் உடையவர்களாயிருந்தார்கள். உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளும் இப் பெருந்தகையாளரின் உள்ளமாகிய நன்னிலத்தில் அழுந்திப் பதிந்த அவ்வுயரிய நோக்கமாகிய நல் வித்தானது, நாளடைவில் முளைத்துக்கிளைத்துச் செழித்து வளர்ந்து முழு மரமாகிப் பூத்துக் காய்த்துப் பயன் விளைக்கத் தொடங்கிற்று. இது, தமிழகம் செய்த தவப்பயனென்றே கூறுதல்வேண்டும். இவர்கள் முதல் தரக் கல்லூரி ஒன்று நிறுவுதற்கு முதலில் முயன்றார்கள். பாண்டி நாட்டின் தலைநகரமும், முத்தமிழ் வளர்த்த முதலிடமுமாகிய மதுரை மாநகரமே கல்லூரி நிறுவுதற்குத் தக்க இடமென நினைத்து, காலந்தாழ்த்தாது அந் நகர்க்கண் விரிந்த நிலம் வாங்கினார்கள். பிறகு தாம் வாங்கிய நிலத்தையும் கட்டடம் கட்டுதற்கு வேண்டும் பொருளையும் மதுரைக் கல்லூரிக்கு வழங்கிவிட்டுச் சிதம்பரத்தை நோக்கினார்கள்.

தம் தந்தையார் அவர்களும் தமையனார் திவான் பகதூர் இராமசாமிச் செட்டியார் அவர்களும் பொதுநலப் பணிகள் புரிந்த இடம் சிதம்பரமாகும். ஆதலால், இந்நகரத்திலேயே தாமும் கல்லூரி அமைத்தல் சாலப் பொருத்தமுடையதென இவர்கள் முடிவு செய்தார்கள். தமையனார் திவான் பகதூர் இராமசாமிச் செட்டியார் அவர்கள் 1918-ல் இறையடி சேர்ந்தமையால், அவர்கள் பெயரால் நடைபெற்று வந்த உயர்நிலைப் பள்ளியைப்பாதுகாக்கும்பொறுப்பும் இவர்கள்பாலதாயிற்று. ஆதலின், அவ்வுயர்நிலைப்பள்ளியையே முதல்தரக் கல்லூரியாக்க முயன்றார்கள். 1920-ல் அப் பள்ளியின்கண் கல்லூரி முதல் வகுப்பும் தொடங்கப் பெற்றது. தக்கஆசிரியர்களாலும், மாணவர்களாலும் நூல்நிலையம் முதலான பிற உறுப்புக்களாலும் கல்லூரி செவ்வனே நடைபெற்றது. ஆயினும், அக்கல்லூரி ஊர் நடுவில் அமைந்திருந்தமையால், பிற்காலத்தில் அதனை விரிவுபடுத்தற்குப்போதிய இடம் பெறுதல் அரிதென உணர்ந்தார்கள். விரிந்த இடந் தேடும் எண்ணம் மேன்மேலும் வளர்ந்தது. அவ்வெண்ணத்தின் விளைவாகத் தில்லையின் எல்லையில் உள்ளதும், விரிந்த நிலப்பரப்பு உடையதும் ஆகிய திருவேட்களமே கலைவளர்ச்சிக்குத் தகுதியான இடமென முடிவு செய்தார்கள். வேண்டிய கட்டடங்களும் அமைப்புக்களும் விரைவில் நிறைவேறின. அங்கே நடைபெற்ற கல்லூரிதான் பிற்காலத்தில் அண்ணாமலைப் பல்கலைக்கழகமாக வளர்ச்சி பெற்றது. தனித்தனியான இருந்த தமிழ்க் கல்லூரி வடமொழிக் கல்லூரி, ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி, இசைக் கல்லூரி ஆகியவை பல்கலைக்கழகத்தோடு இணைந்தன. இப்பல்கலைக் கழகத்துக்கு அண்ணாமலை வள்ளல் வழங்கிய தொகை ஏறத்தாழ ஐம்பது இலட்சம் ரூபாயாகும். இதனை நிறுவுவதற்கும், இதன் வளர்ச்சிக்கும் ராஜா அவர்கள் மேற்கொண்ட பேருழைப்பு விலை மதிக்க இயலாததாகும். இவர்களுக்கு முன்னும், இவர்களுக்குப் பின்னும் இன்றுவரை ஆசிய நாடுகளில் தனியாக ஒருவர் இத்தகைய சிறந்த பல்கலைக்கழகம் நிறுவவில்லை. இப் பல்கலைக்கழக வரலாறும், இவர்கள் வரலாறும் பிரிக்க இயலாதவாறு இரண்டறக்கலந்து பின்னிக்கிடக்கின்றன. இவர்களின், என்றும் நின்று நிலவும் புகழ் வடிவாக இப்பல்கலைக்கழகம் காட்சி தருகின்றது.

**தமிழ்ப்பற்று :**

அண்ணாமலையரசர் இளம் பருவந் தொட்டே, தேவார, திருவாசகங்களிலும் திருக்குறளிலும் அழுத்தமான பற்றுடையவர்களாக இருந்தார்கள். பல்கலைக் கழகந் தொடங்குவதற்கு முன்பே மீனாட்சி தமிழ்க் கல்லூரியை நிறுவிப் பல மாணவர்களுக்கு உண்டியும் உறையுளும் உதவி, அக்கல்லூரியில், தமிழ் வித்துவான் வகுப்பில் அம்மாணவர்களைப் பயிலச் செய்தனர். இவர்கள் இத் தமிழ்க் கல்லூரிக்கு மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர் அவர்களைத் தலைவராக இருக்கச் செய்தது இங்கே குறிப்பிடத்தக்கது. பல்கலைக்கழகம் தொடங்கியபின் அதில் தமிழுக்கு முதன்மையிடங் கொடுக்க வேண்டுமென்னும் நோக்கத்தால் தமிழ் சிறப்புவகுப்பும் (பி.ஏ. ஹானர்ஸ்) உண்டாக்கினார்கள். தமிழ், வடமொழி ஆசிரியப்பயிற்சிக் கல்லூரி நிறுவி, அதில் பயில்வோருக்கும் பொருளுதவி செய்தார்கள்.

மேலும், தமிழ்நாட்டில் தமிழ்ப் பேரறிஞராய்ச் சிறந்தவர்களையே தெரிந்தெடுத்துத் தமிழ்ப் பேராசிரியர்களாகவும், விரிவுரையாளர்களாகவும் பணியாற்றச் செய்தார்கள். மகாமகோபாத்தியாய பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியாரவர்களும், கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை அவர்களும் தமிழ்நாட்டின் இரு கண்மணிகள்போல் விளங்கினார்கள். ஆதலின், அவ்விரு பெருமக்களுக்கும் தமது கையாற் பொன்னாடை போர்த்துப் பெருமைப்படுத்தினார்கள். தமிழையும், தமிழ்ப் பண்பாட்டையும் உலகறியச் செய்வதே இப்பல்கலைக்கழகத்தின் சிறந்த குறிக்கோளாக இருக்கும் என்று பல்கலைக் கழகப் பேரவையின் தொடக்க விழாவில் ராஜா அவர்கள் கூறியது ஒன்றே இவர்களின் தலையாய தமிழ்ப் பற்றிற்குச் சிறந்த சான்றாகும்.

**தமிழ் இசை இயக்கம் :**

தமிழ் இசை என்பது தமிழ் மொழியில் அமைந்த பாடல்களோடு இயைத்துப் பாடப்பெறும் இசையாகும். தமிழ் மொழி எக்காலத்தில் தோன்றியதோ அக்காலந்தொட்டே தமிழ் இசையும் வழங்கி வருகிறது. தமிழ்மொழியினை இயல், இசை, நாடகம் என முப்பெரும் பிரிவுகளாக்கி அவற்றுள் இசைக்கு நடுவிடங் கொடுத்து நம் முன்னையோர் பல்லாயிரம் ஆண்டுகளாக வளர்த்து வந்தனர். எத்தனையோ இசை இலக்கணங்களும், ஆயிரக்கணக்கான இசைத் தமிழ்ப்பாடல்களும் இருந்தன.

முத்தமிழ்க் காப்பியமாகிய சிலப்பதிகாரம் இன்றும் உள்ளது. அதன்கண் இசை நுட்பங்கள் பலவும், இசைக்கருவிகளின் இயல்புகளும் காணப்படுகின்றன. தேவாரம், திவ்வியப் பிரபந்தம், திருவிசைப்பா, திருப்புகழ் முதலானவை தமிழ் இசைப்பாடல்களே யாகும். பிற்காலத்து முத்துத் தாண்டவர், அருணாசலக்கவிராயர், இராமலிங்க அடிகளார், கோபாலகிருஷ்ண பாரதியார், வேதநாயகம்பிள்ளை முதலான இசையறிஞர் பலர் பாடிய இசைப்பாட்டுக்களும், பதங்களும் பலவுள்ளன. இவ்வாறிருப்பவும் நம் நாட்டு இசைவாணர்கள் வேற்றுமொழிப் பாடல்களையே பெரும்பாலும் இசையரங்குகளில் பாடி வந்தனர். தமிழ்ப் பாடல்கள் சிலதுக்கடாக்களாக இறுதியிற்பாடப்பெற்றன. இவ்விழிநிலை மாற நம் அண்ணாமலை அரசர் தமிழ் இசை இயக்கத்தைத் தொடங்கினார்கள். ''தமிழ்நாட்டில் தமிழைத்தாய்மொழியாகக் கொண்ட மக்கள் பெரும்பான்மையராய்க் குழுமியிருக்கும் இடங்களில் தமிழிசைப் பாடல்களே பாடப்பெற வேண்டும்; தமிழ்மொழிப் பாடல்களே மக்களுக்குப்பெரும் உணர்ச்சியைத் தந்து உளம் கவர்ந்து இன்புறுந் தக்கனவாகும்'' என்ற நியாயமான எண்ணம் ராஜா அவர்களின் உள்ளத்தில் பதிந்தது.

இது தமிழ் மக்களின் பெரும் பேறாயிற்று. ராஜா அவர்களின் கொள்கையைத் தமிழ் மக்கள் அனைவரும் உவந்து வரவேற்றுப் பேராதரவு தந்தனர். டாக்டர் சர். ஆர்.கே. சண்முகம் செட்டியார் அவர்கள் முதலிய பேரறிஞர்கள் ஒத்துழைத்துப் பெருந்துணை புரிந்தார்கள். எவ்விதமான நல்லதோர் இயக்கத்தையும் சிலர் எதிர்ப்பது இயற்கைதானே ! அவ்வாறே இதற்கும் எதிர்ப்பு இருந்தது. தமிழில் கீதவர்ணங்கள் இல்லை எனவும், இசைக்கு மொழி அவசியமன்று எனவும் எதிர்ப்பாளர் கூறினர். அவர்களுக்குத் தக்கவாறு மறுமொழி கூட்டியும், சிறந்த தமிழிசைப் பாடல்களுக்குப் பரிசுகள் வழங்கியும், கீதவர்ணங்கள் இசை இலக்கணங்கள் முதலான தமிழ் இசைப் பாடல் தொகுதிகள் பலவற்றைப் பல்கலைக் கழகத்தின் வாயிலாக வெளிப்படுத்தியும், பல்கலைக்கழகத்தில் தமிழ் இசைப் பாடல்களைக் கற்பிக்கச் செய்தும், ஆங்காங்குத் தமிழிசைப் பள்ளிகள் அமைக்க உதவியும், சென்னையில் தமிழிசைச் சங்கம் நிறுவிப் பல மாணவர்களுக்குத் தமிழ் இசை கற்பித்துப் பட்டம் வழங்க ஏற்பாடு செய்தும் தமிழ் இசைக்கு அரசர் அவர்கள் புத்துயிர் அளித்தார்கள். ''தத்தளித்து நின்ற தமிழ் இசைச் செல்விக்குப் புத்துயிர் ஊட்டிய நற்புண்ணியவான்'' என்று கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை அவர்கள் இவர்களைப் பாராட்டிப் பாடியிருப்பது இங்கே நினைக்கத் தக்கது.

இப்போது சிறந்த முறையில் அமைக்கப் பெற்றுச் சென்னை நகருக்கு அணியாக விளங்கும் ராஜா அண்ணாமலை மன்றம், நம் அண்ணாமலை வள்ளல் தமிழிசை வளர்ச்சிக்குச் செய்த அரும்பெரும் தொண்டுகளை நினைவூட்டித் தமிழிசை இயக்கத்தில் அவர்கள் பெரு வெற்றியின் அழியாச் சின்னமாகத் திகழ்கிறது. ராஜா அவர்களின் குமாரர்களாகிய ராஜா சர் முத்தையா செட்டியார் அவர்களும், மு. அ. சிதம்பரஞ் செட்டியார் அவர்களும் அன்று முதல் இன்றளவும் தமிழ் இசை வளர்ச்சிக்கு இடையறாது செய்து வரும் அரும்பெரும் தொண்டுகள் தமிழ் மக்களின் உள்ளங்களில் நிலையான இடம்பெற்றுள்ளன. எனவே, நம் அண்ணாமலை அரசர் தம் குடும்பத்தையே தமிழ் இசைத் தொண்டாற்றச் செய்திருக்கிறார்கள். தமிழ் இசை வளர்ச்சிக்காக அண்ணாமலை அரசர் அவர்களும், அவர்கள் குடும்பத்தாரும் அந்நாளில் வழங்கியிருக்கும் தொகை மூன்று இலட்சம் ரூபாய்க்கு மேலாகும்.

**அறுபதாம் ஆண்டு நிறைவு விழா**

ராஜா அவர்களின் அறுபதாம் ஆண்டு நிறைவு விழா, 28.9.1941-ல் செட்டிநாட்டில், மிகச் சிறப்பாக நடைபெற்றது. அவ்வமயம் அண்ணாமலைப்பல்கலைக் கழகத்தார் 1200 பக்க அளவில் ஒரு நினைவு மலரை ராஜா அவர்களுக்கு வழங்கித் தம் நன்றியறிவைப் புலப்படுத்திக் கொண்டார்கள். அம் மலரில், அறிஞர் பெருமக்கள் பலரின் வாழ்த்துரைகளும், பாடல்களும், ஆராய்ச்சிக் கட்டுரைகளும் நிறைந்துள்ளன. அவ்விழாவில் ராஜா அவர்கள், பலவகை அறங்களுக்காக மூன்றரை இலட்சம் ரூபாய் வழங்கினார்கள்.

இவ்வாறாக, பல பொதுநலப் பணிகளுக்கும் ராஜா அவர்கள் வழங்கிய தொகை 1930ஆம் ஆண்டு விலைவாசியில் ஒன்றரைக் கோடி ரூபாய்க்கு மேலாகும். இன்றைய விலை நிலவரப்படி இது பத்துக் கோடி ரூபாய் மதிப்புடையது.

அறிவாற்றலும், குணநலங்களும் வாய்க்கப்பெற்ற அண்ணாமலை அரசர் அவர்கள், இருபதாம் நூற்றாண்டு இந்திய வரலாற்றில் தன்னேரில்லாத் தனிப் பெருமகனாகப் பொன்னெழுத்துக்களால் பொறிக்கத் தக்கவர் ஆவார்கள். இவர்களின் பெரும்புகழ் அண்ணாமலைப் பல்கலைக் கழக வடிவாயும் தமிழிசை வடிவாயும், இவர்கள் செய்த பிற பல அறங்களின் வடிவாயும் இவ்வுலகம் உள்ளளவும் நின்று நிலவும் என்பது திண்ணமாகும்.

தமிழரசு
சந்தா விவரம்
ஓர் ஆண்டு ரூ.12.00
அரை ஆண்டு ரூ.6.00




# கடலுயிரியல் துறை

உலக நாடுகள் சேர்ந்து கூட்டாக நடத்திய ''இந்தியப் பெருங்கடல் ஆய்வுப் பயணத்தின்'' (International Indian Ocean Expedition) வாயிலாக நம் நாட்டைச் சூழ்ந்துள்ள கடற்பரப்பு, உலகிலேயே அதிக உற்பத்தித் திறன் கொண்ட கடற்பரப்புகளில் ஒன்று என்ற உண்மை புலனானது. இக்கடற்பரப்பின் பாலுள்ள வளங்களை (உயிர் வளம், கனிவளம்) நீண்ட நாள் போற்றிப் பாதுகாப்பதற்கும், பெருமளவு பொது நன்மைக்குச் சீரிய முறையில் பயன்படுத்துவதற்கும் எடுக்கப்பட வேண்டிய இன்றியமையாத முதல் நடவடிக்கை. இவ்வளங்களின் அளவைக் கணிப்பதுதான். இக்கணிப்பின் மூலம், கடல் வளங்களை நெறிப்படுத்துவதற்கு மட்டுமல்லாமல், கடற் சூழலின் தன்மை கெடாமல் (Pollution) தடுப்பதற்கான வழிவகைகளை உருவாக்குவது பற்றியும் பல்வேறு துறைகளைச் சேர்ந்த அறிவியலறிஞர்கள் கூடி ஆராய்தல் அவசியம். இப்படிப்பட்ட முக்கிய பணி இந்நாட்டில் இதுகாறும் சீரிய முறையில் மேற்கொள்ளப்படவில்லை.

பல்வேறு அறிவியல் துறைகளின் கூட்டுறவின் மூலமே கடலறிவியல் (Marine Sciences) பரிணமிக்கிறது. மேலை நாடுகளில் பல துறைகளைச் சார்ந்த ஆய்வாளர்கள் கடலைப் பொதுக் கருவாகக் கொண்டு, தங்கள் தங்கள் துறைகளில் ஆய்வினை நடாத்தி ஒருவருக்கொருவர் உதவியும், ஊக்குவித்தும் கடலறிவியலின் வளர்ச்சிக்கு வழிவகுக்கிறார்கள். இத்தகைய நிலையை நம் நாட்டிலும் தோற்றுவித்தால் நலம் விளையும்; நாடு முன்னேறும்.

கடல் வளங்களைப் பற்றி முழுமையான அறிவு பெறுவதற்கு, இந்தியா போன்ற வளரும் நாடுகள் கடலறிவியல் ஆய்வில் ஆர்வமுடன் ஈடுபடுவது இன்றியமையாதது. இவ்வளங்களைக் கணிப்பது, உபயோகிப்பது, பாதுகாப்பது இவைகளைப் பற்றிய ஒரு தேசியக் கொள்கையை உருவாக்க, இத்தகைய ஆய்வினால் கிட்டும் அறிவு முதிர்ச்சி அவசியம். கடலறிவியல் ஆய்வை நம்நாடு மேற்கொண்டு உலகிலே அந்த ஆய்வில் பெரும் பங்கு பெற்று, கடல் வளங்களைப் பற்றிய அறிவுச் செல்வத்தைப் பெருக்குவதோடல்லாமல், ஒரு நல்ல தேசீயக் கொள்கையை வரையறுக்கும் திறன் பெற்ற அறிஞர் குழு ஒன்றையும் உருவாக்க வேண்டிய நிலை தற்பொழுது உருவாகியுள்ளது.

கடலுயிரியல் உயர்நிலை ஆய்வு மையத்தை (Centre of Advanced Study in Marine Biology) மையத்தை உள்ளடக்கிய, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் கடலுயிரியல் துறை, இந்தியாவின் கிழக்குக் கடற்கரையில், சென்னையிலிருந்து 240 கி.மீ. தெற்கே, அண்ணாமலை நகரிலிருந்து (பல்கலைக்கழக வளாகம்) 24 கி.மீ. வடக்கே பரங்கிப் பேட்டையில் அமைந்துள்ளது. விரிந்த நோக்கோடும், தீர்க்க தரிசனத்தோடும், இத்துறை, 1958ல் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் கடலுயிரியல் நிலையமாக, நமது மதிப்பிற்குரிய இணைவேந்தர் டாக்டர் ராஜா சர். முத்தையசெட்டியார் அவர்களால் நிறுவப்பட்டது. இந் நிலையத்தைச் சீரோடும், சிறப்போடும் பத்து ஆண்டுகளுக்கு மேல் வளர்த்த-மறைந்த பேராசிரியர் திரு சேஷையா அவர்கள் அமைத்துத் தந்த நிலையான அடித்தளத்தின்மேல் தொடர்ந்து பல்கிப் பெருகி நற்பெயர் ஈட்டி வருகிறது. கல்வி மற்றும் ஆய்வுப் பணிகளில் புரிந்த சாதனைகளைக் கருத்தில் கொண்டு, 1963-ல் பல்கலைக் கழக மானியக் குழு (University Grants Commission) இக்கடலுயிரியல் துறையை உயர்நிலை ஆய்வு மையமாக (Centre of Advanced Study in Marine Biology) அங்கீகரித்தது. பத்தாண்டுகளுக்குப்பின் உயர்நிலை ஆய்வு மையங்களின் தொடர் செலவினங்களுக்

# மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்

## விஜய் காம்ப்ளெக்ஸ் & யூரியா உரங்களை தயாரிப்பவர்கள்




ஆண்டு தோறும் 5,50,000 டன் விஜய் காம்ப்ளெக்ஸ் உரங்களையும் 1,25,000 டன் விஜய் யூரியாவையும் தயாரிக்கின்றோம். தரமான உரங்களை தயாரித்தளிப்பதோடல்லாமல் இந்திய விவசாயம் சிறக்க பல விவசாய மேம்பாட்டுத் திட்டங்களை செயல் படுத்திவருகின்றோம். அவற்றுள் சில:

- **நீண்டகால விவசாய மேம்பாட்டுத் திட்டம்:**

  இந்த 22 திட்டங்களினால் 1,90,000 ஹெக்டர் நிலத்தைக் கொண்ட 76,000 குடும்பங்கள் பலனடைந்து வருகின்றன.

- **கிராம ஏற்புத் திட்டம்:**

  விவசாய உற்பத்தியைப் பெருக் குவதை குறிக்கோளாகக் கொண்ட இத்திட்டத்தினால் 200-க்கும் மேற்பட்ட கிராமங்கள் பயன் பெற்றுள்ளன.

- **துரித மண் பரிசோதனைத் திட்டம்:**

  விவசாயிகள் மண் மாதிரிகள் அனுப்பிய 4 வாரங்களுக்குள் முடிவுகளும் சிபாரிசுகளும் அவர்களுக்கு அனுப்பி வைக்கப் படுகின்றன.

- **நவீன விவசாய நுணுக்கங்களை தெரிவிக்கும் திட்டம்:**

  நடமாடும் திரைப்பட ஊர்திகள், வானொலி, சினிமா, செய்தித் தாள்கள் மற்றும் சாகுபடி குறிப்புப் புத்தகங்கள் முதலிய பல்வேறு சாதனங்கள் மூலமாக விவசாயிகள் புரிந்து செயலாற்றும் வகையில் நவீன விவசாய நுணுக்கங்கள் தெரிவிக்கப் படுகின்றன.

மேலும், விவசாய கருத்தரங்குகள், விவசாயிகள் பயிற்சி திட்டங்கள் போன்றவற்றை செயல்படுத்தி விவசாயிகளுக்குத் தேவைப்படும் ஆலோசனைகளும் தரப்படு கின்றன.

**மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் — இந்திய விவசாய வளர்ச்சியில் முழுமையான ஈடுபாடு கொண்டுள்ள நிறுவனமாகும்.**

VIJAY
MADRAS FERTILIZERS

மேலும் விவரங்களுக்கு, மண்டல மேலாளர்
மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட், 10, வில்லியம்ஸ் ரோடு, திருச்சி 620 001

MFL 2111

கான மானியத்தை அந்தந்த மாநிலங்களே ஏற்க வேண்டும் என்ற பல்கலைக் கழக மானியக் குழுவின் வேண்டுகோளின்படி 1974-ஆம் ஆண்டிலிருந்து மாநில அரசு இந்த ஆய்வு மையத்தின் தொடர் செலவினங்களுக்கான மானியத்தை அளித்துப் பேருதவி புரிகிறது. இந்த வகையில் 1979-80 நிதி ஆண்டிற்கு இந்த உயர் நிலை ஆய்வு மையத்திற்கும், கடலுயிரியல் நிலையத்திற்கும் சேர்த்து, 2,50,000 ரூபாய்களை மானியமாக மாநில அரசு அளித்துதவியுள்ளது.

கடலுயிரியல் ஆய்வுக்கு மிக ஏற்ற இடத்தில் இம்மையம் அமைந்துள்ளது. கழிமுகம், உப்பங்கழி, கடல், நன்னீர்ப்பரப்புகள், மற்றும் மாங்குரூவ் (Mangrove) பிச்சாவரப் பகுதி சதுப்பு நிலக் காடுகள் போன்ற பலதரப்பட்ட சூழல்கள் இம்மையத்திற்கு அருகில் அமைந்துள்ளது ஒரு சிறப்பாகும். கடல் மேற்செல்லக் கூடிய 33' இயந்திரப் படகுகள் இரண்டும், சிறு படகுகள் இரண்டும், ஒரு நார்க் கண்ணாடிப் படகும் இம்மையத்தில் உள்ளன. கடலாய்விற்குத் தேவையான அனைத்துக் கருவிகளும் இங்குள்ளன. மேலும், ஒரு நுண்ணுயிராய்வுக் கூடமும், கதிரியக்க ஆய்வுக் கூடமும் இங்கு நிறுவப்பட்டுள்ளன.




முதற்கட்ட ஆரம்ப அணுகுமுறை ஆய்விற்குப் பின் கரையோரக் கடற்பரப்பின் வளங்களைப் பற்றிய அறிவைத் திட்டமிட்டுச் சேகரிக்கும் பெரும் பொறுப்பை ஏற்க வேண்டிய இரண்டாவது கால கட்டத்தில் இம்மையம் நடைபோடுகிறது. இச் சிறப்பு வாய்ந்த கால கட்டத்தில் கீழ்க் காணும் குறிக்கோள்களை எட்டுவதற்கு அரும்பணியாற்ற இம்மையம் உறுதி மேற்கொண்டிருக்கிறது.

நாட்டின் நலனுக்காக, கரையோரக் கடற்பரப்பின் உணவு மற்றும் உலோக வளங்களைச் செவ்வனே பயன்படுத்துவதற்கும், கடல்நீரைப் பாதிக்கக்கூடிய விளைவுகளைப் பற்றிப் புரிந்து கொள்வதற்கும் தேவையான அறிவு மேம்பாட்டிற்காகப் பாடுபடுவது.

பல்லறிவியற் துறைகளின் சங்கமத்தில் பிறப்பதுதான் கடலறிவியல் என்பதைக் கருத்தில் கொண்டு இந் நாட்டின் கடலாய்வு மற்றும் கல்விப்பணிகளை வலுப்படுத்த, இந்த மையத்தைக் கடல் வளங்களைப் பற்றிய கருத்துக்களைத் திரட்டும், ஒரு கடலறிவியற் கழகமாக (Institute of Marine Sciences) மாற்றியமைப்பது.

மேற் சொன்னவாறு கடலறிவியற்கழகம் நிறுவுவதன் வாயிலாகக் கடலறிவியலின் வேறுபட்ட பல துறைகளில் உயர் நிலைக் கல்வியளிக்கக்கூடிய வசதிகளையும் வாய்ப்புகளையும் ஏற்படுத்துவது.

இந்தக் குறிக்கோள்களை அடைவதற்குத் தேவையான அடிப்படை ஆய்வுப் பணிகளைப் பற்றிய அறிவியல் திட்டத்தின் சிறப்பு அம்சங்களாவன:

புரதம் நிறைந்த உணவுப் பொருட்களையும், பயனுள்ள மருந்துகளையும், அளிப்பதால் மனிதனின் கருத்தைக் கவருகிறது கடல். இக்கடலில் வாழும் உயிரினங்களுக்கிடையேயும், உயிரினங்களுக்கும், கடல் நீருக்குமிடையே நிலவும் உறவுமுறைகளை ஆய்ந்தறிவது.

பூச்சி மருந்துகள் மற்றும் பல ஊறு ஏற்படுத்தக் கூடிய வேதியற் பொருட்கள் கடலில் கலப்பதால் விளையும் கடல் நீர்க்கேடு பற்றியும், அவை கடல் வாழ் உயிரினங்களில் ஏற்படுத்தும் விரும்பத்தகா விளைவுகளைப் பற்றியும், கடல் நீரிலுள்ள அப்பொருட்களின் அளவு பற்றியும் ஆராய்வது.

கரையோரக் கடற் பரப்பின் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்கான வழிவகைகளைக் கண்டறிவது. மீன், மற்றும் பல பல கடலுயிரினங்களின் வளர்ப்புக்கேற்ற இடங்களை வரையறுப்பது. வளர்ப்பதற்கேற்ற மீன் மற்றும் கடலுயிரின வகைகளைத் தேர்ந்தெடுப்பது.

புற்றுநோயையும், நோயுண்டாக்கவல்ல சில நுண்ணுயிர்களையும் எதிர்க்கும் ஆற்றல் கொண்ட மூலக்கூறுகளைத் தரவல்ல நுண்ணுயிர்களைப் பற்றி ஆய்வு நடத்துவது. நுண்ணுயிர்களின் உதவியால் தாதுக்களிலிருந்து உலோகங்களைப் பிரித்தெடுப்பதற்கான நடைமுறை சாத்தியக் கூறுகளைக் கண்டறிவது. நுண்ணுயிர்களால் மீன் போன்ற கடல் வாழ் உயிரினங்களுக்கு ஏற்படும் நோய்களைப் பற்றியும், நோய்த் தடுப்பு வழிமுறைகளைப் பற்றியும் தெளிந்தறிவது. இதுபோன்ற மனித இனத்திற்கு மிகுந்த பயன்விளைக்கும் ஆய்வுகளின் காரணமாக, கடலறிவியலிலே, நுண்ணுயிரியல் பிரிவு சிறப்பானதொரு இடத்தை வகிக்கிறது. இங்கு தவிர, இந்தியத் திருநாட்டிலே வேறெந்த ஆய்வுக் கூடத்திலும் கடல்வாழ் நுண்ணுயிரியல் ஆய்விற்கான பயிற்சி அளிக்கப்படவில்லை என்பது இங்கு நினைவு கூரத்தக்கது.

மேற்சொன்ன ஆய்வுப் பணிகளால் கடலுயிரியற் கழகம், நாட்டு மேம்பாட்டில் ஒரு சிறப்பான பங்கு வகிக்கும் நிலை பெறும் என்பதில் ஐயமில்லை. இந்நாட்டு மற்றும் பன்னாட்டுக் கடலறிவியல் அறிஞர்கள் பரஸ்பர நன்மைக்காக, கருத்துப் பரிமாற்றம் செய்யும் ஒரு களமாக இக் கடலறிவியற்கழகம் அமையும் என்பது திண்ணம்.

வாய்மையே வெல்லும்

# தமிழ் இலக்கிய அமைப்புகளுக்கு ஓர் வேண்டுகோள்

ஐந்தாவது உலகத்தமிழ் மாநாடு 1980ஆம் ஆண்டு
மதுரை மாநகரில் சிறப்பாக நிகழவுள்ளது.
தமிழகத்திலும், இந்தியாவின் பிற
மாநிலங்களிலும் அயல்நாடுகளிலும் உள்ள
தமிழ் இலக்கிய அமைப்புகள் சிறந்த பணிகளைப்
புரிந்து வருகின்றன. அத்தகைய
அமைப்புகளின் பட்டியலொன்றைத்
தயாரிப்பதற்காக அவ்வமைப்புகள் தத்தம்
முகவரியையும் ஆற்றிவரும் பணிகளையும்
தெரிவிக்க வேண்டுகிறோம்.






தனி அலுவலர்
5வது உலகத் தமிழ் மாநாடு
கல்வித்துறை
தமிழ்நாடு அரசு தலைமைச் செயலகம்.
சென்னை-600 009.

# தமிழ்ப் பணி

**டாக்டர் ஆறு. அழகப்பன்**
**தமிழ்த் துறை,**

தஞ்சைக்குப் பெருமை அளிப்பது பிரகதீசுவரர் ஆலயம். திருநெல்வேலிக்குப் பெருமையளிப்பது குற்றால நீர் வீழ்ச்சி, செங்கல்பட்டுக்குப் பெருமையளிப்பது மாமல்லபுரம் சிற்பக்கலை, திருவண்ணாமலைக்குப் பெருமையளிப்பது அண்ணாமலை தீபம். தமிழ்நாட்டுக்குப் பெருமையளிப்பது அண்ணாமலைப் பல்கலைக் கழகம். தில்லையில் அமைந்த கூத்தன் திருக்கோயிலைப் போல, அதன் எல்லையில் ஒப்பற்ற கலைக்கோயில் பல்கலைக் கழகம். அறத் தந்தை அண்ணாமலை வள்ளலின் அருட் பெருங்கொடையால் உருவாகிக் கடந்த 50 ஆண்டுகளாகத் தமிழ் நாட்டு வரலாற்றோடு இரண்டறக் கலந்து அது வளர்ந்து வருகின்றது. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் மொத்த வரலாறு பொன்னெழுத்துக்களால் பொறிக்கத்தக்கது.

### அறத்தந்தையின் குறிக்கோள்

பல்கலைக் கழகத்தின் முதல் ஆளவை மன்றத்தின் தொடக்க விழாவில் அறத் தந்தை அண்ணாமலை வள்ளல் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டார்கள்:

''தமிழையும் தமிழ்ப் பண்பாட்டையும் உலகறியச் செய்வதே இப்பல்கலைக் கழகத்தின் தலை சிறந்த குறிக்கோளாக இருக்கும்.''

மேடை அலங்காரத்திற்காகவோ, கை தட்டலுக்காகவோ இக்கருத்துக்களைக் கூறவில்லை. சங்கங்கள் பண்டைக் காலத்தில் தமிழ் வளர்த்தது போல, இந் நூற்றாண்டில் தமிழ் வளர்க்கும் தமிழ்ச் சங்கமெனப் பல்கலைக் கழகம் திகழ்கிறது. ஒரு மொழி இலக்கிய இலக்கணங்களைப் புலவர் படைப்பர், புரவலர் காப்பர்; கழகம் வளர்க்கும். இம் மூச் செயல்களும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் நிரம்ப இருந்த காரணத்தால்தான் இங்குச் செந்தமிழ் செம்மாப்புடன் வளர்ந்திருக்கின்றது. சிந்தனைச் செழுமையைப் படைக்கும் புலவர்களும் அப்புலவர்களைக் காத்திடும் புரவலராக அண்ணாமலை வள்ளலும் அறிவுத்தொண்டாற்றிடும் கழகமாக அண்ணாமலைப் பல்கலைக்கழகமும் இருந்து வரும் காரணத்தால் தமிழுக்கு ஒரு தனி வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது.

இப்பல்கலைக் கழகம் செய்த தொண்டினைச் சிறிது காண்போம்:

### பணிபுரிந்த தமிழறிஞர்கள்

சங்கப் புலவர் பிசிராந்தையார், தம்முடைய தலை நரைக்காமல் இருப்பதற்குரிய கராணங்களில் ஒன்றாகச் சான்றோர்கள் வாழும் ஊர் தம்மூர் என்ற காரணத்தைக் கூறுகின்றார். உலக அரங்கில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறை, வரலாற்றுச் சிறப்படைவதற்குரிய காரணம், செந்தமிழ்ச் சான்றோர்கள் பலரும் இங்குப் பணிபுரிந்ததாலேயே யாகும். இந்நூற்றாண்டில் தமிழ்ப்பெரும் புலவர்களில் பலரும் தமிழ்த் துறையில் பேராசிரியர்களாகவும், ஆசிரியர்களாகவும், ஆராய்ச்சியாளர்களாகவும் பணி புரிந்திருக்கின்றனர். தமிழ்த்துறையில் முதல் தலைவரான சட்டப் பேரறிஞர் பேராசிரியர் கா. சுப்பிரமணியப்பிள்ளை, தமிழ்ப் பேராசிரியராக விளங்கத் தமிழ்த் துறையின் வரலாறு பீடுடன் தொடங்கிற்று.

வாழும் தமிழுக்காக வாழையடி வாழையாகச் சொல்லின் செல்வர் ரா.பி. சேதுப்பிள்ளை, சுவாமி விபுலானந்தர், எஸ். பொன்னோதுவார், சர்க்கரை

---

தமிழனுக்குத் தாய்மொழியைக் கற்றுக் கொடுத்த காரணத்திற்காகத் தமிழாசிரியர்களின் சம்பளம் குறைந்தது. அவர்களை இகழ்வது, தள்ளி வைப்பது ஆகியவைகளின் பிரதிபலிப்பு மாணவர்களிடையும் தென்பட்டது. தமிழ் வகுப்பு என்றால், இஷ்டப்பட்டால் போகிற வகுப்பு என்று நினைத்தார்கள். தமிழ் வகுப்பு நடந்து கொண்டேயிருக்கும்; தெய்வயானையை விட்டு விட்டு வள்ளியைத் தேடிக்கொண்டு முருகன்போவதுபோல, மாணவர்கள் வாத்தியாரை விட்டுவிட்டு வெளியே போய்விடுவார்கள்; ஆனால், அந்த நிலை இன்று மாறிவிட்டது. எங்குச் சென்றாலும் தமிழ், தமிழர் என்ற பேச்சுக்கள். நான் பார்த்திருக்கிறேன் ஓரிரண்டு ஆண்டுகளாக; 'ஆங்கிலத்திலேயே பேசுவேன்' என்று சபதம் செய்து கொண்டிருந்தவர்கள்கூட, இன்று தமிழிலேயே பேசுவேன்; தமிழிலேயே எழுதுவேன்; எண்ணுவேன் என்று சொல்வதை.

தமிழிலே கவிதைகள்; தமிழிலே நாடகங்கள்; தமிழிலே இசைகள்; இவைகளை யாரும், எங்குச் சென்றாலும் பார்க்கலாம். நேற்றுக் கூப்பிட்டிருந்தால் 'வரமாட்டேன்' என்று



இன இறுமாப்புடன் இருந்திருப்பவர்கள்கூட, இன்று தாமும் தமிழர், தமிழர் இனம் என்று சொல்லிக் கொள்ள முற்படுகிறார்கள். ஆனால், இந்த நிலை என்றும் மாறாமல் நிலைத்திருக்குமாக!

—பேரறிஞர் அண்ணா.

**[20-9-1945-ல் அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழா மன்றத்தில் ஆற்றிய உரையிலிருந்து.]**



டாக்டர் நாவலர் சோமசுந்தர பாரதியாருக்குப் பொன்னாடை போர்த்துதல்

இராமசாமிப் புலவர், கந்தசாமிக் கவிராயர், நாவலர் சோமசுந்தர பாரதியார், பண்டிதமணி மு. கதிரேசஞ்செட்டியார், மகாவித்துவான் இராகவையங்கார், நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார், பல்கலைச் செல்வர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார், டாக்டர் அ.சிதம்பரநாதன், முத்தமிழ் வித்தகர் லெ.ப. கரு.இராமனாதன் செட்டியார், ஆ. பூவராகம் பிள்ளை, தி. பொ. பழனியப்ப பிள்ளை, ஆர்.பி. அமிர்தலிங்கம் பிள்ளை, மு. அருணாசலம் பிள்ளை, கோ. சுப்பிரமணிய பிள்ளை, கல்வெட்டறிஞர் தி. வை. சதாசிவப்பண்டாரத்தார், டாக்டர் வ.சுப. மாணிக்கனார், உரைவேந்தர் ஔவை. துரைசாமிப்பிள்ளை, பண்டிதர் கி. இராமாநுச அய்யங்கார், லால்குடி நடேச முதலியார், உலக ஊழியர் ஈ.எஸ். வரதராஜ ஐயர், மொழி ஞாயிறு ஞா. தேவநேயப் பாவாணர், மு.சண்முகம்பிள்ளை, வி.மு. சோமசுந்தரம் பிள்ளை, டாக்டர் க. ஆறுமுகனார், டாக்டர் கு. தாமோதரனார், க. வெள்ளை வாரணனார், கே.என். சிந்தாமணி, ஏ. இராமசாமி, அழகிய சொக்கலிங்கம் முதலியோர் பணியாற்றித் தமிழ்த் துறை விளங்கியிருக்கின்றது. இத் தமிழறிஞர்களின் தமிழ்ச் சால்பும், நுண்மாண் நுழைபுலமும் தெய்வத் தமிழ் மேல் அவர்கள் கொண்ட ஆராக் காதலும் தாம், தமிழ் மொழிக்குப் பேறாக அமைந்தன எனலாம்.

1925இல் பல்கலைக் கழகம் தோன்றுவதற்கு முன்பு மீனாட்சிக் கல்லூரியாக 1920இல் இப்பல்கலைக்கழகத்தின் தொடக்க உரு இருந்தபொழுது ''தமிழ் காத்தார்'' என்று போற்றப்படும் டாக்டர். உ,வே. சாமிநாதய்யர் தமிழ்க்கல்லூரி முதல்வராக இருந்து பெருமை சேர்த்துள்ளார்.

'தமிழிசைக் காவலர் முத்தையவேள்' கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையைத் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றப் பெருமுயற்சி எடுத்துக் கொண்ட வரலாற்றினைத் தமிழுலகம் நன்கறியும்.

### துணைவேந்தர் பதவியில் தமிழ்ப் பேராசிரியர்கள்

பல்கலைக் கழகங்களில் பொறுப்பும் சிறப்பும் உடைய பதவி, துணைவேந்தர் பதவியாகும். இப்பதவி, பல்கலைக்கழக இணைவேந்தர், மாநிலத்தை ஆட்சி செய்யும் அரசினர், நாட்டு ஆளுநர் இவர்களின் கலந்துரையாடலுக்குப் பின்வரும் கருத்தொர்ப்புமையினாலேயே தீர்மானிக்கப்படுவதாகும். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராகப் பணிபுரிந்த பன்மொழிப் புலவர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், முதலமைச்சர் பக்தவத்சலம் காலத்திலும், டாக்டர் வ. சுப. மாணிக்கனார், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். காலத்திலும் மதுரைப் பல்கலைக் கழகத்திற்குத் துணைவேந்தராக நியமனம் செய்யப்பெற்றனர். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் நிகழ் நிலை துணைவேந்தர் பதவி ஏற்பட்ட காலங்களில் செந்தமிழ்க்காவலர் டாக்டர் சிதம்பரநாதனார் ஒருமுறையும், முத்தமிழ் வித்தகர் லெ. ப. கரு. இராமனாதனார் மும்முறையும் இருந்திருக்கின்றார்கள்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர்களாக இருந்த சில பெரியார்கள் தமிழ்ப் பேராசிரியராக இல்லாவிட்டாலும், ஆழ்ந்த தமிழறிவும், தமிழ்க் காதலும் கொண்டவர்களாக விளங்கியிருக்கின்றார்கள். 1951-52இல் துணைவேந்தராக விளங்கிய ஆர்.கே. சண்முகம் செட்டியார், சிலப்பதிகாரம் புகார்க் காண்டத்தைப் பதிப்பித்த பெருமைக்குரியவர். மேலும், அவர் டாக்டர் இராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்களுடன் தமிழிசையைக் காத்த தானைத் தலைவர்களில் ஒருவராக விளங்கி இருக்கின்றார். அதுபோல 1955 முதல் 1961 வரையில் துணைவேந்தராகப் பணிபுரிந்த தி.மு. நாராயணசாமிப் பிள்ளை இறை இலக்கியங்களில் பெரும் ஈடுபாடு கொண்டவர். தமிழிசைச் சங்கத்தின் தலைவராக அவர் விளங்கி, நிலையான தமிழிசை வளர்ச்சிக்கு வழிகண்டவர்களில் ஒருவராகவும் விளங்கியுள்ளார். 1961-62இல் துணைவேந்தராக விளங்கிய வி. சுப்பிரமணியம் தமிழிலக்கிய அறிவும், தமிழ் வளர வேண்டும் என்ற வேட்கையுமுடையவராக விளங்கினார்.

### தமிழுக்கெனத் தனிச் சிறப்புகள்

ஆங்கில மோகம் கொடிகட்டிப் பறந்த வேளையில், சீரிளமைத் தமிழுக்குச் செட்டி நாட்டரசர் ஏற்றிய தமிழ்க் கொடி பட்டொளி வீசிப் பறக்கத்தொடங்கியது. தமிழுக்கென்று தனித்துறை கண்ட கழகம், அண்ணாமலைப் பல்கலைக் கழகம். தமிழுக்கென்று கலைப்பிரிவு, கீழ்த்திசைப் பிரிவு, ஆராய்ச்சிப் பிரிவு என்ற மூன்று பிரிவுகளை அமைத்து மூன்று துறைகளுக்கும் பேராசிரியர்களை நியமித்த சிறப்புடை

யது. பிற துறை ஆசிரியர்களை விடக் குறைந்த ஊதியம் வாங்கிய தமிழாசிரியர்களுக்கும் ஒத்த ஊதியம் முதன் முதலாகக் கொடுத்த பெருமையுடையது. தமிழில் சிறப்பாக ஆராய்ச்சி செய்ததற்காக அ. சிதம்பரநாதனாருக்கு டாக்டர் பட்டம் முதன் முதல் கொடுத்தும், நெடுங்காலம் நிலையான தமிழ்த் தொண்டு ஆற்றியதற்காக நாவலர் சோமசுந்தர பாரதியார்க்குப் பல்கலைக் கழக் வெள்ளி விழாவில் டாக்டர் பட்டம் அளித்தும் சிறப்பினைக் கொண்டது. தமிழில் பி.ஏ. ஆனர்சு, புலவர், ஆசிரியப் பயிற்சி போன்ற பட்ட வகுப்புகள் முதல் முதலாக ஏற்படுத்தியது இப்பல்கலைக் கழகத்தில்தான்.

**தமிழ்ப் படிப்புகள் :**

தமிழுக்கென்று தனியே பல பட்டப் படிப்புக்களைக் கொண்டிலங்குவது இப்பல்கலைக் கழகம், தமிழ் பி.ஏ., எம்.ஏ., பி.ஓ.எல்., எம்.ஓ.எல், புலவர், எம்.பில்., டாக்டர் முதலிய பல பட்டப்படிப்புகள் நாட்டின் பல்வேறிடங்களிலிருப்பினும் இப்பல்கலைக் கழகத்தில் மாணவர்கள் பெரிதும் விரும்பி வந்து பயின்று சிறக்கின்றனர். ஆங்கிலம், கலை, அறிவியல் போன்ற பட்டப் படிப்புக்களில் தமிழை முதற்பாடமாக எடுத்துப் படிக்கும் மாணவர்கள் சுமார் ஈராயிரவர் உள்ளனர். பட்டப் படிப்பு நிலையில் வரலாறு, பொருளாதாரம், வணிகவியல் முதலிய துறைகளைத் தமிழ் வாயிலாகவும் பயின்று வருகின்றனர். தமிழ்த்துறையில் பல்வேறு இலக்கண இலக்கியங்களைப் பற்றி இதுவரை பதினான்கு கருத்தரங்குகள் நடந்துள்ளன.

இவ்வறிவாலயத்தில் தமிழ்ப் படித்துப்பட்டம் பெற்று இன்று நாட்டிற்கும் மொழிக்கும் காவலராகவும் தூதுவர்களாகவும் விளங்குபவருள் நாவலர் நெடுஞ்செழியன், பேராசிரியர் அன்பழகன், குமரி அனந்தன், ப. நெடுமாறன், ந.ரா. முருகவேள், கவிஞர் உலகநாதன், அறிவுடைநம்பி, திருமாறன் முதலியோர் குறிப்பிடத்தக்கவர்கள்

இப் பல்கலைக் கழகத்தில் பயின்றவரான டாக்டர் முத்து சண்முகம், மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்தில் தமிழ்த் துறைத் தலைவராகவும், டாக்டர் க. ஆறுமுகனார் டெல்லி பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறையின் தலைவராகவும், டாக்டர் சிங்காரவேலு உஸ்மானியா பல்கலைக் கழகத்தின் தமிழ்த் துறைத் தலைவராகவும், டாக்டர் இளையபெருமாள், திருவனந்தபுரம் பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத் தலைவராகவும் விளங்கி வருகிறார்கள்.

மேலும், இப்பல்கலைக் கழகத்தில் தமிழ் பயின்றவர்களான டாக்டர் வி.ஐ. சுப்பிரமணியம் திருவனந்தபுரம் மொழியியல் துறை இயக்குநராகவும், தலைவராகவும், டாக்டர் கா. மீனாட்சிசுந்தரம் தமிழ்நாட்டுக் கல்லூரித் துணை இயக்குநராகவும், தி.அ. அழகிய சொக்கலிங்கம் மதுரை காமராசர் பல்கலைக் கழகக் கல்லூரிகளின் இணைப்பாளராகவும், டாக்டர் ச. வே. சுப்பிரமணியம் உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநராகவும், டாக்டர் இரா. சாரங்கபாணி காரைக்குடி அழகப்பா கல்லூரித் தமிழ்த்துறை தலைவராகவும், டாக்டர் மெ. சுந்தரம் மாநிலக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியராகவும், வ. பெருமாள் மைசூர் உரிகம் தமிழ்த்துறைத் தலைவராகவும், திருவாட்டி சரோஜினிதேவி பழனியாண்டவர் மகளிர் கல்லூரி முதல்வராகவும், கொண்டல் கே. எஸ். மகாதேவன் தமிழ் வளர்ச்சிக் கழக இயக்குநராகவும், டாக்டர் கு. திருமேனி தேசியக் கல்லூரி தமிழ்த்துறைத் தலைவராகவும், செல்வி சோ. பாகீரதி திருக்குற்றாலம் பராசக்திக் கல்லூரி முதல்வராகவும், டாக்டர் பா. சௌந்தரா தூத்துக்குடி மகளிர் கல்லூரி முதல்வராகவும் இருந்து வருகிறார்கள்.

இங்கு பயின்று பல கல்வி நிலையங்களில் பல்லாற்றானும் தமிழ்த் தொண்டாற்றி ஒய்வு பெற்றுள்ள பேராசிரியர் சரவண ஆறுமுக முதலியார், அ.ச. ஞானசம்பந்தம் முதலியோர் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவார்கள். டாக்டர் தனிநாயக அடிகள், டாக்டர் ப. அருணாசலம் இருவரும் அக்கரைச் சீமையில் தமிழ் வளர்த்தவர்கள்.

**தமிழ் ஆராய்ச்சி**

தமிழ்த் துறைக்கென்று தனி ஆராய்ச்சித் துறை 1952ஆம் ஆண்டு தொடங்கப்பட்டாலும், பல்கலைக்கழகத் தொடக்கக் காலம் முதற் கொண்டே தமிழறிஞர் குழாம் தமிழ் ஆராய்ச்சிப் பணியைத் தொய்வின்றி மேற்கொண்டு வந்திருக்கின்றன. தமிழ் மொழி உள்ளளவும், ஆய்வாளர்கள் அறிய விரும்பும் ஆராய்ச்சிக் கருத்துக்களைத் தமிழ் ஆராய்ச்சியாளர்கள் வெளியிட்டுள்ளனர்.

**வரலாற்று நூல்கள்**

ஆங்கில இருட்டில் கிடந்த தமிழ்நாட்டு வரலாற்றையும், தமிழிலக்கிய வரலாற்றையும் துருவியாராய்ந்து பொதுமக்களுக்கும், தமிழ் வாணர்களுக்கும் பல்கலைக்கழகம் வெளியிட்டிருக்கின்றது. கல்வெட்டறிஞர் தி.



டாக்டர் ரா.பி.சேதுப்பிள்ளை அவர்களுக்குப் பொன்னாடை போர்த்துதல்



விபுலானந்தர்

வை. சதாசிவ பண்டாரத்தார் பிற்காலச்சோழர் வரலாறு, இருண்ட காலத் தமிழிலக்கிய வரலாறு (கி.பி. 250 முதல் 600 வரை), கி.பி. 13, 14, 15ஆம் நூற்றாண்டு இலக்கிய வரலாறு, ஔவை சு. துரைசாமிபிள்ளை எழுதிய கி.பி. 7ஆம் நூற்றாண்டு முதல் 10ஆம் நூற்றாண்டு வரை உள்ள தமிழிலக்கிய வரலாறு, ஈ.எஸ். வரதராஜய்யர் எழுதிய கி.பி. 1 முதல் 1100 வரை முடிய உள்ள சைன, புத்த, வைணவ, வரலாறு ஆகியவை தெளிவான வரலாற்று நூல்களாகும். மேலும், சில வரலாறுகள் பல்லோர் பாராட்ட வெளிவந்திருக்கின்றன. இரா. இராகவையங்காரின் 'தமிழ் வரலாறு' தமிழ்த்துறை ஆசிரியர்கள் எழுதிய 'தமிழ்ப் புலவர் வரலாற்றுக் களஞ்சியம்' முதலியன அவைகளில் குறிப்பிடத்தக்கன.

**கம்பராமாயணம்**

ஒரு காலத்தில் கம்பர் என்றால் அவர் பிறந்த தேரழுந்தூர் நினைவுக்கு வரலாம். ஆனால், இன்று கம்ப இராமாயணம் என்று கூறிடும்போது பல்கலைக்கழகம் தன் வெள்ளி விழாத் தொடக்கத்திலிருந்து வெளியிட்ட கம்பராமாயணப் பதிப்புக்கள் நினைவுக்கு வரும். கம்பராமாயணப் பழைய பதிப்புக்களையும், ஐம்பதுக்கு மேற்பட்ட ஓலைச்சுவடிகளையும் வைத்துப் பாட பேதங்களைக் கண்டறிந்து, உண்மையான மூல பாடங்களைத் தெரிந்தெடுத்து, அப்பாடல்களுக்குரிய பொருளையும், சிறப்பினையும், தக்காரைக் கொண்டு எழுதிக் கம்பராமாயணம் முழுமையும் ஆறு காண்டங்களாகப் பதினாறு தொகுதிகளாகச் செம்பதிப்பாக வெளியிட்டு மிக உயர்ந்த பணியைப் புரிந்துள்ளது இப்பல்கலைக் கழகம். இச் செம்பதிப்புகள் தன் நேரில்லாத் தலைவன் என்று அழைப்பது போல தன் நேரில்லாப் பதிப்புக்களாக விளங்குகின்றன. மூலபாடத்தை மட்டும் கொண்ட ஏழாவது காண்டமான உத்தரகாண்டம் தக்க பதிப்பே இல்லாமல் இருந்தது. ஆனால், இன்று மூலத்துடன் விளக்கவுரை, தெளிவுரை வித்வான் வேங்கட ராமச் செட்டியார் அவர்களால் சிறப்பாக எழுதப்பட இன்று பொன்விழா வரும் இவ்வேளையில் அப் பெரும்பணி முழுமையடைகிறது.

பல்கலைக் கழகத்தின் கம்ப ராமாயணச் செம்பதிப்புகள், ஆங்கில நாடக ஆசிரியர் ஷேக்ஸ்பியரின் செம்பதிப்புகளோடு எண்ணத்தக்கவை.



டாக்டர் உ.வே.சா

**சங்க இலக்கியங்கள்**

சங்கத் தமிழ் இலக்கியங்களுக்கு உரைகளையும், நயங்களையும் பல்கலைக் கழகம் வெளியிட்டுள்ளது. ஔவை சு. துரைசாமிப் பிள்ளை உரை எழுதிய 'ஐங்குறு நூறு', இரா. இராகவையங்கார் எழுதிய 'குறுந்தொகை விளக்கம்', 'பெரும்பாணாற்றுப்படை யாராய்ச்சி', 'பட்டினப்பாலை ஆராய்ச்சி' முதலியன தமிழ்த் தும்பிகள் விரும்பும் நல்ல இலக்கியத் தேனடைகளாகும்.

**சமய நூல்கள்:**

சமய நூல்கள் பலவற்றைப் பல்கலைக் கழகம் போற்றிப் பொதுமக்களுக்குப் புரியும் வகையில் வெளியிட்டுள்ளது. என். கந்தசாமிப் பிள்ளையவர்களின் திருவாசகப் பதிப்பும், வித்வான். வெள்ளைவாரணாரின் பன்னிரு திருமுறை வரலாறும், சித்தாந்த புலவர் சிவப்பிரகாச தேசிகரின் திருமந்திர உரையும், ஔவை. சு. துரைசாமிப் பிள்ளையவர்களின் ஞானாமிர்தமும், சிவ ஞானபோதச் சிற்றுரையும், வள்ளலார் பாடல்களுக்கு விளக்கமும் இன்னபிற சில சமயப் பதிப்புகளும் பெரிதும் வரவேற்கப்படும் நூல்களாக விளங்கி வருகின்றன.

**இலக்கண நூல்கள்**

இலக்கண நூல்கள் பலவற்றைப் பல்கலைக் கழகம் மாணவர்களுக்கு மிகக்குறைந்த விலையில் வெளியிட்டுள்ளது. மாணவர்களுக்கு உதவிபுரியும் இத்திட்டத்தின் அடிப்படையில் யாப்பருங்கலக்காரிகை, நம்பியகப் பொருள், தொல்காப்பியம் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் முதலிய நூல்கள் வெளிவந்துள்ளன.

**மொழி பெயர்ப்புகள்**

மொழி பெயர்ப்புப் பணிகளிலும் பல்கலைக்கழகம் முன்னின்று தொண்டாற்றி இருக்கின்றது. கௌடல்யரின் அர்த்தசாஸ்திரத்தைப் பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியாரும், அறிஞர் பி.எஸ். இராமானுசாச்சாரியாரும் மொழி பெயர்த்ததோடு மட்டுமின்றி, விளக்கவுரைகளோடு கூடிய ஒப்பீட்டாய்வினையும் செய்துள்ளனர். இந்திய முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர்

கா. சு. பிள்ளை



இராதாகிருஷ்ணன் தொகுத்த கீழை, மேலைநாட்டுத் தத்துவ வரலாறுகளை இராவ்சாகிப் கு. கோதண்டபாணிபிள்ளையும், சி. இராமலிங்கமும் மொழி பெயர்ப்பு நூலென்றறியாத வகையில் மூலநூல் போல் மொழி பெயர்த்துள்ளனர்.

### தமிழிசை நூல்கள்

நிறுவியவரின் இலட்சியத்திற் கேற்பத் தமிழிசைத் துறைக்கும் இப்பல்கலைக்கழகம் நிரம்பத் தொண்டாற்றி வருகிறது. முத்துத் தாண்டவர், கோபால கிருஷ்ணபாரதி, பெ. தூரன், சுத்தானந்த பாரதி, முத்துசாமிக் கவிராயர், இராமசாமி நாயர் முதலிய இசைவாணர்களுடைய பாடல்களையும் இருபது நூல்களாக வெளியிட்ட பெருமையைப் பல்கலைக் கழகம் பெற்றுள்ளது. இசைப்பாடல் தொகுப்புகளேயன்றி இசைக் கருவிகள் பற்றியும், அவற்றை இயக்கும் முறைகள் பற்றியும் நூல்கள் வெளிவந்துள்ளன. இத்துறையில் இசைக்கடல் நீந்திய டைகர் வரதாச்சாரி, சித்தூர் சுப்பிரமணிய பிள்ளை, இசையரசு தண்டபாணி தேசிகர் முதலியவர்கள் பணியாற்றி இசைத்தமிழ் வளர்த்திருக்கின்றனர். இத்துறையில் ஓவியம், நாடகம் முதலிய கலைகளும், சான்றிதழ்ப் படிப்பாகச் சொல்லிக் கொடுக்கப்பட்டன.

இந்நூற்றாண்டுப் படைப்பிலக்கிய வரிசையில் இடம் பெறத்தக்கது 'பாரிகாதை' என்ற காவியமாகும். இரா. இராகவையங்கார் இதனை இயற்றியுள்ளார். பண்டைத் தமிழகத்தில் 'பட்டினப் பாலை' கரிகாற் பெருவளத்தான் அரங்கேற்றப் பெற்றது போல இக்காவியமும் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழா மண்டபத்தில் இன்றைய இணைவேந்தர் முத்தைய வேள் முன்னர் அரங்கேறியது. அந்நாளில் ஆயிரம் வெண் பொற்காசுகளை அவர் திருக்கரத்தால் காவியப் புலவருக்களித்தார் என்பது நினைவுகூர்தற்குரியது. 1926இல் வெளியிடப்பட்ட பல்கலைக் கழக முதல் தமிழ் வெளியீடே இந்நூல்தான்.

டாக்டர் அ.சிதம்பரநாதனார்



### பரிசு நூல்கள்

தமிழக அரசின் பரிசினைப் பல்கலைக்கழக வெளியீடான டாக்டர் வ.சுப. மாணிக்கத்தின் கம்பர் எனும் நூலும், வித்வான் க.வெள்ளைவாரணாரின் 'பன்னிரு திருமுறை வரலாறு' என்ற நூலும் பெற்றமை பல்கலைக் கழக வெளியீட்டகத்திற்குக் கிடைத்த பெருமையாகும்.



பண்டிதமணி கதிரேசன் செட்டியார்

### 500 நூல்கள்

அனைத்துத் துறைகளிலும், பன்மொழிகளிலும் பல்கலைக் கழக வெளியீட்டகம் 500க்கு மேற்பட்ட நூல்களை வெளியிட்டுப் பிற பல்கலைக்கழகங்களுக்கில்லாத் தனிச் சிறப்பினைப் பெற்றுள்ளது.

### அறக்கட்டளை வெளியீடுகள்:

சில அறக்கட்டளைகளின் வழியாக, பல அரிய நூல்கள் அவ்வப்போது வெளிவந்து கொண்டிருக்கின்றன. பேரறிஞர் அண்ணா அவர்கள் இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டின்போது திருக்குறள் ஆய்வுக்காகப் பல்கலைக் கழகத்திற்கு அளித்த தொகை மூன்று இலட்சம். இந் நிதியத்திலிருந்து ஆறு ஆய்வு நூல்கள் வெளிவந்துள்ளன. சொல்லின் செல்வர் ரா.பி. சேதுப்பிள்ளை தம் தாயார் சொருணாம்பாள் பெயரில் அளித்த நிதியத்திலிருந்து இதுவரையில் பதினெண் புலவர்களின் படைப்பாற்றல் பற்றிய சொற்பொழிவுகள் நிகழ்ந்துள்ளன. அவை பதினெட்டு நூல்களாக வெளிவந்துள்ளன.



சதாசிவப் பண்டாரத்தார்

திருப்பனந்தாள் திருமடம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் வழியாக மக்களுக்கு மலிவுப் பதிப்புகளாகச் சமயம், தமிழ் தொடர்பான நூல்கள் கிடைக்க வழி வகை செய்துள்ளது. அந்த அடிப்படையில் ஒரு பெரும் அறக்கட்டளை நிறுவியுள்ளது. அடக்க விலையில் 1/8 பங்கு விலையில் விற்க வேண்டுமென்ற திட்டத்தில் இதுவரை இருபதுக்கும் மேற்பட்ட நூல்கள் வெளிவந்துள்ளன. பொதுவுடைமை நாட்டு நூல்களை விடத் திருப்பனந்தாள் நிதிய மலிவு வெளியீடுகள் விலை குறைவானதாகும்.

### ஆய்வுப் பட்டங்கள்

பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் இதுவரை 15 டாக்டர் பட்டங்களும், 35 எம்.லிட்., பட்டங்களும் ஆராய்ச்சி செய்த ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் அளிக்கப்பட்டுள்ளன. இவ் வாய்வுகள் ஆய்

வாளருக்கு மட்டும் பயன்தராமல் பலருக்கும் பயன்படும் வகையில் பல்கலைக் கழகப் பதிப்புகளாக மானியக்குழு நிதி உதவியுடன் வெளிவந்துள்ளன.

### மொழியியல் துறை

உலக மொழிகளின் ஆய்வகமாகவுள்ள மொழியியல் துறை, நெறியாளர் டாக்டர் எஸ்.அகஸ்தியலிங்கம் தலைமையில் வடிவும் வனப்பும் பெற்று பெருமிதத்துடன் இயங்கி வருகின்றது. வெள்ளி விழாவின்போது வித்தாக விழுந்த இத்துறை பொன் விழாவின்போது ஆலமரமென வளர்ந்திருக்கின்றது. உலக மொழிகளின் ஆராய்ச்சி மட்டுமின்றித் தமிழ் ஆராய்ச்சிகளையும் இத்துறை மேற்கொண்டுள்ளது. கால் நூற்றாண்டில் 100 நூல்களை வெளியிட்டுள்ள இத்துறையில் நடைபெறும் பல கருத்தரங்குகள் தமிழ் வளர்ச்சிக்குப் பெரிதும் உரமாக உள்ளன. டாக்டர். தெ. பொ. மீ. அவர்கள் தமிழ், மொழியியல் ஆகிய இரு துறைகளுக்கும் தலைமைப் பொறுப்பேற்றிருந்தது போல டாக்டர் அகஸ்தியலிங்கம் அவர்களும் இப்பொழுது இரு துறைகளுக்கும் தலைமை ஏற்றுள்ளார். சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம் இத்துறையின் தமிழ் வளர்ச்சியை வியந்து ''ஆங்கிலச் செவிலியின் வழியாகத் தமிழ்க் காதலியின் கருத்துக்கள் உலக அரங்கில் பரப்பப்படுகின்றன'' என்று புகழ்ந்துள்ளார்.

### முத்தைய வேளும் தமிழும்

அறத் தந்தை அண்ணாமலை வள்ளலின் அடிப்படைக் குறிக்கோள், அண்ணாமலைப் பல்கலைக் கழகம் தமிழ் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்பதாகும். அக்கொள்கைக் கோமான் தன் காலத்தில் தமிழ் வளர்ச்சிக்காகப் பாடுபட்டது போலவே இன்றைய இணைவேந்தர் முத்தையவேளும் எங்கெங்குத் தமிழ்வளர்ச்சியுண்டோ அங்கெல்லாம்தோன்றாத் துணையாக - தமிழ்க் காவலராக விளங்கி வருகின்றார்கள். தமிழுக்குக் கொடுத்துச் சிவந்த புரவலர் முத்தைய வேளின் பொற்கரங்களால் பொன்னாடை போர்த்தப்பட்ட தமிழ்ப் பெரியார்கள் பலருண்டு. அத்தகைய சிறப்பினைப் பெற்றவர்கள் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை, நாவலர் சோமசுந்தரபாரதியார், சொல்லின் செல்வர் ரா.பி.சேதுப்பிள்ளை, பன்மொழிப் புலவர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார், கல்வெட்டறிஞர் தி.வை. சதாசிவப்பண்டாரத்தார், வரலாற்றறிஞர். மு. இராசமாணிக்கனார், பேராசிரியர் கோ. சுப்பிரமணிய பிள்ளை, செந்தமிழ்க் காவலர் சிதம்பரநாதனார் முதலியோராவார்கள்.



பல்கலைக் கழக வளர்ச்சியில் பண்பாளர் முத்தைய வேளுக்குப் பொதுப் பார்வை உண்டென்று சொன்னாலும், தனித் தமிழ்க் கண்ணோட்டம் தமிழ்த் துறை வளர்ச்சியில் உண்டென்று உலகோர் அறிந்த ஒன்றாகும்.

இப் பல்கலைக் கழகத்தின் மலைக்கத்தக்க வளர்ச்சிக்கு அடிப்படைக் காரணம் என்ன?

பல்கலைக் கழகத்தின் இணைவேந்தராகவுள்ள முத்தையவேள் அவர்கள், நாளும் பல்கலைக் கழகத்தின் மேன்மையைச் சிந்தித்துச் செயலாற்றுவதுதான்! பரந்த அறிவும் எதிர்கால நோக்கும் நாட்டின் நடப்பிற்கேற்ப ஒன்றினைச் சீர்தூக்கிப் பார்க்கும் சிந்தனையும், பல்கலைக்கழகத்தின் பூரித்த வளர்ச்சிக்குத் துணை நிற்கின்றன. முத்தைய வேள் இப் பல்கலைக் கழகத்தின் இணைவேந்தராக இருக்கும் பேற்றினை நாடு பெற்றதால் அறிவு ஆராய்ச்சியுலகம் போதிய ஊக்கம் பெற்றுள்ளது. சிறப்பாகத் தமிழ் மக்கள் பெரிதும் பயனடைந்து வருகிறார்கள்.

### கல்விக்கோயில்

வளர்ச்சியின்றி ஒரு கழகம் தன் வயதால் மட்டும் விழாக் கொள்வதுண்டு. ஆனால், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், கடலை அள்ளிக் குடித்த அகத்தியர் வந்தாலும் கூடக் குடிக்கவும் சீரணிக்கவும் முடியாத நிலையில் ஆழ்ந்தகன்று நீண்ட வரலாற்றினைக் கடந்த ஐம்பது ஆண்டுகளாகப் பெற்று வளர்ந்து வந்துள்ளது. 700 ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்டு அமைந்துள்ள இக்கலைக் கோயில் 32 படிப்புத் துறைகளையும், 350 ஆசிரியர்களையும், 7,000 மாணவர்களையும் கொண்டுள்ளது. இதன் துணைவேந்தராகவும் காவலராகவும் இப்பொழுது விளங்குபவர் புகழ் பூத்த நடுவரான திரு பி.எஸ். சோமசுந்தரனார் அவர்கள். மதுரையம்பதி இறைவன் சோமசுந்தரக்கடவுள் தமிழறிந்தவராக விளங்கியமையால் ஒரு தலைவி, தமிழையே தூதுவராக விடுத்தாள்; சிற்றிலக்கிய வரலாற்றில் அந்நூல் வனப்பும் உயர்வும் பெற்று விளங்குகிறது. தமிழ்வாணர்கள் தில்லையம்பதியின் எல்லையிலுள்ள அண்ணாமலைக் கலைக் கோயிலின் நாயகரான சோமசுந்தரனாரிடம் தம் நெஞ்சங்களைத் தூதராக அனுப்பிப் புதிய இலக்கியங்களை உருவாக்கி வருகின்றனர்.

### அடிப்படை உணர்வுகள்

''தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாவதில்லை'' என்றார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன். சாவா இலக்கியங்களைப் பெற்ற மூவாத் தமிழுக்கு என் கடன் தமிழ்ப் பணி செய்து கிடப்பதே'' என்று அண்ணாமலைப் பல்கலைக் கழகம் பணிபுரிந்து வருகின்றது.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் ஆரவாரமற்ற முறையில் அடக்கமாக, ஆனால், அழுத்தமாகத் தமிழ்த் தொண்டினைச் செய்து வருகிறது. தமிழ்ப் பாதுகாப்புத் தாய்மை உணர்ச்சி அதன் அடிப்படை உணர்வாகும். இந்நல்லுணர்வுகள் இருப்பதால் தான் தமிழென்று நினைக்கிற பொழுது அண்ணாமலைப் பல்கலைக் கழகமே தமிழ்ப் பெருங்குடி மக்கட்கு நினைவுக்கு வருகின்றது. புலவர்களுக்கு ஒரு காலத்தில் புரவலர்கள் பழுத்த மரங்களாக விளங்கினார்கள். அத்தகைய தமிழ்க் காதலுடையார்க்கு இன்று அண்ணாமலைப் பல்கலைக் கழகம் ஊருணியாகவும், பழுத்த மரமாகவும் விளங்கி வருகின்றது.

''அண்ணா மலைக்கழகம்
சேரார்க்கு அறிவுப்
பெரும்பசி மாற்ற லரிது''

''பொறியுழவு பொங்குதமிழ்
இன்பம் நிலைக்கும்
கலையறிவு மாநகரில் காண்''

''அறமாம் அரசின்
அடிப்பணிந்தார்க் கல்லால்
இசைக்கடல் நீந்த லரிது''—

என்ற புது வாழ்த்துக் குறள் மலர்கள் பாடும் அளவிற்கு இறைவனுக்காக வடக்கே இமயமலை உயர்ந்திருப்பது போலத் தேன் தமிழிற்காகத் தெற்கே அண்ணாமலை உயர்ந்துள்ளது!

# பெருமைக்குரிய பொறியியல் கல்வி




பேராசிரியர்
வீர. முத்துவீரப்பன்

விரிவுரையாளர்
அரு. இராமநாதன்


**நா**ட்டின் முன்னேற்றத்தில் பொறியாளர் பங்கும், சிறந்த பொறியாளர்களை உருவாக்கும் பணியில் பொறியியல் கல்வியின் பங்கும் இன்றியமையாதவை.

தமிழகப் பொறியியல் கல்லூரி-கள் பல சென்னை, கோவை, மதுரை, திருச்சி போன்ற தொழில் நகரங்களிலேயே அமைந்துள்ளன. தொழில் துறையில் பின்தங்கிய பகுதியொன்றில் கிராமியச் சூழலில் பொறியியல் கல்வித்துறையினைத் தோற்றுவித்த முதல் நிறுவனம் அண்ணாமலைப் பல்கலைக் கழகம். தமிழகத்திலேயே இரண்டாவதாக இப் பொறியியல் துறை 1945-ஆம் ஆண்டில் இப் பல்கலைக்கழகத்தில் தோற்றுவிக்கப்பட்டது. வேதியியல் பொறியியல் துறை, வள்ளல் டாக்டர் அழகப்ப செட்டியாரின் நன்கொடை ரூ. 5இலட்சத்துடன் துவக்கப்பெற்றது.

தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலிருந்தும், ஆந்திரம், கேரளம், கர்நாடகம் ஆகிய அண்டை மாநிலங்களிலிருந்தும், வடநாட்டிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் மாணவர்கள் இத்துறையில் பயின்று பயனடைந்து வருகிறார்கள். குறிப்பாக தென் ஆர்க்காடு, தஞ்சை மாவட்டங்களைச் சேர்ந்த பிற்பட்டோரும் பிறரும் இப்பல்கலைக் கழகப் பொறியியல் துறையில் பயின்று இன்று சிறந்த பொறியாளராக விளங்கி வருகிறார்கள். இதுவரை சுமார் 6000 பொறியாளர்களை இத்துறை உருவாக்கியிருக்கிறது. இங்கே பயின்ற பலர் நம் நாட்டில் மட்டுமன்றி, வெளிநாடுகளிலும் மிக முக்கியமான பதவிகளை வகித்து செவ்வனே பணி புரிந்து வருகின்றனர். இன்று நம் நாட்டிலுள்ள முதன்மைப் பொறியாளர்களில் பலர் இங்கே உருவானவர்கள். தமிழக அமைச்சர்களாக இன்று சிறந்து விளங்கும் மாண்புமிகு திரு எஸ். இராமச்சந்திரன் அவர்களும், மாண்புமிகு திரு எஸ்.டி. சோமசுந்தரம் அவர்களும் இங்கே முறையே மின்னியல் துறையிலும், கட்டடவியல் துறையிலும் பட்டம் பெற்றவர்கள். இங்கே தோன்றிய வேதியியல் பொறியாளர் சிலர் சிந்திரி உரத் தொழிற்சாலையில் பெற்ற அனுபவமும் பயிற்சியும் தான், தமிழகத்தில் பல உரத் தொழிற்சாலைகள் அமையக் காரணமாயிருந்தன.

## வளர்ச்சி

துவக்கத்தில் 60 ஆக இருந்த மாணவர் சேர்ப்பு எண்ணிக்கை இன்று 300-ஐ எட்டியிருக்கிறது. 1945ஆம் ஆண்டு தோற்றுவிக்கப் பட்ட பொறியியல் துறை, இன்றோ, கட்டடவியல், இயந்திரவியல், மின்னியல், வேதியியல், கட்டட அமைப்புவியல் என ஐந்து வெவ்வேறு துறைகளாக வளர்ந்திருக்கிறது. இவை தவிர, அரிசித்தொழில் வளர்ச்சிக்கான ஆய்வு மற்றும் விரிவுப் பணிகளுக்கென மத்திய அரசு விவசாய அமைச்சர்உணவுத்துறையின்முழு நிதி உதவியுடன் அரிசிஆலையை நவீனமாக்கும் திட்ட விரிவுப் பணி மையம் இயந்திர வியல் துறையின் ஓர் அங்கமாக; அமைந்திருக்கிறது. ஆராய்ச்சி செய்யும் மாணவர்களுக்கும், அண்மைத் தொழிற் கூடங்களுக்கும் பெரிதும் உதவ இருக்கும் 'கம்ப்யூட்டர்' மையம் பல்கலைக் கழக மானியக் குழுவின் ரூ. 39 இலட்சம் நிதி உதவியுடன் இப் பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. இங்கே பொறியியல் துறையில் பல புதிய சோதனைக் கூடங்கள் ஏற்பட்டிருப்பதோடு, இருக்கின்ற சோதனைக்கூடங்களிலும், பொறியியல் பட்டறைகளிலும் புதிய சாதனங்கள் பல சேர்க்கப்பட்டு இத்துறை சிறந்து விளங்குகிறது.

## பாடத்திட்டங்கள்

இயந்திரவியல், மின்னியல், வேதியியல், கட்டடவியல் ஆகிய நான்கு துறையினரும் தத்தம் துறையில் முழுநேரப் பட்டப் படிப்பினையும் (பி.இ), முழுநேரப் பட்ட மேற்படிப்பினையும் (எம்.இ) அளித்து வருகின்றனர். இப்படிப்புக்களின் பாடத் திட்டங்கள் விஞ்ஞான முன்னேற்றம், நவீனக் கண்டுபிடிப்புகள் இவற்றிற்கேற்ப சமுதாயம் பயன் பெறும் வகையில் அவ்வப்போது மாற்றியமைக்கப்பட்டு வருகின்றன. அண்மையில் 'மின் அணுவியலும் கருவியியலும்' 'இயந்திரம் மற்றும் உற்பத்தியியல்', 'கட்டட அமைப்பியல்' என்ற மூன்று புதிய பி.இ. பாடத்திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. கட்டட அமைப்பியலில் பட்ட மேற்படிப்பு (எம்.இ) 1953ஆம் ஆண்டு பாரதத்திலேயே முதலாவதாக இங்குதான் துவக்கப்பட்டது.

## பகுதிநேர வகுப்புகள்

தொழிலகங்கள் அரசு நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், அரசுத்துறைகள் இவற்றில் பணி புரியும் பொறியாளர்கள் தங்கள் தகுதியினையும், தொழில் நுட்ப

# தரமான பொருட்களைத் தயாரித்தளிக்கும் பணியில் தனிப்புகழ் பெற்ற நிறுவனம்

# டான்சி



மக்கள் நலனையே மனதில் கொண்டு அக்கறையுடன் செயலாற்றும் நிறுவனம் டான்சி!

டான்சி தொழிற்கூடங்களில் தயராகும் ஒவ்வொரு பொருளும் தீவிர தரக்கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டவை. டான்சி என்றாலே தரமான பொருட்கள். ஆம்! வாடிக்கையாளர்கள் இதனை நன்கு அறிவர்.

உங்கள் இல்லத்துக்கும் அலுவலகத்துக்கும் ஏற்ற பொருட்கள் மட்டுமல்ல— தொழிற்துறைக்கும் டான்சி தயாரித்தளிக்கும் பல்வேறு பொருட்களின் பட்டியல் இதோ!

கட்டுமானங்கள் மற்றும் கோபுரங்கள், இயந்திரக் கருவிகள், எஃகு மற்றும் மர மேசை நாற்காலிகள், இணைப்பு வண்டிகள், விவசாய உபகரணங்கள், செம்புக் கம்பிகள், உறுப்புகள் (Forged, Pressed, and Diecast) பாதுகாப்பு காலணிகள் மற்றும் கை உறைகள், பிரஞ்ச் பாலிஷ் மற்றும் அதைச் சார்ந்த பொருட்கள்.

எடுத்துச் சொல்ல இத்தனைதான்... ஆனால் இன்னும் எத்துணை பொருட்கள்?

*தரத்துக்கோர் சின்னம் டான்சி!*

## டான்சி
## தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம்

(தமிழ்நாடு அரசின் ஒரு நிறுவனம்)

1, ஒயிட்ஸ் சாலை, சென்னை-600 014

தொலைபேசி: 82161 தந்தி: TANSI டெலக்ஸ்: 41-7496 TNSI

அறிவினையும் வளர்த்துக்கொள்வதற்கெனப் பகுதிநேர மாலை வகுப்புக்கள் இந்த ஆண்டிலிருந்து நடத்தப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் 'டிப்ளமா' தாரர்களுக்கு பி.இ. வகுப்புகளும் பட்டதாரிகளுக்கு எம்.இ.வகுப்புகளும் நடைபெறுகின்றன. பயில்வோரின் பதவி உயர்வுக்கு வழி வகுப்பதோடு அவர்கள் பணியாற்றும் நிறுவனங்களின் வளர்ச்சிக்கும் இக்கல்வி துணை நிற்கும். இங்கே பணிபுரியும் ஆசிரியர்கள் சிலர் பொறியியல் துறையில் ஆராய்ச்சி (பிஎச்.டி) பட்டம் பெறுவதற்கெனப் பகுதிநேர ஆராய்ச்சிகளில் ஈடுபட்டுள்ளனர்.

**கம்ப்யூட்டர் மையம்**

இம்மையம் கீழ்க்கண்ட குறிக்கோள்களுக்காகப் பயன்படும்:

1. கம்ப்யூட்டரைப் பயன்படுத்துவதற்கு மாணவர்களைப் பயிற்றுவித்தல்.
2. ஆராய்ச்சி மாணவர்களுக்குச் சிறந்த கருவியாகப் பயன்படுதல்.
3. அருகிலுள்ள தொழிலகங்களுக்கு விரைவில் தயாரித்தளிக்கும் பணிக்காகப் பயன்படும்.
4. கம்ப்யூட்டர் தொடர்பான பாடத்திட்டங்கள் ஏற்படுத்தி வகுப்புகள் நடத்துதல்.

**பிராந்திய விரிவுப்பணி மையம்-அரிசி ஆலை நவீனமாக்கும் திட்டம்:**

இந்த மையம் 1977ஆம் ஆண்டு மத்திய அரசு விவசாய அமைச்சின் உணவுத் துறையினரால் ரூ. 14.3 இலட்சம் நிதி உதவியுடன் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

இங்கு சத்துமிக்க அரிசியினை சேதமின்றித் தயாரிப்பதுகுறித்து பல ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன. அரிசி ஆலைகளை நவீனம் செய்ய முன்வருவோருக்கு இலவசமாகத் தொழில் நுட்பம் வழங்குவதோடு வங்கிகளில் கடன் பெறுவதற்கும் ஏற்பாடு செய்து கொடுக்கப்படுகிறது.



**பயிற்சிகள்**

நெய்வேலி பழுப்பு நிலக்கரி கார்ப்பொரேஷனைச் சார்ந்த பொறியாளர்களுக்கு இப் பல்கலைக் கழகத்தின் பல்வேறு பொறியியல் துறையினர் பயிற்சி வகுப்புகளை நெய்வேலியில் நடத்தியிருக்கின்றனர். பிராந்திய விரிவுப்பணி மையம் இந்த ஆண்டு கூட்டுறவு முறையில் இயங்கிவரும் அரிசி ஆலை அதிகாரிகளுக்கு (12 பேர்) 'அரிசி ஆலை நவீனம் பற்றிய தீவிரப் பயிற்சியினை அளித்தது. இதே போன்று ஆபரேட்டர்களுக்கு (கைவினைஞர்கள்) பயிற்சி அளிக்கத் திட்டமிட்டிருக்கிறது.

**ஆராய்ச்சிகளும் கண்டுபிடிப்புகளும்**

விஞ்ஞான முறையில் செயல்படும் கதிரவ நெல் உலர்த்தி (நாளைக்கு 1 டன் திறன்) இந்தியாவிலேயே முதன் முதலாக அண்ணாமலைப் பல்கலைக்கழக இயந்திரவியல் — துறையினரால் தான் கண்டுபிடிக்கப்பட்டது. இக்கருவி நெல்லை, தொட்டி ஒன்றினுள் வெப்பக்காற்றின் உதவியால் ஒரே சீராக உலர்த்துகிறது. எனவே, (களத்தில்) திறந்தவெளியில் உலர்த்துவதால் ஏற்படும் சேதமும், சீரில்லாமல் உலர்ந்த நெல்லை அரைக்கும் போது ஏற்படும் அரிசி சேதமும் தவிர்க்கப்படுகின்றன. இந்த உலர்த்தி பெரிய அளவிலான நவீன ஆலைகளில் பயன்படுத்தப்பட்டால் பெருமளவு எரி எண்ணெய்யைச் சேமிக்க இயலும். பாரதப் பிரதமரால் பாராளுமன்றத்தில் 20-7-1978 அன்றுபுகழ்ந்துரைக்கப்பட்ட இக் கண்டுபிடிப்பினை அடிப்படையாகக் கொண்டு பெரிய அளவிலான (நாளைக்கு 10 டன்) உலர்த்திகள் நாட்டில் சில இடங்களில் அமைக்கப்பட்டு கணிசமான எரி எண்ணெய்யை சேமிக்க உதவி வருகின்றன.

நெல்லை நீரில் ஊறவைக்கும் போதுகுறிப்பிடத்தக்க அரிசியும், ஊட்டச்சத்துக்களும் கரைந்து விடுகின்றன. இதனை அகற்றும் புதிய புழுங்கல் முறை ஒன்றினையும் இயந்திரவியல் துறை கண்டுபிடித்திருக்கின்றது. இம்முறையில் அதிக அளவு அரிசி கிடைப்பதோடு, அரிசி சத்துமிக்கதாகவும் எவ்வித நாற்றமின்றியும் இருக்கிறது.

குறைந்த செலவில் அரிசி


கோ-ஆப்டெக்ஸ்
அழகோவியம்!
அழகு மகளிர்
ஆவலோடு வாங்கி அணிவதெல்லாம்
கோ-ஆப்டெக்ஸ் சேலைகளையே!
அதில் உள்ள விந்தையெல்லாம்
அழகும் நயமும் இழைய...
அகம் கவரும் வண்ணங்கள் மிளிர.
கோடுகளும்-புள்ளிகளும் குலவ...
எண்ணற்ற வகைகளை
கோ-ஆப்டெக்ஸ் வழங்குகிறது!
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி
ELEGANT



ஆலைகளை நவீனமாக்கும் முறை விலை குறைந்த 'கப்-கோன்' இயந்திர நெல் உலர்த்தி, வெப்பக்காற்றை உருவாக்கும் உமி உலை இவை பிராந்திய பணி மையத்தின் கண்டுபிடிப்புகளில் சில.

நெல் உமிச் சாம்பலிலிருந்து சிமெண்ட் தயாரிப்பதற்கான ரூ.3.3 இலட்சம் ஆராய்ச்சித் திட்டம் கட்டட அமைப்பியல் துறையினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

உமிச் சாம்பலிலிருந்து 'சோடியம் சிலிகேட்' என்னும் சோப்புத் தொழிலுக்குப் பயன்படும் இரசாயனப் பொருள் தயாரிக்கும் திட்டம் ரூ. 2½ இலட்சம் நிதி உதவியுடன் வேதியியல் துறையினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தாதுவிலிருந்து நேரடியாக தாமிர சல்பேட் தயாரித்தல், கரியமிலவாயு முறையில் சோடியம் டைகுரோமைட் தயாரித்தல். சிட்ரிக் அமிலம் தயாரித்தல் இவை வேதியியல் துறையின் கண்டுபிடிப்புக்களில் சில.

## விரிவாக்கப்பணிகள்

நெல் மற்றும் தானியங்களை உலர்த்துதல், புதிய புழுங்கள் முறை போன்ற அரிசி ஆலைத் துறைக் கண்டுபிடிப்புகள் பல, சிறு வெளியீடுகள், நாளிதழ்கள், வானொலி இவற்றின் வாயிலாக மக்களுக்கு எடுத்துரைக்கப்படுகின்றன. அரிசி ஆலை நவீனமாக்குதல் பற்றிய கருத்தரங்குகள் அண்ணாமலை நகரில் ஒன்றும், சேலத்தில் மற்றொன்றும் நடத்தப்பட்டன. நவீன இயந்திரங்களின் செயல் விளக்கக் காட்சிக்கு அவ்வமயங்களில் ஏற்பாடு செய்யப்பட்டது. அண்ணாமலை நகர் கருத்தரங்கில் தமிழக உணவு அமைச்சர் மாண்புமிகு திரு ஜி.ஆர். எட்மண்ட் அவர்களும், சேலம் கருத்தரங்கில் மத்திய விவசாய ஸ்டேட் அமைச்சர் மாண்புமிகு திரு பானு பிரதாப்சிங் அவர்களும் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

இங்கு கண்டுபிடிக்கப்பட்ட கதிரொளி ஆற்றல் கருவிகள் அனைவரையும் கவர்ந்திருகின்றன. திருச்சி பாரத கனரகத் தொழிற்சாலை நடத்திய குழந்தைகள் ஆண்டு கண்காட்சியில் இக்கருவிகளில் சிலவற்றை மட்டுமே பார்வையிட்ட மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் திரு ஆர்.எம். வீரப்பன் அவர்கள் வியப்பெய்தினார்.

பிராந்திய விரிவுப்பணி மையம் கேரள மாநிலத்தில் ஐந்து நவீன அரிசி ஆலைகளை குறைந்த செலவில் அமைத்து செயல்விளக்கம் செய்து வருகின்றது. நெய்வேலி பழுப்பு நிலக்கரிப் படுகையினை சோதனை செய்யும் பணி கட்டடவியல் துறையினரால் மேற்கொள்ளப்பட்டது. அரசு மற்றும் தனியார் துறையினருக்காக கான்கிரீட் மற்றும் கட்டடப் பொருள்களுக்கான சோதனைகளை இத்துறை மேற்கொண்டிருக்கிறது. தென் ஆர்க்காடு மாவட்ட சுற்றுப்புறத்தில் நீர் வள ஆய்வு மேற்கொள்ளவும் நீர்வள வரைபடம் தயாரிக்கவும் இத்துறை திட்டமிட்டிருக்கிறது. நீர்வளத்தைத் துய்ப்பது பற்றியும், திட்டமிடுதல் பற்றியும் ஆலோசனை வழங்கவும் முன் வந்திருக்கிறது.

நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கார்ப்பரேஷனில், பழுது பட்டு நீண்டகாலம் இயங்காமலிருந்த ரஷ்ய நாட்டு இயந்திரம் ஒன்றை மின்னியல் துறையினர் சரிசெய்து இயங்க வைத்திருக்கின்றனர். இன்சுலேட்டர்களைச் சோதனை செய்யும் முறை குறித்து வடலூரிலுள்ள 'சேஷசாயி இன்சுலேட்டர் லிமிடெட்' கம்பெனிக்கு இத்துறை ஆலோசனை வழங்கியிருக்கிறது.

தாதுவிலிருந்து நேரடியாக தாமிர சல்பேட் தயாரிப்பது குறித்து வேதியியல் துறையினர் பெங்களூரைச் சேர்ந்த தனியார் நிறுவனம் ஒன்றிற்கு ஆலோசனை வழங்கியிருக்கின்றனர்.

பொது மக்களிடையே விஞ்ஞான அறிவை வளர்க்கவும், விஞ்ஞானத்தின்பால் ஆர்வம் ஏற்படுத்தவும் குறிப்பிட்ட இடைவெளிக்கிடையே 'பொருட்காட்சிகள்' பலமுறை பொறியியற் கல்லூரியில் நடத்தப்பட்டிருக்கின்றன. பொன்விழா ஆண்டிலும் நடத்தப்படுகிறது.

பொறியாளர்கள், பொறியியல் தவிர ஏனைய செயல்களிலும் சளைத்தவர்கள் அல்லர் என்பதற்கு எடுத்துக்காட்டாக அமைச்சர்களாயிருப்பவர்களையும், ஆட்சித் தலைவர்களாயிருப்பவர்களையும் கூறலாம். தமிழ் வளர்ச்சியும் பொறியாளர் பணியிலொன்றாய் விளங்குகிறது.

அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பொறியியல் ஆசிரியர்

களும், மாணவர்களும் தமிழகத்தில் நடைபெறும் தமிழ்க் கருத்தரங்குகள், கட்டுரைப் போட்டிகள், பேச்சுப் போட்டிகள் பலவற்றில் பங்குகொண்டு பாராட்டினையும், பரிசுகளையும் பெற்றிருக்கின்றனர்.

பொறியியல் துறைகளிலும், விடுதியிலும் மாணவர்களுக்கான தமிழ்ப் பேச்சுப் போட்டிகளும், கட்டுரைப் போட்டிகளும் நடத்தப்படுகின்றன. தமிழ் அறிஞர்கள் பங்குகொள்ளும் பட்டிமண்டபம், கவியரங்கம், வழக்காடு மன்றம் போன்ற இலக்கிய விருந்துகள் இங்கு செயல்படும் இலக்கிய மன்றத்தாரின் வாடிக்கை.



இப் பல்கலைக்கழகப் பொறியியல் ஆசிரியர்கள் 'கலைக்கதிர்' போன்ற விஞ்ஞான சஞ்சிகைகளிலும், சுழற்கழக வெளியீடுகளிலும், பிற ஏடுகளிலும் தமது ஆய்வுக் கட்டுரைகளைத் தமிழில் வெளியிட்டிருக்கிறார்கள். 'அழுத்தப் பொறியியல்' என்னும் புத்தகம் இயந்திரத் துறைப் பொறியாளர்களால் . தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்திற்காகத் தமிழாக்கம் செய்யப்பட்டது.

'அரிசி அரவைத் தொழில் நவீனம்' குறித்து தஞ்சை, அண்ணாமலைநகர், சேலம் ஆகிய இடங்களில் நடைபெற்ற கருத்தரங்குகளில் இப் பல்கலைக் கழக ஆசிரியர்கள் தமது ஆய்வுக் கட்டுரைகளை தமிழிலேயே எழுதினார்கள். சேலம் கருத்தரங்கினை யொட்டி இப் பல்கலைக் கழகத்தினரால் வெளியிடப்பட்ட சிறப்பு மலரின் பெரும் பகுதி தமிழிலேயே அமைந்தது அனைவருக்கும் பயனளித்தது. இங்கிருக்கும் பிராந்திய விரிவுப் பணி மையம் தமது கண்டுபிடிப்புக்களைச் சிறு வெளியீடுகள், நாளிதழ்கள், வானொலி இவற்றின் வாயிலாக மக்களுக்குத் தமிழ் மொழியிலேயே எடுத்துரைக்கின்றது.

# திருக்குறள் ஆராய்ச்சிப் பகுதி


## டாக்டர் கொ. இலட்சுமணசாமி
**தமிழ்த் துறை,**


1968-ஆம் ஆண்டில் சென்னை மாநகரில் நடைபெற்ற இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டின் நினைவாகத் தமிழ்நாடு அரசு திருக்குறள் ஆய்வு நிகழ்த்தும் பொருட்டுச் சென்னை, அண்ணாமலை, மதுரை ஆகிய மூன்று பல்கலைக் கழகங்கட்கும் தனித்தனியாக மூன்று நூறாயிரம் (300,000) ரூபாயைவைப்பு நிதியாக வழங்கியது. அதற்கேற்ப அண்ணாமலைப்பல்கலைக் கழகத்தில் 1970-ஆம் ஆண்டு திருக்குறள் ஆராய்ச்சிப் பகுதி தொடங்கப் பெற்றது. இப்பகுதியில் ஆய்வு செய்வதற்கெனத் தமிழ்த் துணைப் பேராசிரியர் (ரீடர்) ஒருவரும், ஆய்வுத்துணையாளர் ஒருவரும், தட்டச்சுப்பணியாளர் ஒருவரும் ஆக மூவர் நியமிக்கப் பெற்றனர். பின்னர் உரையாளர் (ட்யூட்டர்) ஒருவரும் நியமிக்கப் பெற்றார்.

1968 ஆகஸ்டு 9-ஆம் நாள் அரசாங்கக் கல்வித்துறை ஏற்பாடு செய்த கூட்டத்தில் மூன்று பல்கலைக் கழகங்களுக்கும் ஆய்வுப் பொருள்கள் வரையறுக்கப் பெற்றன. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் அவ்வரையறைக்கேற்ப (அ) திருக்குறள் ஒப்புமைப் பகுதி (ஆ) இடைக்கால இலக்கியங்கள் என்னும் பொருள்களில் ஆய்வுப் பணி தொடங்கியது.

### நூல் வெளியீடுகள்

ஆய்வுப் பணி தொடங்கிய பின்னர் டாக்டர் மு. கோவிந்தசாமி அவர்களால், (1) திருக்குறள் பொருளகராதி (2) திருக்குறளும் பிற உரையாசிரியர்களும் (3) பரிமேலழகர் என்னும் மூன்று நூல்களும், மகாவித்துவான் ச. தண்டபாணி தேசிகர் அவர்களால் (4) காப்பியங்களில் திருக்குறள் (5) வள்ளுவரும் கம்பரும் (6) வள்ளுவத்தில் மெய்ப்பொருட்சுவடுகள் என்னும் மூன்று நூல்களும், வித்துவான் என். இராமலிங்கம் அவர்களால் (7) திருக்குறளும் பெருந்தேவனார் பாரதமும் (8) திருக்குறளும் வில்லிபுத்தூரரார் பாரதமும் (9) திருக்குறளும் நல்லாப் பிள்ளை பாரதமும் என்னும் மூன்று நூல்களும் வித்துவான் கா. ம. வேங்கடராமையா அவர்களால் (10) பரிப்பெருமாள் உரையும் உரைத்திறனும் என்னும் நூலொன்றும் ஆகப் பத்து நூல்கள் எழுதப் பெற்றுள்ளன.

அவற்றுள் முதல் ஐந்து நூல்கள் அச்சு வடிவில் வெளிவந்துள்ளன. அடுத்த நான்கு நூல்கள் சென்ற ஆண்டில் அச்சிடுதற்கு அனுப்பப் பெற்றுள்ளன. பரிப்பெருமாள் உரையும் உரைத் திறனும் அச்சிற்கு அனுப்பும் இவை நீங்கலாக பரிமேலழகர் உரைத் திறன் என்னும் நூல் ஆய்ந்து எழுதப் பெற்றுவருகின்றது.

### எழுதப்படுபவை

இப்போது இப்பகுதியில் (1) திருக்குறளும் புறநானூறும் (2) தேவார திருவாசகங்களில் திருக்குறள் (3) நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் திருக்குறள் என்னும் தலைப்புக்களில் நூல்கள் எழுதப் பெற்று வருகின்றன. இந்தக் கல்வியாண்டில் (1979-80) இந்நூல்கள் நிறைவுற்றுவிடும்.

மூன்று பல்கலைக் கழகங்களிலுள்ள திருக்குறள் ஆராய்ச்சிப் பகுதிகளின் கூட்டுக் கூட்டங்கள் 17-11-77-ல் மதுரையிலும் 10-4-79-ல் சென்னையிலும்நடைபெற்றன. மாண்புமிகு கல்வியமைச்சர் திரு. அரங்கநாயகம் அவர்கள் தலைமையில் அவ்வப் பல்கலைக் கழகத் துணைவேந்தர்களும் தமிழ்ப் பேராசிரியர்களும் திருக்குறள் பகுதிப் பொறுப்பாளரும் ஆய்வுப் பணிகள் பற்றி ஆய்ந்துள்ளனர். ஆய்வு நூல்கள் விரைவில் நல்ல அமைப்புடன் வெளிவரல் வேண்டும் என்பதும், அதற்குரிய ஏற்பாடுகள் இவை என்பதும் ஏற்கப் பெற்றுள்ளன.

இப்பல்கலைக் கழகத்திலுள்ள இவ்வாய்வுப்பகுதி, மென்மேலும் வளர்ச்சி பெற்று, இவ்வறக் கொடை நிறுவிய தமிழ் நாட்டரசின் நோக்கத்தினை நிறைவேற்றும் என்பதில் ஐயமில்லை.



# அண்ணாமலைப் பல்கலைக் கழகமும் தமிழிசையும்

**பேராசிரியர் லெ.ப. கரு. இராமநாதன் செட்டியார்**

**ஆட்சிக்குழு உறுப்பினர், முன்னாள் நிகழ்நிலைத் துணை வேந்தர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.**

இருபதாம் நூற்றாண்டின் கல்வி வரலாற்றில் முதல் இடம் பெற்று இப்போது பொன் விழாக் காணும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் அரும் பெரும் பணிகளுக்கு ஒப்பாகவும் உயர்வாகவும் உள்ள பணிகளைக் காணுதல் அரிது.

பெருங் கொடை வள்ளல், செட்டிநாட்டு அரசர் டாக்டர் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள், தனி ஒருவ ராய்த் தமது பெரும் பொருளை வாரி வழங்கி அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தினை நிறுவி னார்கள். அவர்களும், அவர்கள் குமாரர் பத்மபூஷண் டாக்டர் ராஜா சர் முத்தையா செட்டியார் அவர்களும் ஐம்பது ஆண்டுகளாக இப் பல்கலைக் கழக வளர்ச்சிக்கு ஆற்றியுள்ள — ஆற்றி வருகின்ற சீரிய பணிகள் அளவிடற்கரியன. இவ் விரு பெருமக்களுக்கும் கல்வி யுலகம், எப்போதும் நன்றி செலுத்தும் கடப்பாடு உடையது.

பல்கலைக் கழக நல்வளர்ச்சிக் குக் கட்டடங்களையும், சுற்றுப் புறங்களையும், அழகாக அமைப் பதில், ஆர்வம் கொண்டது போலவே, பல்கலைக் கழகத்தில் பணியாற்றுபவர்கள், மிகச்சிறந்த வர்களாக அமைய வேண்டும் என்பதிலும் அண்ணாமலைஅரசர் அவர்களும், முத்தைய வேந்தர் அவர்களும் ஆர்வம் கொண்டு ஆவன செய்தார்கள் - செய்து வருகின்றார்கள். நாட்டில் புகழ் சிறந்த பேரறிஞர்களைத் துணை வேந்தர்களாகவும், ஒவ்வொரு துறையிலும் திறமையும், அனுபவமும் நிறைந்தவர்களைப் பேரா சிரியர்களாகவும், பல்கலைக் கழகத்திற்கு அழைத்து வந்து பணியாற்றச் செய்து மகிழ் வெய்தினார்கள் - மகிழ்வெய்து கின்றார்கள். இதன் விளைவாக அறிவாற்றல் நிறைந்த மாணவ மாணவியர் பலர் உருவாகி, உலகின் பல்வேறு இடங்களில், பல்வேறு துறைகளில் உயர்ந்து ஓங்கி விளங்கி, இப்பல்கலைக் கழகத்திற்குப் புகழ் சேர்த்து வரு கின்றனர்.

இவ்வாறு எல்லாவகைக் கல்வி களையும் வளர்த்து வருகின்ற கலைக்கோயிலாக, இப் பல்கலைக் கழகம் விளங்குகின்ற நிலையில், இதன்கண், தனிச்சிறப்பாக வளர்ந்து வருகின்ற கல்வித் துறைகள் சிலவற்றில், தமிழும் தமிழ் இசையும் குறிப்பிடத்தக் கன. இவ்விரு துறைகளையும் வளர்ப்பதை அண்ணாமலை அரசர் அவர்கள், பல்கலைக் கழகத்தின் குறிக்கோளாகவும், தமது வாழ்க்கைக் குறிக்கோளாக வும் கொண்டார்கள். ''தமிழை யும், தமிழ்ப் பண்பாட்டினையும் உலகறியச் செய்வது, இப் பல் கலைக் கழகத்தின் தலை சிறந்த குறிக்கோளாக இருக்கும்'' என வும் ''தமிழ்நாடு எங்கும் தமி ழிசை முழங்க வேண்டும் என்பது எனது ஆவல்'' எனவும் அண்ணா மலை அரசர் அவர்கள் குறிப் பிட்டிருப்பது நினைத்தற்குரியது.

அரசர் அவர்கள். இசைக் கலையில் தமக்கு இருந்த மிகப் பெரிய ஈடுபாட்டினால், தாம் பல்கலைக் கழகம் நிறுவுவதற்கு முன்பே, 1929-ஆம் ஆண்டிலேயே சிதம்பரத்தில், இசைக் கல்லூரி யினை நிறுவி, இசைக் கலைக்கு அரும்பணி ஆற்றினார்கள். இக் கல்லூரி, நிலை பெற்று வளர்ச்சி யுற்றவுடன், இதனை 1932-ஆம் ஆண்டில் அண்ணாமலைப் பல் கலைக் கழகத்துடன் இணைத் தார்கள். இசைக்காகத் தனியே நான்கு ஆண்டு வகுப்பு, முதன் முதலாக நடத்திப் பட்டம் வழங் கிய பெருமை, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கே உரியது. வாய்ப்பாட்டு, வீணை, பிடில், மிருதங்கம், தேவாரம், நாதசுரம், தவுல், பரதநாட்டியம் ஆகியவை இங்கே கற்பிக்கப் பெறுகின்றன. இவ்வாண்டில், நூற்றுக்கு மேற் பட்ட மாணவ, மாணவியர் கல்வி பயில்கின்றனர். தமிழகத்தில் மட்டுமின்றிப் பிற மாநிலங்களி லும், இலங்கை, மலேசியா முத லிய பிற நாடுகளிலும் இருந்து மாணவ மாணவியர் பலர், இங்கே வந்திருந்து கல்வி கற்கின்றனர். இங்கே கற்றுத் தேர்ச்சி பெற்ற வர்களுக்குச் சங்கீத பூஷணம், பி.மியூசிக் முதலிய பட்டங்கள் வழங்கப் பெறுகின்றன.

பெரும்பான்மையான இசைக் கருவிகள் இங்கே சேர்த்து வைக் கப் பெற்றுள்ளன. இவற்றில், இப்போதுகிடைத்தற்கரியஇசைக் கருவிகள் சிலவும் உள்ளன.

சிறந்த இசைவாணர்களாகிய சபேசையர், சங்கீத கலாநிதி டைகர் வரதாச்சாரியார், சங்கீத கலாநிதி கே. பொன்னையா பிள்ளை, சங்கீத கலாநிதி திருப் பாம்புரம் டி. என். சாமிநாதப்

# CO-OPERATIVE BANKS PAY MORE INTEREST ON DEPOSITS

**YOUR INVESTMENTS WITH CO-OPERATIVE BANKS REAP HIGHER INTEREST**

**YOUR INVESTMENT WITH CO-OPERATIVE BANKS GO A LONG WAY IN THE DEVELOPMENT OF THE NATION**

**INTEREST RATES OFFERED BY**

## The South Arcot Central Co-operative Bank Ltd.,

CUDDALORE

**Fixed Deposits** **(Effective from 13—9—1979)**

| | | |
|---|---|---|
| 1. | For 15 Days to 45 Days | 3.00% |
| 2. | For 46 Days to 90 Days | 3.50% |
| 3. | For 91 Days and above but below 6 Months | 4.50% |
| 4. | For 6 Months and above but below 9 Months | 5.00% |
| 5. | For 9 ,, ,, 12 Months | 6.00% |
| 6. | For 1 year and above but upto and inclusive of 36 Months | 7.50% |
| 7. | For over 3 Years (37 Months and above) but upto and inclusive of 5 years | 9.00% |
| 8. | For over 5 Years (61 Months and above) With effect from | 1-10-79 |
| | Savings and Theni Deposits | 5.50% |
| | Current Deposits | 0.50% |

Your Central Co-operative Bank pays ½% Interest more on each Type of Deposit

For further details-Please contact

THE SOUTH ARCOT CENTRAL CO-OPERATIVE BANK LTD.,

**CUDDALORE—1.**

and its 30 Branches

**R. Rajaraman,** (B.A., Hons)
*Secretary*

**S. Balasubramanian,** M.A.,B.L.,
*Special Officer*

## The South Arcot Central Co-operative Bank Ltd.,

CUDDALORE - 607001.

பிள்ளை, இசைப்பேரறிஞர் சித்தூர் சுப்பிரமணிய பிள்ளை, இசைப் பேரறிஞர் எம். எம். தண்டபாணி தேசிகர், கும்பகோணம் இசைப்பேரறிஞர் இராசமாணிக்கம் பிள்ளை, மன்னார்குடி இராசகோபாலப் பிள்ளை, மாயூரம் இசைப்பேரறிஞர் கோவிந்தராசப் பிள்ளை, யாழிசைப் புலவர் வி. எஸ். கோமதிசங்கரையர், சாத்தூர் கிருஷ்ணய்யங்கார், தஞ்சாவூர் இராமதாஸ் ராவ், வீணை கே.பி. சிவாநந்தம், டி.கே. ரங்காச்சாரி முதலியோர் இக்கல்லூரியில் பேராசிரியர்களாகவும், விரிவுரையாளர்களாகவும் பொறுப் பெற்றுப் பெரும்பணி புரிந்துள்ளனர். இசையுலகில் பெரும் புகழ் பெற்ற இசைப்பேரறிஞர் மதுரை எஸ். சோமசுந்தரம் (சோமு), அவர்கள் இப்போது இசைப் பேராசிரியராக இங்கே விளங்குகின்றார்கள். இவர்கள், அண்மையில், தமிழக அரசு இசைப்புலவராக நியமிக்கப் பெற்றிருப்பது குறிப்பிடுவத்ற்குரியது.



இசையுலகில் பாராட்டுப் பெற்ற சாத்தூர் ஏ. ஜி. சுப்பிரமணியம், டி. கே. ரங்காச்சாரி, எஸ். வி. பார்த்தசாரதி, கே. எஸ் நாராயணசாமி, டாக்டர் எஸ். இராமநாதன், கோ.வி மணிசேகரன் முதலியோர், இங்கே கல்வி பயின்று சங்கீத பூஷணம் பட்டம் பெற்றவர்கள். இவர்களில் டாக்டர் எஸ்.இராமநாதன் அவர்கள், இங்கே கல்வி பயின்ற பின், அமெரிக்காவில் (WESLEYAN) பல்கலைக் கழகத்தில் தங்கி, இரண்டு ஆண்டுகள் ஆராய்ச்சி செய்து அங்கு டாக்டர் பட்டம் பெற்றவர். நாட்டியக் கலையில் புகழ் பெற்ற திருமதி, பத்மா சுப்பிரமணியம் அவர்கள், இப் பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சி செய்து அண்மையில் டாக்டர் பட்டம் பெற்றுள்ளார்கள். மேலும் இங்கே பயின்று சங்கீதபூஷணப் பட்டம் பெற்ற எஸ். கோபால கிருஷ்ணன் அவர்கள், டெல்லியில் அனைத்திந்திய வானொலியில், பல்இசைக் கருவிகள் இயக்குநராகப் பணிபுரிகின்றார்.

இந்நிலையில், இப் பல்கலைக் கழகம், தமிழ் இசையை வளர்த்து வருகின்ற வரலாற்றினை எண்ணிப் பார்ப்பது பொருத்தமாகும்.

1936ஆம் ஆண்டில், துணை வேந்தர் மகாகனம் வி. எஸ். சீநிவாசசாஸ்திரியார் அவர்கள் தலைமையில், இசை மாநாடு ஒன்று இப்பல்கலைக் கழகத்தில் கூட்டப் பெற்றது. தமிழ்ப் பாடல்களைப் பலர் அறியச் செய்யவும், தமிழ் இசைப் பாடல்களை மேலும் மேலும் ஆக்கவும் ஆவன செய்ய வேண்டுமென்று அம் மாநாடு வற்புறுத்தியது. ஆயினும், 1940 ஆம் ஆண்டு வரை இப் பல்கலைக் கழக இசைப்பகுதி, பிறமொழிப் பாடல்களுக்கே இடம் தந்திருந்தது. இசைவாணர்கள், தமிழ் நாட்டு இசை அரங்குகளிலும் பிறமொழிப் பாடல்களையே பாடுவாராயினர். நம் நாட்டு இசையரங்குகளில் வேற்று மொழிப் பாடல்கள் பாடப்பெறுவது நியாயமில்லை; பயனுமில்லை என்ற உணர்ச்சி, அண்ணாமலை வள்ளல் அவர்களின் உள்ளத்தில் பதிந்தது. இந்த நல்லெண்ணம், தமிழ் இசை இயக்கமாக உருவெடுத்தது. எச் செயலையும் எண்ணித் துணிந்து, துணிந்தபின் எத்தகைய எதிர்ப்புக்களையும் பொருட்படுத்தாது தொடங்கிய செயலை நிறைவேற்றும் ஆற்றல் உடைய அரசர் அவர்கள் இயக்கத்திற்கு நேர்ந்த எதிப்புக்களையெல்லாம் தமிழ் இசை வளர்ச்சிக்கு ஊக்கம் தருவனவாகக் கருதினார்கள். அதனால், அரசர் அவர்கள் தொடங்கிய தமிழ் இசை இயக்கம், தமிழ் மக்களின் உள்ளங்களில் பேருவகை ஊட்டியது. டாக்டர் சர் ஆர். கே. சண்முகஞ் செட்டியார் அவர்கள் முதலிய பேரறிஞர்கள் அரசர் அவர்களுடன் ஒத்துழைத்தனர். பேரறிஞர் அண்ணா, மூதறிஞர் ராஜாஜி, பாவேந்தர் பாரதிதாசன் ஆகியோர் தமிழ் இசை இயக்கத்தை ஆதரித்துப் பேசி வந்தனர், எழுதி வந்தனர். எங்கும் தமிழ் இசை மாநாடுகள் நடைபெற்றன; தமிழ் இசைச் சங்கங்கள் தோன்றின. ஆங்காங்குத் தமிழ் இசைக் கல்லூரிகள் பணியாற்றத் தொடங்கின. இசை அரங்குகளில் பெரும்பாலும் தமிழ்ப் பாடல்கள் பாடப் பெற்றன. வேற்று மொழிப் பாடல்களுக்கு இடம் தந்திருந்த பல்கலைக் கழக இசைப் பகுதி, தமிழ் இசை கற்பிக்கும் பகுதியாக மாறியது. அவ்வளவில் அன்றிப் பழையனவும், புதியனவும் ஆகிய இசைப் பாடல்களையும், இசை இலக்கண நூல்களையும் வெளிப்படுத்தும் பெருமுயற்சியையும் அரசர் அவர்களின் பேராதரவில், பல்கலைக் கழகம் மேற்கொண்டது. மகாமகோபாத்தியாய பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் அவர்கள் தலைமையில் தமிழ் இசை ஆலோசனைக் குழு ஒன்று நிறுவப் பெற்றது. அக் குழுவுக்குப் பேராசியர் லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் அவர்கள், செயலாளராகப் பணியாற்றினார்கள்.

வெளியிடங்களில் உள்ள இசைவாணர் பலரும், இசைப் பாடல் இயற்றுதலில் வல்ல அறிஞர்களும், இப்பல்கலைக் கழக இசைப் பகுதி ஆசிரியர் எல்லாரும், வித்துவான் மு. அருணாசலம் பிள்ளை அவர்கள் முதலிய தமிழ்ப் பகுதி ஆசிரியர் சிலரும் ஒத்துழைத்துப் பேருதவி செய்தனர். தமிழ் இசை ஆலோசனைக் குழு, அரசர் அவர்களின் அறிவுரைகளை அவ்வப்போது பெற்று, விரைந்து செய்த பெருமுயற்சியின் பயனாக, 20 தமிழ் இசை நூல்கள், பல்கலைக் கழக வெளியீடாகச் சில ஆண்டுகளுக்குள் வெளிவந்துள்ளன. அரசர் அவர்கள். பல்கலைக் கழகத்தின் வாயிலாகத் தமிழ் இசையை வளர்த்ததோடு, சென்னையில் தமிழ் இசைச் சங்கத்தையும் நிறுவினார்கள். அச்சங்கம், தமிழ் இசை வளர்ச்சிக்குச் சிறந்த பணி

# — POTASH —

## the most profitable fertiliser

Most crops respond to potassium in split doses
for higher and quality yields.

**WITH BEST COMPLIMENTS FROM:**

# Indian Potash Limited,

**727, PATHARI ROAD,**
**AMBAL BUILDING,**
**MADRAS-6.**

Telegram : 'SRIVARU'

# Sri Varu Enterprises

(*Regd Office* : **2 A, Langford Gardens, BANGALORE-560 025**) *Office* : **29580**
**25, Silver Jubilee Park Road, BANGALORE-560 002.** **24335**
*Resi* : **53411**

*Regd. Dealers for* : **CARBORUNDUM UNIVERSAL Ltd.**

*Distributors for* : **WOLF ELECTRIC TOOLS & J. K. E. DIAMOND TOOLS**

| **Bonded Abrasives** | **Coated Abrasives** | **Wolf Machines** |
|---|---|---|
| Grinding Wheels | Flint Paper Sheets | Grinders |
| Segments, Cut-off Wheels | Emery Paper Sheets | Drills |
| Mounted Points | Emery Cloth, Aloxite Cloth | Sanders |
| Sharpening Stones | Silicon Carbide Cloth | Blower etc. |
| Finished Sticks | Garnet Cloth in Sheets, Rolls | & Diamond Dressing Tools |
| Floor Polishing Blocks | Belts, Discs etc. | |



அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் நூலகத்திலும், கருத்தரங்கு நூலகங்களிலும் மொத்தம் 3,00,000 நூல்கள் உள்ளன.



களை இடையறாது புரிந்து வருவது நாடறிந்த செய்தியாகும். அரசர் அவர்களின் பெயரைத் தாங்கும் பெருமை பெற்று, இப்போது அச் சங்கத்தின் கட்டடமாகச் சென்னையில் விளங்கும் ராஜா அண்ணாமலை மன்றம், அண்ணாமலை வள்ளலின் புகழ் போல் ஓங்கி நிற்பதை நாம் கண்டு மகிழ் வெய்துகின்றோம்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம், இதுவரை இருபது தொகுதிகளாக, 23 தமிழ் இசை நூல்களை வெளிப்படுத்தியுள்ளது. அந் நூல்களில், 1254 தமிழ் இசைப்பாடல்கள் 234 இராகங்களில் அமைந்துள்ளன. சிறந்த இசைவாணர்கள், அப்பாடல்களுக்கு இசை அமைத்துள்ளனர். மேற்குறிப்பிட்ட தொகுதிகளில் அடங்கிய இசை இயல், தமிழர் இசைக் கருவிகள், சுரமேள கலாநிதி, பரதசங்கிரகம், மத்தளம் கற்கும் முறையும் அதன் சிறப்பு வகையும் என்ற நூல்கள், இசை இலக்கண அமைதிகளைத் தெளிவாக விளக்கத்தக்கன. மிருதங்கம் பயிலும் மாணவர், திறமை பெறும் வண்ணம், இப் பல்கலைக் கழகம் வெளிப்படுத்திய மிருதங்க பாட முறைப் புத்தகமும் இத்தொகுதிகளில் ஒன்றாகும். மேலும் 1500-க்கு மேற்பட்ட பாடல்கள், இசை அமைக்கப் பெற்று அச்சிடுதற்கு ஏற்ற நிலையில் இருக்கின்றன. தமிழ் இசைக்கு அரும் பெருந் தொண்டுகள் புரிந்த அண்ணாமலை வள்ளல் அவர்களைப் பாராட்டியும், வாழ்த்தியும் பல சமயங்களில் தக்க புலவர்கள் இயற்றிய பாடல்கள், சிறந்த இசைவாணர்களால் இசை அமைக்கப் பெற்றுச் 'செட்டிநாட்டரசர் இசைமாலை' என்னும் பெயருடன் வெளிவந்துள்ளது.

தமிழ் வளர்ச்சிக்கும், தமிழ் இசை வளர்ச்சிக்கும் பயன்தருமாறு, இரண்டு லட்ச ரூபாய்க்கு மேற்பட்ட தொகையைத் திருப்பனந்தாள் காசி மடத்து அதிபர்களாக இருந்த ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் அவர்களும், ஸ்ரீலஸ்ரீ அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களும் இப் பல்கலைக் கழகத்திற்கு வழங்கியிருப்பது நன்றியுடன் குறிப்பிடத்தக்கது.

அண்ணாமலைப் பல்கலைக் கழக இணைவேந்தர் அரசர் முத்தைய வள்ளல் அவர்கள், தம் தந்தையார் அவர்கள் காலத்திலும், அவர்களுக்குப் பின்னும் அவர்களைப் போலவே பேரூக்கம் கொண்டு தொடர்ந்து தமிழ் இசையையும், சென்னையில் தமிழிசைச் சங்கத்தினையும் வளர்த்து வருவது அனைவரும் அறிந்த செய்தியாகும். மேலும், இவர்கள், பலநூறு ஆண்டுகளுக்கு முன்பு, பாண்டிய அரசர்கள், சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த மதுரை மாநகரில் தமிழ் இசை வளர்க்கத் திருவுளம் கொண்டு, அங்கே, 21-1-1974-ல் பெருந் திட்டத்துடன், தமிழ் இசைச் சங்கம் நிறுவியுள்ளார்கள். அந்நாள் முதல் இன்றுவரை, அரும்பணியாற்றிவரும் இச்சங்கத்தின் உரிமை நிலையமாக, அரசர் அவர்கள் பெயரால் ராஜா முத்தையா மன்றம் என்னும் கலைக்கோயில், மலைக் கோயில் போலக் கண்ணையும் கருத்தையும் கவரும் முறையில், ஐம்பது லட்சம் ரூபாய்க்கு மேற்பட்ட செலவில் உருவாகி, நிறைவு பெறும் நிலையில் உள்ளது. இச் சங்கத்தின் வளர்ச்சியிலும், கட்டட வளர்ச்சியிலும் முத்தைய வள்ளல் அவர்கள் மேற்கொண்டுள்ள ஆர்வமும் வழங்கி வரும் உதவிகளும் அளவிடற்கரியன.



அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பயிலும் மாணவ, மாணவியர் எண்ணிக்கை 7,383 ஆகும். இங்கு கல்வி நல்கும் துறைகள் 33 ஆகும்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு 676.28 ஏக்கர் ஆகும். இது தவிர இப் பல்கலைக் கழகத்திற்காக கடலுயிரியல் துறைக்காக பரங்கிப்பேட்டையில் 76.95 ஏக்கர் இடமும் உள்ளது. மொத்தப் பரப்பளவு 753.23 ஏக்கர்.



இப் பல்கலைக் கழகத்தில் அஞ்சல் வழிபயிலும் மாணவர்கள் எண்ணிக்கை 6,900

* * *

பணியாற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கை 400 ஆகும்.

முத்தைய அரசர் அவர்கள் குமாரர் திரு எம். ஏ. எம். இராமசாமி அவர்கள், இச்சங்கத்தின் துணைத்தலைவராகப் பொறுப்பேற்றுத் தம் தந்தையாரையும் பாட்டனாரையும் பின்பற்றித் தமிழ் இசைக்கு அரும் பணியாற்றி வளர்த்து வருவது, தமிழகத்தின் நற்பேறாகும். இவ்வாறு, வழிவழியாகத்தொடர்ந்து கலைப்பணி புரிந்து வரும் இக் குடும்பத்தினரின் தொண்டுகளைத் தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் மாண்புமிகு எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களும், சட்ட மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் டாக்டர் ம. பொ. சி. அவர்களும், மதுரை மாநகரின் தமிழ் இசைச் சங்கத்தில் இவ் ஆண்டில் நடைபெற்ற விழாவில், பெரிதும் பாராட்டியிருப்பது பலரும் அறிந்த செய்தியாகும்.

இக்குடும்பத் தலைவர் அண்ணாமலை அரசர், பொதுநலக் கற்பகத் தருவாக நிறுவியுள்ள அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் பொன் விழாவினை, உலகம் முழுதும் உவகைமிகக் கொண்டாடுகின்ற இந் நன்னாளில், இக் குடும்பத்தினர், நீடுழி வாழ்க! மேலும் மேலும் வளர்க!! என வாழ்த்துவது நம் கடமையாகும்.

# மேலுரமிட்டு மகசூல் பெருக்குவீர்!
# மேலுரமிட மேன்மையான உரம்
# ஸ்பிக் யூரியா




* அழகிய வெண்முத்து வடிவங்கள்
* அதிகத் தழைச்சத்து 46.2%
* மிகக் குறைவான பையூரெட்-0.3% தான்
* ஆசியாவிலேயே மிகப் பெரிய, ஸ்பிக் தொழிற்சாலையில் தயாராகிறது.

CAS SPIC 4 TM 77

சிறப்பான யூரியா வேண்டுமா? **ஸ்பிக் யூரியா** என்று கேட்டுவாங்குங்கள்.



# பல்கலைக் கழக வேளாண்மைத் துறை




**பேராசிரியர்**
**அரு. லெட்சுமணன்**
**உழவியல்துறை**


இறைவன், பார்த்திபனுக்குப் பாசுபதம் அளித்த சிறப்புடையதாகக் கருதப்படும் திருவேட்கள கிராமச் சூழலில், கழனிகள் சூழ்ந்த காவேரி ஆற்றுப்படுகையில், அமைந்துள்ள அண்ணாமலைப் பல்கலைக் கழகம் சிறப்பானதொரு வேளாண் துறை அமைவதற்கு இயற்கையாகவே எல்லா வசதிகளும் நிறைவுறப் பெற்றிருக்கிறது.

ஆழ்ந்த சிந்தனையும், நீண்ட நோக்கும் நிறையப்பெற்ற வள்ளல் அண்ணாமலை அரசர் பல்கலைக்கழகம் நிறுவிய அன்றே அதன் சட்டத் தொகுப்பிலேயே வேளாண் துறையும் சிறப்புற அமைய வழி வகுத்திட்டார்கள். அன்னார் கனவு, 1951-ல் ஓரளவு உருப்பெற்று விஞ்ஞான இளநிலை (B.Sc.,) பட்டப் படிப்பில் இந்தத் துறை ஒரு பகுதியாகத் துவங்கியது. 1956-ல் முழுமை பெற்று வேளாண் துறைப் பட்டப் படிப்பு (B.Sc.(Ag.) & M.Sc.(Ag.)) கல்லூரியாக வளர்ச்சியுற்றது. வேளாண் துறை ஆரம்பித்த பெருமை தோட்டக்கலை நிபுணர் டாக்டர் எஸ். கிருஷ்ணமூர்த்தி என்ற பேராசிரியரையும், அதைக் கல்லூரியாக முழுமையாக்கிய சிறப்பு டாக்டர் கோ. அரங்கசாமி என்னும் நுண்ணியல் கலை வல்லுனரையும் சாரும்.

தற்போது காய்கறி இன வளர்ச்சி நிபுணர் டாக்டர் கோ. ந. சம்பந்தம் இதன் தலைவராக விருக்கிறார்.

**வசதி வாய்ப்புகள்**

இத்துறை ஆண்டொன்றுக்கு வேளாண்மை இளங்கலைப் பட்டப் படிப்பிற்கு நூறு மாணவர்களையும், முதுநிலை பட்டப் படிப்பில் உழவியல், நுண்ணுயிர்க் கலை, பயிர்ப் பாதுகாப்பு பட்டப் படிப்பிற்கு, பகுதிக்கு ஐந்து மாணவர்களையும் பயிற்றுவிக்கின்றது. வரும் ஆண்டில் மண்ணியல், பூச்சியியல் பயிர்நோய் ஆய்வுப் பிரிவிலும் முதுநிலைக் கல்வி அளிக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது. மேற்கண்ட எல்லாத் துறைகளிலும் டாக்டர் பட்டம் பெறும் அளவிற்கு ஆய்வுகள் செய்ய இங்கே வசதிகளும், வாய்ப்புகளும் இருக்கின்றன.

பல்கலைக் கழகத்தின் மேற்கு எல்லையில் பொறியியற் கல்லூரியும், கிழக்கு எல்லையில் வேளாண் துறையும், மையப் பகுதியில் மற்றக் கலைக் கல்லூரிகளும் அழகுற அமைந்திருக்கின்றன. கழனிகளின் நடுவில் மாணவர்கள் செய்முறைப் பயிற்சிகளில் சிறப்புடன் பங்கு பெறத் தக்க சூழ்நிலையில் கல்லூரி அமைந்திருக்கிறது. இதனைச்சார்ந்த ஆராய்ச்சிப் பண்ணையும் 200 ஏக்கர் நிலப்பரப்பு உள்ளது. எல்லாப் பருவங்களிலும் நெல், மற்றும் தோட்டப் பயிர் தானியங்கள், பருத்தி, கரும்புப் பயிர்களும் பயிரிடப்படுகின்றன. பழத்தோட்டம், பால் பண்ணை, கழிவு நீர் புல் பண்ணை யாவும் இதனுடன் இணைந்திருக்கின்றன.

இதுவரை 25 மாணவர்கள் டாக்டர் பட்டத்திற்கும், 160 மாணவர்கள் முதுநிலைப் பட்டத்திற்கும், 1500 மாணவர்கள் இளநிலைப் பட்டத்திற்கும் இங்கு சிறப்புடன் பயின்று பயனுற்றிருக்கிறார்கள். இங்கு பட்டம் பெற்ற மாணவச் செல்வங்கள் அரசாங்கத் துறைகளிலும், கல்லூரிகளிலும், வங்கிகளிலும், உரம், பூச்சி மருந்து விநியோகத் தனியார் நிறுவனங்களிலும் பெருஞ்சிறப்புடன் பணியாற்றி வருகின்றார்கள்.

இக்கல்லூரியில் உள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை மாணவர்களுக்குக் கல்வி பயிற்றுவிக்கும் அளவிற்கே போதியதாகவிருக்கிறது. இருப்பினும் அத்துடன் ஆராய்ச்சிப் பணிகளையும் மேற்கொண்டு தமிழக வேளாண்குடி மக்களுக்குப் பயனுள்ள வகையில் நல்ல பல ஆய்வுகளையும் நடத்தியிருக்கின்றார்கள்.

**அரிய ஆய்வுகள்**

பொன்னி என்று பெயரிடப்பட்ட புகழ்வாய்ந்த மசூரி நெல் இங்குதான் முதன்முதலாகப் பயிரிடப்பட்டது. இத்துறையால் வெளியிடப்பட்ட உப்புத்தாங்கி வளரும் குறுகிய கால அண்ணாமலை உவர் நெல், AV 1 கடலோரப் பகுதி உழவர்களுக்குச் சிறப்பான ஒரு பரிசாக அமைந்துள்ளது. இது கோவா, பாண்டிச்சேரி பகுதிகளில் விரும்பிப் பெருமளவில் பயிரிடப்பட்டு வருகின்றது. காய்கறி இனப் பெருக்கத்தில் இத்துறை நல்ல பல ஆய்வுகளை மேற்கொண்டு தமிழகத்திற்குச் சிறந்த பணி செய்திருக்கிறது. இலைப் பேனைத் தாங்கி வளரும் ''அண்ணாமலை'' என்ற உயர்ந்த கத்தரித் தரம் தமிழக மக்களால் மட்டுமன்றி ஏனைய மாநில மக்களாலும் விரும்பிப் பயிரிடப்பட்டு வருகிறது. இங்கு வெளியிடப்பட்ட அண்ணாமலை முழாம் பழம், வைட்டமின்கள் நிறைந்த புதியதொரு பழவகையாகும். 'பொன்விழா' டின்டா காய் வகையும் இங்கு வெளியிடப்பட்டிருக்கிறது.

பயறு விதைகளின் வகைகளுக்கு நுண்ணுயிர் ஊட்டமளிப்பதற்கு நெய்வேலி பழுப்பு நிலக்கரியைக் கொண்டு (Rhizobia) -'ரைசோபியா' நுண்ணுயிரைப் பெருக்கி ஏற்றுச் செல்லும் சிறந்ததொரு முறை இங்கு செயல்படுத்தப்பட்டது.

இவ்வகை ஆராய்ச்சிகளால் 300-க்கு மேற்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகள் இந்திய விஞ்ஞானப் பத்திரிகைகளிலும், வெளிநாட்டுப் பத்திரிகைகளிலும் சிறப்புடன் வெளியிடப்பட்டிருக்கின்றன.

இந்திய வேளாண் துறை ஆராய்ச்சிக் குழுவும், தமிழக அரசும் அளிக்கும் மானியங்களால் இக்கல்லூரி சிறப்புடன் செயல்பட்டு வருகிறது. கூடுதலான ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்ளவும், வேளாண் பெருமக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு விரிவுப்பணி ஆற்றிடவும், திட்டங்கள் தீட்டப்பெற்று, அரசாங்க ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன.

வரும் ஆண்டுகளில் தமிழகத்திற்கும் குறிப்பாக வேளாண் துறை மக்களுக்கும் சிறப்பான பணி ஆற்றும் வாய்ப்பினை எதிர்நோக்கி இந்தத் துறை முனைப்புடன் காத்திருக்கிறது.

PHONE : 33688
GRAM : HOWRATRANS

Best compliments from:

# New Howrah Transport Co.

**97, ARMENIAN STREET,
MADRAS - 600 001.**

---

## PREMIER METALS AND ENGINEERING CORPORATION

## HOUSE OF ALUMINIUM

The largest and leading Stockist of ALUMINIUM SHEETS, COILS, CIRCLES, FOIL AND EXTRUSIONS Such as Rods, Angles, Flats, Tubings, Tees, Half-Round Mouldings, Show-Beadings,

**Channels, Squares, water Channels
and various other sections
for Architectural, Structural
Industrial and Transport uses.**

HEAD OFFICE :
86, Mint Street,
MADRAS - 600 001.

Phone : 37713 and 30226
Grams: CINNABAR

BRANCH OFFICE :
XXXVIII/87(A) T. D. Road,
Ernakulam,
COCHIN - 682 011.

Phone: 37012
Grams: CINNABAR

# வேதியியல் ஆராய்ச்சியில் வியத்தகு சாதனை

—டாக்டர் வி. பாலையா

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின்
முன்னாள் வேதியியல் பேராசிரியர் மற்றும்
முன்னாள் நாகார்ஜுனா பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர்

தென் இந்தியாவிலே வேதியியல் துறையில் தலைசிறந்து விளங்குவது அண்ணாமலைப் பல்கலைக் கழகம். இத்துறையினர் வெளியிட்டுள்ள பாடநூல்களைப் பின்பற்றி வரும் பாடத்திட்டங்களையும் ஏனைய பல்கலைக்கழகங்கள் ஏற்றுக் கொண்டிருப்பது இதற்குச் சான்றாகும்.

பிற பல்கலைக்கழகங்கள், பல கல்லூரிகள் இணைப்பாக உள்ளன. அண்ணாமலைப் பல்கலைக்கழகம் ஒவ்வொரு துறையிலும் ஒவ்வொரு கல்லூரியைக் கொண்ட உடனுறை பல்கலைக்கழகமாக இருக்கிறது. எனவே, அவ்வப்போது மிக விரைவாகக் கல்வித் துறையில் சீர்திருத்தங்கள் செய்வது இங்கு எளிதாக இருக்கிறது.

உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்களுக்கும், கல்லூரி ஆசிரியர்களுக்கும் வேதியியல் படிப்பில் பயிற்சி கொடுக்க 1967-இல் பல்கலைக்கழக மானியக் குழு, கோடைகாலக் கல்வி நிறுவனங்களை அமைக்க முன் வந்தது. இவ்வாறு அமைக்கப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலேயே மிகக் கூடுதலாக இருந்தது. இந்த நிறுவனங்களை இந்தியா முழுவதும் சுற்றிப் பார்த்து அமெரிக்க நிபுணர்கள் 1969-இல் அறிக்கை வெளியிட்டபோது, முதல் தரமானது என்று அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தை மட்டுமே குறிப்பிட்டார்கள். தமிழ்நாட்டிலும் கேரளத்திலும் உள்ள நூற்றுக் கணக்கான வேதியியல் ஆசிரியர்கள் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற வகுப்புக்களில் கலந்து கொண்டு மிகவும் பயன்பெற்றனர். இன்றும் அவர்கள் தங்கள் தொடர்பை நினைத்து மகிழ்ச்சியும் நன்றியும் தெரிவிக்கின்றனர்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் படித்து வேதியியல் பேராசிரியர்களாக இருப்பவர்களை இந்தியாவில் எங்கும் காணலாம். அமெரிக்காவில் சிலர் உயர்ந்த நிலையில் உள்ளனர்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் ஆய்வுக்கூடங்களில் பயிற்சி பெற்ற ஏராளமான பேர் நம் நாட்டிலுள்ள இரசாயன தொழிற்சாலையிலும், தேசிய ஆய்வுக் கூடங்களிலும், அணு ஆராய்ச்சி நிறுவனங்களிலும் நுணுக்கமான பதவிகளில் அமர்ந்து ஈடும் இணையுமில்லாத பணியைச் செய்துகொண்டு வருகின்றனர். டிராம்பேயிலுள்ள அணு ஆராய்ச்சி கேந்திரத்தில் பயிற்சிபெற முதல் முறையாக அறிவியல் மற்றும் பொறியியல் பட்டதாரிகளைத் தேர்ந்தெடுக்க நடத்தப்பட்ட போட்டியில் அண்ணாமலைப் பல்கலைக் கழக எம்.எஸ்சி. வேதியியல் பட்டதாரிகள்தான் இந்தியாவிலேயே மிகக் கூடுதலான மதிப்பு எண்களைப் பெற்றனர்.

வேதியியல் ஆராய்ச்சியில் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் ஆற்றியுள்ள சாதனைகள் இந்தியாவெங்கும் மட்டுமின்றி வெளிநாடுகளிலும் பாராட்டப் பெறுகின்றன. குட்டநோய், காசநோய் ஆகியவற்றை நீக்க உதவும் சில வேதியியல் பொருள்கள் இங்குக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. எலெக்ட்ரானிக் துறையில் இயங்கும் சில வேதியியல் பொருள்களுக்கு விளக்கங்கள் இங்குதான் கொடுக்கப்பெற்றன.

கடந்த 25 ஆண்டுகளில் 50 பேர் வேதியியல் துறையில் டாக்டர் பட்டம் பெற்றிருக்கிறார்கள். உலகெங்கும் உள்ள ஆராய்ச்சி ஏடுகள், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் 200க்கு மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் எழுதிப் பாராட்டப்பெற்றிருக்கின்றன. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் புதிதாக உருவாக்கப்பெற்ற 100 கலப்புப் பொருள்கள்பற்றிய வண்ணப் படங்களும் விளக்கங்களும் அமெரிக்காவில் உள்ள சாடுட்லர் ஆராய்ச்சிக் கூடங்களில் அச்சிட்டு உலகெங்குமுள்ள அறிவியல் அறிஞர்களுக்கு வழங்கி இருக்கிறார்கள். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் வேதியியல் ஆராய்ச்சிக் கட்டுரைகளின் மறுபடிகள் வேண்டி உலகெங்குமிருந்து ஆயிரக் கணக்கான வேண்டுகோள்கள் வந்துள்ளன.

மேலும், இங்கு கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் வேதியியல் முடிவுகளைப் பற்றி உலகெங்கும் வெளியிடப்பெற்ற நூல்கள் சஞ்சிகைகளில் மேற்கோள் காட்டப்பெற்றிருப்பதை எண்ண இயலாது. அந்த அளவிற்கு இந்தப் பல்கலைக்கழக வேதியியல் துறை ஒப்பற்ற பணி புரிந்து இருக்கிறது.



பேராசிரியர் சாமுவேல்
அரங்கநாதன்
1929—1935



மகாகனம் வி.எஸ். சீனிவாச
சாஸ்திரியார் 1929
மீண்டும்— 1935—1940



சர் கே.வி. ரெட்டி நாயுடு
1940—1942

# அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின்



டாக்டர் எஸ்.ஜி. மணவாள
இராமாநுஜம்
1948—1951



பேராசிரியர்
எம். இரத்தினசாமி
1942—1948



சர் ஆர்.கே. சண்முகம்
செட்டியார் 1951—1952

# முன்னாள் துணை வேந்தர்கள்



சர் சி. பி. இராமசாமி அய்யர்
1952—1955
மீண்டும் 1962—1966



திரு தி.மு. நாராயணசாமி
பிள்ளை 1955—1961



நீதிபதி திரு.வி. சுப்பிரமணியம்
1961—1962



நீதிபதி திரு.பி. சந்திரா
ரெட்டி 1966—1968

டாக்டர்
எஸ்.பி.ஆதிநாராயண்
1969—1975





டாக்டர் எஸ். சந்திரசேகர்
1975—1978



இப்பல்கலைக்கழகத்தின் குறிக்கோள்களுக்கு இணங்க ஒரு மாபெரும் நூலகம் அண்ணாமலை நகரில் இயங்கி வருகிறது.

1920-ஆம் ஆண்டில் மீனாட்சி கல்லூரி ஏற்பட்டபோது 200 நூல்களுடன் தொடங்கப் பெற்ற இந்நூலகம் 1929-இல் 17,000 தொகுதிகள் அடங்கிய அண்ணமலைப் பல்கலைக்கழக நூலகமாகப் பெயர் பெற்றது.

இந்தப் பொன்விழா ஆண்டில் இந்நூலகம் மூன்று இலட்சம் நூல்களுடன் திகழ்கிறது. ஆண்டுதோறும் ஐந்து இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பத்தாயிரம் நூல்கள் புதிதாகச் சேர்க்கப் பெறுகின்றன. ஓராயிரம் சஞ்சிகைகளை இந்நூலகம் வரவழைக்கிறது.

நுண்மாண் நுழைபுலம் நிறைந்த சர் சி. பி. இராமசாமி ஐயர் பெயரால் அமைந்துள்ள நூலகக் கட்டடம், கட்டடக் கலைக்கு எடுத்துக்காட்டாகவும், அனைத்து வசதிகளையும் தன்னகத்தே கொண்டதாகவும் அழகிய மாளிகையாக அமைந்திருக்கிறது. 36,000 சதுர அடி பரப்புள்ள இடவசதிகளும், காண்பவர் யாவரையும் ஈர்க்கக்கூடிய அக — புற அமைப்புக்களையும் உடையது.

நூல்களின் இருப்பிடம், மேற்கோள் நூலகப் பகுதி, சஞ்சிகைப் பகுதி, நூல்களைக் கட்டிடமாகக் கட்டும் பிரிவு, படம் எடுக்கும் பகுதி, ஆராய்ச்சி மாணவர்க்கு ஒதுக்கப்பெற்ற பகுதி ஆகிய ஒவ்வொன்றும் குறிப்பிடத்தக்க தனிச் சிறப்புக்களுடன் விளங்குகின்றன.

நுண்கலை, அறிவியல், இந்திய இயல் ஆகிய துறைகளிலும், வேறு எங்கும் கிடைக்காத நூல்கள் இங்கே உள்ளதால் இவற்றைப் படித்துப் பெரும்பயனடையலாம். இந்நூலகத்தில் ஆயிரக்கணக்கான பழம் சுவடிகளும் ஏட்டுப் பிரதிகளும், இப்போது அச்சில் இல்லாத கலைத்துறை நூல்கள் பலவும், இசைத் தட்டுகளும் ஏராளமாக உள்ளன. திரைப்படப் பகுதியும், மைக்ரோ பிலிம் செய்யப் பெற்ற அறிவுத்துறைப் பகுதியும் இங்கு உள்ளன.

அண்ணாமலை அரசர், சர் சி. பி. இராமசாமி ஐயர், திரு. வி. கே. வேணுகோபாலச் செட்டியார் ஆகியோர் தம் வாழ்நாள் முழுவதும் சேகரித்த சிறந்த நூல்களை இந்த நூலகத்திற்கு வழங்கியிருக்கிறார்கள்.

இந்திய அரசாங்கத்தாரும், மாநில அரசாங்கத்தாரும், பிரிட்டிஷ் கவுன்சிலும், அமெரிக்க அரசின் தகவல் துறையினரும் தங்கள் வெளியீடுகளை இந்நூலகத்திற்கு அனுப்பி வருகிறார்கள்.

அவ்வப்போது அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சிப் பட்டம் பெற்றவர்களின் பெயர்களும் கட்டுரைகளும் இந்நூலகத்தில் இடம்பெறுகின்றன. அந்த நூற்பட்டியல் அச்சிட்டு வெளியிடப் பெறுகிறது.

இந்த ஆண்டு முதல் நூலகக் கல்வித் துறையில் பட்டப் படிப்பு தொடங்கப்பெற்றிருக்கிறது.



# தமிழும் மொழியியலும்

**டாக்டர் ச. அகத்தியலிங்கம்**
**[இந்திய மொழிகள் புலத்தலைவர்.]**

இன்று பொன்விழாக் கோலம் பூண்டு நிற்கிறது அண்ணாமலைப் பல்கலைக் கழகம். 50 ஆண்டுக் காலக் கட்ட வளர்ச்சியில் எத்தனையோ பெருமைகளைத் தேடிக்கொண்டது இப்பல்கலைக் கழகம். தமிழுக்கெனப் பல்வேறு துறைகளைக் கண்டது இப் பல்கலைக் கழகம். தமிழ் இலக்கியமாகட்டும், தமிழ் இலக்கணமாகட்டும், தமிழ் மொழியியலாகட்டும் இல்லை தமிழ் இசையாகட்டும் இவற்றுக்கெல்லாம் தனித் தனித் துறைகளைக் கண்டு, தமிழ் மணம் பரப்பி வருவது இப்பல்கலைக் கழகம். 1929-ல் தோன்றிய இப்பல்கலைக்கழகத்தைப் பற்றிச் செட்டிநாட்டு வள்ளல் அண்ணாமலைப் பேரரசர் அவர்கள் பேசிய சில செய்திகள் என் நெஞ்சிலிருந்து நீங்காது நிலைபெற்றிருக்கக் காணுகிறேன்.

"This University owes its existence to two factors which I shall, with your leave, detail here to-day. First and Foremost is the hearty andenthusiastic response that the Government of Madras has been giving to endeavours of private philanthrophy, and secondly, the desire of the 18 millions of Tamil speaking people in this presidency and abroad also to nurture a centre of learning, to give to the world the value of Tamil learning, literature and culture."

எனக் கூறிச் சென்றார். தமிழ் மக்களின் ஆசாபாசங்களையும் அபிலாசைகளையும் பிரதிபலித்து நிற்பதே இப்பல்கலைககழகம். அண்ணாமலையரசரின் சிந்தையில் முகிழ்ந்த எண்ணங்களின் திருஉருவாக உள்ளது இப் பல்கலைக்கழகம். கடந்த 50 ஆண்டுகளில் இப் பல்கலைக் கழகம் தமிழுக்கு ஆற்றிய பணிகள் பல; தமிழ் அன்னைக்குச் சூட்டிய ஆரங்கள் பலப்பல. இப் பல்கலைக் கழகத்தில்தான் முதன் முதலில் தமிழ் எம்.ஏ. வகுப்பு ஆரம்பமாயிற்றென்பது இன்று வரலாறாகிவிட்ட நிலை. இப் பல்கலைக் கழகந்தான் முதன் முதலில் தமிழில் டாக்டர்பட்டத்தை அளித்த பெருமை பெற்றது. வாழையடி வாழையாகச் சிறந்த பல தமிழ்ப் பேராசிரியர்களைக் கண்ட பெருமை கொண்டதும் இப்பல்கலைக் கழகந்தான்.

திருநெல்வேலிச் சீமை தந்த கா.சு. பிள்ளை, யாழ்நூலை ஆக்கிய ஈழம் தந்த சுவாமி விபுலானந்த அடிகள், தொல்காப்பிய செல்வர் நாவலர் சோமசுந்தர பாரதியார், சொல்லின் செல்வர் ரா.பி. சேதுப்பிள்ளை, செட்டிநாடு தந்த பண்டிதமணி கதிரேசன் செட்டியார், செந்தமிழ்க் காவலர் சிதம்பரநாதன், பன்மொழிப் புலவர் தெ.பொ.மீ., முத்தமிழ்க் காவலர் லெ.ப.கரு. இராமநாதன் செட்டியார், இராமாயணச் செல்வர் கோ. சுப்பிரமணியப்பிள்ளை, அறிஞர் வ.சுப. மாணிக்கம், திருமுறைச் செல்வர் க. வெள்ளை வாரணனார் போன்ற இன்னோரன்ன பல பேராசிரியர்களைப் பெற்றெடுத்ததும் இப்பல்கலைக்கழகந்தான். மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே.சா.வும் இப்பல்கலைக் கழகத்தில் பணியாற்றினார் என்பது எனக்குத் தித்திக்கும் தேன் விருந்து.

நாட்டாரும் பண்டாரத்தாரும் சுப்பிரமணிய சாஸ்திரியும் வலம் வந்த பல்கலைக் கழகம் எங்கள் பல்கலைக்கழகம்.

இராகவையங்கார் குடிகொண்டது எங்கள் பல்கலைக்கழகம்.

தேவாரத் திருமுறையை வரலாறாக்கியது அண்ணாமலைப் பல்கலைக் கழகம். தமிழ் வரலாற்றை வரன்முறையாக முதன் முதலில் எழுதியது இப்பல்கலைக் கழகந்தான். தனியொரு வெளியீட்டுத் துறையை ஏற்படுத்தி அருந்தமிழ் நூல்கள் ஆக்கித் தந்த பெருமை இத்துறையைச் சாரும். எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்ற சித்தாந்தத்திற்கு வித்திட்டது எங்கள் பல்கலைக் கழகம்.

மொழியியலுக்கெனத் தனியொரு துறையை ஏற்படுத்தி

**ஆசிரியப் பயிற்சியில் முதுநிலைக் கல்வி வசதி**

**அடுத்த கல்வி ஆண்டிலிருந்து அஞ்சல வழிக் கல்வி மூலம் ஆசிரியப் பயிற்சியில் முதுநிலைக் கல்வி வசதி (Master's Degree in Education) அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தொடங்கப்படும். இத்தகவலை, அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு பி.எஸ். சோமசுந்தரம் அவர்கள் 15.11.79 அன்று நடைபெற்ற பல்கலைக் கழகத்தின் ஆட்சிக் குழுக் கூட்டத்தில் தெரிவித்தார்.**

மொழியாராய்ச்சி செய்த பெருமை இப்பல்கலைக்கழகத்திற்கு உண்டு. இன்று இத்துறை இந்திய நாட்டிலேயே சிறந்தஒரு துறையாகவிளங்கக்காண்கிறோம் திராவிட மொழியாராய்ச்சியும் குறிப்பாகத் தமிழ் மொழியின் ஆராய்ச்சியும் இத்துறையின் வேரும் விதையுமாகும். இத்துறை கண்ட நூல்கள் பல. ஆராய்ச்சி உரைகள் பலப்பல. பத்துப் பதினைந்து ஆண்டுக் காலப் பகுதியில் 75-க்கும் அதிகமான நூல்களை வெளியிட்டது. இத்துறை 40-க்கும் அதிகமான டாக்டர் பட்டங்களை உருவாக்கியுள்ளது. ஆயிரத்துக்கும் அதிகமான ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளியிட்டுள்ளது. தமிழ் மொழியின் அமைப்பு, அதன் ஆக்கம் சொல்லியல், தொடரியல், பொருளியல், ஒலியியல், ஒலியணியியல் போன்றவற்றை யெல்லாம் ஆராய்ந்து வெளியிட்டுள்ளது.

சங்ககால மொழியை ஆராய்ந்து ஏழு பகுதி வரிசை நூல்களாக வெளியிடுகிறது இத் துறை. இடைக்காலத் தமிழையும் தற்காலத் தமிழையும் ஆராய்ந்து பல்வேறு பகுதிகளாக வெளியிட எண்ணியுள்ளது. இது நடத்திய 25-க்கும் அதிகமான கருத்தரங்குகளில் தொல்காப்பியத்திற்கெனத் தனிக் கருத்தரங்குகளை நடத்தி, தொல்காப்பிய மொழியியல் என்ற பெயரால் தொல்காப்பியத்தை நாடறியச் செய்த பெருமை எங்களுக்கு உண்டு. அதோடு சார்ந்த மலையாளம், கன்னடம், தெலுங்கு போன்ற மொழிகள் பற்றிய நூல்கள் பலவற்றையும் வெளியிட்டுள்ளது.

சென்னையில் மட்டுமின்றி சிக்காகோவிலும் லண்டனிலும் இதன் பெருமை பரவ வேண்டும் என்ற எண்ணத்தில்தான் ஆங்கிலத்திலும் இதுபற்றி எழுதியும் பேசியும் வருகிறோம்.

அன்னைத் தமிழ் மட்டுமன்றி காட்டிலும் மேட்டிலும் கரந்துறைகின்ற பழங்குடி மக்கள் மொழிகளையும் ஆராய்ந்து 14 வரிசை நூல்களாக வெளியிட்ட பெருமை எங்களுக்கு உண்டு. இன்னும் பழங்குடிகள் பற்றிய 10 நூல்கள் வெளியிட உள்ளன என்பதையும் பெருமையோடு சொல்ல ஆசைப்படுகிறேன். தென்னிந்திய பழங்குடி மக்களைப் பற்றிய நூல் வரிசை (The Tribes and Tribal Languages of Southern India) என்ற பெயரில் ஆங்கிலத்திலும் தமிழிலும் வர உள்ளது.

மேலும், அன்றுமுதல் இன்று வரை தமிழ் மொழியில் காணப்படும் சொற்களை யெல்லாம் சேகரித்து, அவற்றின் ஆக்கம், அவற்றின் பொருள், எந்த இலக்கியத்தில் முதன் முதலில் எவ்வாறு வந்தது என்பன போன்ற செய்திகளையெல்லாம் திரட்டி, பெரியதொரு வரலாற்று அகராதியை உருவாக்க முனைந்துள்ளது. இத்துறை. The New English English Oxford Dictionary தொகுதிகளில் இருப்பதைப் போலப் பத்துப் பன்னிரண்டு தொகுதிகளில் உருவாக்க வேண்டும் என்பதே எங்கள் ஆசை. இது மட்டும் உருவாகிவிட்டால் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தைக் கண்ட அண்ணாமலைப் பேரரசருக்கும், அவர்தம் மைந்தர் எங்கள் இணை வேந்தர் முத்தையவேள் அவர்களுக்கும் எங்கள் துணைவேந்தர் சோமசுந்தரனார் அவர்களுக்கும் மொழியியல் துறை அளிக்கும் மிகப் பெரும் காணிக்கையாக அமையும்.

அன்னைத் தமிழுக்குச் செய்த அரும்பெரும் அணிகலமாக நிற்கும்.


THERE IS A METHOD OF MAKING
YOUR MONEY GROW
AND WE HAVE QUITE A FEW METHODS

**Given time, some serious thought and a little bit of thrift, your money can be made to grow.... finding different ways to do so, is our business strictly speaking.**

**It is no secret either. Everyone of our ideas is down to earth. Give us some time, we will show you our wealth of ideas.... Vidya Yojana Deposit Scheme, Kalpa Vriksha, Kshemanidhi, Fixed Deposits, to name a few. Pick the one you like, give it a little time and see how your money grows with us, even without your knowledge.**

**Corporation Bank Limited**

—Where Friendliness is a Tradition

*Regd. Office* : UDUPI
*Admn. Office* : MANGALORE

N. N. PAI
Chairman

# கொடி நாள்



எம். ஜி. இராமச்சந்திரன்
முதலமைச்சர்

புனித ஜார்ஜ் கோட்டை
சென்னை-600 009.

நாள் : 9—11—79

நாடு முழுவதும் டிசம்பர் 7-ஆம் நாள் கொடி நாள் கொண்டாடுவதறிந்து மனமகிழ்கிறேன்.

நாட்டின் பாதுகாப்பிற்காக படைவீரர்கள் ஆற்றிவரும் அரும்பணி போற்றுதற்குரியதாகும். தாயகம் காப்பதில் தன்னலம் பாராமல், குன்றாத ஆர்வத்துடன் அயராது உழைக்கும் படை வீரர்களை ''இக்கொடி நாள்'' நன்னாளில் உளமாரப் பாராட்டுகிறேன்.

(ஒ-ம்) எம். ஜி. இராமச்சந்திரன்

முதல் உலகப் போருக்குப் பின்னர் ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் திங்கள் 11-ஆம் நாள் ''போர் நிறுத்த நாள்'' ஆகக் கொண்டாடப்பட்டு வந்தது. பின்னர் அதுவே ''பாப்பி நாள்'' ஆகக் கொண்டாடப் பட்டது. இந்நாட்களில் முதல் உலகப் போரில் உயிரிழந்தோர் நினைவாகக் கலைப் பொருட்கள் மற்றும் விளையாட்டுப் பொருட்கள் செய்யப்பெற்று விற்கப்பட்டன. அதன் மூலம் வசூலான தொகை முழுவதும் போர் வீரர்கள் மற்றும் அவர் தம் குடும்ப நலத்திற்கென செலவு செய்யப்பட்டது. இந்தியா சுதந்திரம் அடைந்ததன் பின் ஒவ்வொரு வருடமும் டிசம்பர் திங்கள் 7-ஆம் நாள் கொடி நாளாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இதன் மூலம் இந்திய மக்கள் போரில் வீரச் செயல்கள் புரியும் போர் வீரர்களைக் கவுரவிக்கவும், அவர்களுக்கு நாம் வழங்கும் ஒத்துழைப்பினை உறுதிப்படுத்தவும் வாய்ப்பு ஏற்படுகிறது. எனவே, கொடி நாள் என்பது தொன்று தொட்டே நமது தேசிய வாழ்வுடன் பின்னிப் பிணைந்த ஒரு விழாவாகும் என்பது வெள்ளிடைமலை.

கொடி நாளன்று பொதுமக்களிடமிருந்து நன்கொடைகள் பெருமளவில் எதிர்பார்க்கப்படுகிறது. மக்கள் பெருமளவில் வாரி வழங்கிய போதிலும் படைவீரர் மற்றும் அவர்தம் குடும்ப நல்வாழ்வுக்கு ஆற்ற வேண்டிய அரும்பெரும் பணிகளுக்குப் பற்றாக்குறையாகவே உள்ளது. தமிழ்நாடும் மற்ற மாநிலங்களைப் போன்று இக்கொடி நாளில் நிதி வசூலித்து வருகிறது. இக் கொடி நாளில் வசூலாகும் தொகை மத்திய, மாநில அரசுகள் பகிர்ந்து, படைவீரர் குடும்ப நலப் பணிகளுக்குப் பயன்படுத்தப்படு

## நிதி வழங்குவீர்!

எம். மாதவன் நம்பியார்,
ஐ.ஏ.எஸ்.,
முன்னாள் படைவீரர்
நல்வாழ்வு இயக்குநர்.

கிறது. மத்திய அரசின் பங்கினைப் பாதுகாப்பு அமைச்சரின் தலைமையிலான மேலாண்மைக் குழு ஒன்று நிர்வகிக்கின்றது. நமது மாநில அரசின் பங்கு தமிழ்நாடு முன்னாள் படை வீரர் நல நிதியுடன் இணைக்கப்பட்டு ஆக்கப் பணிகளில் செலவு செய்யப் பெற்று வருகிறது.




**அமைப்பு :**

தமிழ்நாட்டில் நிலையான கொடி நாள் விழா அமைப்புக் குழு ஒன்று மாநில ஆளுநரின் தலைமையில் இயங்கி வருகிறது. இது கொடி நாள் விழா கொண்டாட வேண்டிய வழி முறைகள் மற்றும் வசூல் செய்ய வேண்டிய தொகை முதலியவற்றை நிர்ணயிக்கிறது. . மாவட்ட அளவில், மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையின் கீழ் செயல்பட்டு வரும் கொடி நாள் விழா அமைப்புக் குழு மாநிலக் குழுவின் செயற் பிரிவாகச் செயல்படுகிறது.

**கொடி நாள் நிதியிலிருந்து வழங்கப்படும் நிதியுதவிகள்**

கொடி நாள் நிதியின் தமிழ்நாட்டின் பங்கு தமிழ்நாடு முன்னாள் இராணுவத்தினர் நல நிதியுடன் இணைக்கப்பட்டு முன்னாள் படை வீரர்களுக்கு அவர் தம் நலன் பேணும் பொருட்டு தக்கவகையில் மானியங்களாக வழங்குதற்கென முன்னாள் இராணுவத்தினர் நல இயக்ககத்தின் மேலாண்மையில் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வண்ணம் இந் நிதியிலிருந்து 1978-79-ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட மானியங்கள் சுமார் 8 இலட்சம் ரூபாயாகும்.

மேலும், இந்நிதியிலிருந்து முன்னாள் படைவீரர் மற்றும் அவர் தம் குடும்பத்தினரின் புனர் வாழ்விற்கென சிறு திட்டங்கள் பலவும் செயலாக்கப்பட்டு வருகிறது. அவற்றுள் சில கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

1. போரில் உயிரிழந்தோர்/ஓய்வு பெற்றோர்/விலக்கப்பட்டோர் மற்றும் பணியிலுள்ள இராணுவ வீரர் குடும்பத்தினைச் சார்ந்த பெண்களுக்கென முழு நேர தையற் பயிற்சி முகாம்கள் மாவட்டம்தோறும் அமைக்கப் பெற்று செயல்பட்டு வருகின்றன. அவ்வாறு பயிற்சி பெறுவோருக்கு மாதம் ரூ. 15 பெறுமான மூலப் பொருட்கள் வழங்குவதுடன் பயிற்சி உதவிப் பணமாக மாதம் ஒன்றுக்கு ரூ. 20-ம் வழங்கப்பட்டு வருகிறது.

2. தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்து பயிற்சிக்கென தொழில் நுட்பப் பள்ளிகள் செங்கல்பட்டு, தஞ்சாவூர் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் நிறுவப் பெற்று இயங்கி வருகின்றன.

3. போரில் ஊனமுற்றோர்/உயிரிழந்தோர் கைம்பெண்கள் மற்றும் வறுமையிலுள்ள முன்னாள் படைவீரர் மற்றும் முன்னாள் படைவீரர் கைம்பெண்கள் ஆகியோர் நல் வாழ்விற்கென இராணுவத்தினர் இல்லங்கள் மாநிலத்தில் ஆங்காங்கு கட்டப்பட்டு வருகின்றன. தற்பொழுது வட ஆர்க்காடு, சேலம், கோயம்புத்தூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் இத்தகைய இராணுவத்தினர் இல்லங்கள் உள்ளன.

4. ஊனமுற்ற முன்னாள் படைவீரர், விதவைகள் ஆகியோர் நலனை முன்னிட்டு அவர் தம் அன்றாட வருவாய்க்கு வியாபாரம் செய்வதற்கென சிறு பெட்டிக் கடைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

5. மாவட்டந்தோறும் தலைமை மருத்துவ மனைகளில் முன்னாள் படைவீரர் மற்றும் அவரைச் சார்ந்தோர்க்கு மட்டும் பயன்படும் வகையில் 12 படுக்கைகள் கொண்ட தனி அறைகள் கட்டப்பட்டுள்ளன.

6. ஆதரவற்ற ஓய்வூதியம் பெறும் வயது முதிர்ந்த முன்னாள் படைவீரர் நலன் கருதி வட ஆர்க்காடு மாவட்டத்தில் முதியோர் இல்லம் ஒன்று கட்டப்பட்டுள்ளது. இவ்வில்லத்தில் அத்தகைய 58 பேர்கள் தங்குவதற்கான வசதிகள் உள்ளன.

7. வறுமையிலுள்ள ஊனமடைந்த முன்னாள் படைவீரர்/கைம்பெண்கள் அன்றாட வாழ்க்கைச் செலவிற்கென அவர் தம் தகுதிக்கேற்ப மொத்த/மாதாந்திர மானியங்கள் வழங்கப்பட்டு வருகிறது.

8. முன்னாள் படைவீரர்/விதவைகளின் பெண் பிள்ளைகளுக்கு அவர்தம் திருமணச் செலவிற்கென திருமண மானியமாக நபர் ஒன்றுக்கு ரூ. 350 வீதம் வழங்கப்பட்டு வருகிறது.

9. காச நோய் மற்றும் தொழு நோய் மருத்துவமனைகளில் உள் நோயாளியாகச் சிகிச்சை பெறும் முன்னாள் இராணுவத்தினருக்கு சிகிச்சை காலத்தில் மருத்துவ கைச் செலவுப் பணம் வழங்கப்பட்டு வருகிறது.

10. மிகவும் வறுமை நிலையிலுள்ளோர் துயரினை உடனடி துடைத்தற் பொருட்டு உடனடி நிவாரண நிதி வழங்கப்பட்டு வருகிறது.

11. முன்னாள் படைவீரர் இறந்தால் அவரது இறுதிச் சடங்கிற்கென நபர் ஒன்றுக்கு ரூ. 100 வீதம் வழங்கப்பட்டு வருகிறது.

12. வெள்ளம் மற்றும் தீயால் பாதிக்கப்பட்ட முன்னாள் படைவீரர்களுக்கு மானியங்கள் வழங்கப்படுகின்றன.

13. பள்ளியில் படிக்கும் சிறார்களுக்குக் கல்வி உபகாரச் சம்பளமாக ரூ. 25-லிருந்து ரூ. 100 வரை வழங்கப்பட்டு வருகிறது.

14. டேட்டாமேட்டிக் கழகங்களில் பயிற்சி பெறும் முன்னாள் படைவீரர்களுக்கு மானியங்கள் வழங்கப்படுகின்றன.

மேற்குறிப்பிட்டுள்ளன போன்ற அறப் பணிகளைச் செவ்வனே நாளும் செய்வதற்கு நிதி வசதியின் அவசியம் சொல்லாமலே விளங்கும். எனவே, கருணை உள்ளம் கொண்ட தமிழக மக்கள் கொடி நாள் நிதிக்குத் தாராளமாக வாரி வழங்குவதன் மூலம், தமிழ்நாட்டிலுள்ள முன்னாள் படைவீரர் புனரமைப்பு என்னும் சீரிய பணியில் தமது பங்கினை இனிது ஏற்பர் என்பது திண்ணம்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

*With the best compliments from*

# "RANITEX"

**(UNIT OF MADURA SOUTH INDIA CORPORATION (P) LTD.,)**

Rajah Annamalai Memorial Institute,
603, Anna Salai, MADRAS 600 006.
(Near Anna Flyover)

FULLY AIR CONDITIONED
RETAIL TEXTILE SHOW ROOM
DEALERS IN SPECIALISED ITEMS OF

**"MADURA FABRICS"**

and other

**"LEADING MILLS"**

SUITINGS — SHIRTINGS — SAREES

and
Other Materials.

OUR MOTTO:

PROMPT AND COURTEOUS SERVICE
TO CUSTOMER'S FULLEST SATISFACTION

Grams: "MUSIC"    Phone: 89652

பதிவு எண். M. 8676

